செல்வம்சேர்கரன்
சேனைடி
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்

# யுகம்

மாத இதழ்

யுகம் : ஒன்று ✿ ஆடி 2004 ✿ பக்கங்கள் : 16 ✿ விலை : ரூ. 15.00

# சமாதானம் நிலைக்குமா?



**புதிய அரசாங்கம் பதவியேற்ற பின்னர் எல்லோர் முகங்களிலும் எழுத்து நின்ற கேள்விகள் இவைதான். போர் நிறுத்த உடன்பாடு தாக்குப் பிடிக்குமா? சமாதானம் நிலைக்குமா? தமிழ் மக்களுக்கு சுபிட்சமான வாழ்வு கிடைக்குமா? தமிழ் மக்களுக்கு இடைக்கால அரசு கிட்டுமா? போன்றவை அர்த்தங்கள் பொதிந்த கேள்விகளாக மட்டுமே உள்ளன.**

**புதிய அரசாங்கம் பதவியேற்ற பின்னர் போர் நிறுத்த உடன்பாட்டை தொடர்ந்தும் கடைப்பிடிப்பதில் பெரும் குழப்பங்களும், சிக்கல் நிலையும் உருவாகியுள்ளதாகவும், இந்த நிலைமை போர் நிறுத்த உடன்பாட்டுக்கே பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதாகவும் விடுதலைப் புலிகள் கண்காணிப்புக் குழுவிடம் தெரிவித்துள்ளார்கள்.**

கிழக்கில் ஏற்பட்டு வரும் குழப்பங்கள், கொலைகள் இவற்றின் பின்னால் ஸ்ரீலங்கா இராணுவம் உள்ளது. புலிகளிடமிருந்து பிரிந்து சென்ற கருணா இராணுவத்தின் அரவணைப்பில் உள்ளார் என்று ஆரம்பம் முதல் புலிகள் கூறிவருகின்றனர். இதனை நிரூபிக்கும் வகையில் கருணாவுடன் சென்ற பெண்புலிகள் சிலர் மீண்டும் புலிகள் இயக்கத்துடன் இணைந்துள்ளார்கள். அவர்கள் தெரிவித்த கருத்துகள் கருணாவுக்கும் இராணுவத்துக்கும் இடையிலான தொடர்புகள் பகிரங்கமாகியுள்ளன.

மேலும் கருணாவின் பெயரைப் பயன்படுத்திக் கொண்டும், அவரது பெயரிலும் இராணுவப் புலனாய்வுப் பிரிவே கிழக்கில் குழப்பங்களைச் செய்கிறது என்பது கூட தற்போது வெட்ட வெளிச்சமாகியுள்ளது. ஏலவே புலிகள் கருணாவுக்கும் தமக்கும் இடையிலான பிரச்சனை உள்வீட்டுப் பிரச்சனை. இதில் வேறு எவரும் தலையிட வேண்டாமென சிங்கள இரு பேரினவாதக் கட்சிகளுக்கும் அறிவித்திருந்தார்கள். அதையும் மீறி ஐ.தே.க., இராணுவப் பிரிவு உள்ளிட்டோர் கருணாவுடன் தொடர்பு கொண்டிருப்பது தற்போது தெரியவந்துள்ளது.

உண்மையில் சமாதானச் செயன்முறைகளை தொடர வேண்டுமென்ற அக்கறையிலிருந்தால் புலிகள் தரப்பில் ஏற்பட்ட பிரச்சனைகளில் சிங்களத் தரப்பு மூக்கை நுழைத்திருக்காது. சமாதானச் செயல்முறைக்கான நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்பட்டு அதனை நடைமுறைப்படுத்துவதில் தான் அக்கறையாக இருந்திருப்பார்கள். சிங்கள மக்களிடம் சமாதானத்தின் தேவையை வலியுறுத்தி அதன் அரசியலை தெளிவுபடுத்தி ஆரோக்கியமான சூழலை உருவாக்க முயற்சி செய்திருப்பார்கள். ஆனால் நடைபெறுவது என்ன..?"

இன்றுவரை போரின் கொடுமை புரியாமல் சிங்கள ஆளும் தரப்பு செயற்படுவதும், அவர்கள் 'சமாதானம்' 'போர் நிறுத்தம்' உள்ளிட்ட வெற்று கோஷங்களை அரசியல் சுயலாபத்துக்காக கபடத்தனமாக பயன்படுத்துவதையும் இதுகாறுமான வரலாறு நிரூபித்துள்ளது.

இந்த நாட்டில் பெரும்பான்மை சிங்களவர்கள் போரின் கொடுமையை முழுமையாக அனுபவித்திருக்க மாட்டார்கள். ஆகையால் அவர்களுக்கு சமாதானத்தின் பெறுமதி என்னவென்று உணரவோ புரியாமல் இருப்பதோ ஒன்றும் குற்றமல்ல. ஆனால் சிங்கள ஆளும் தரப்பு அந்த பெரும்பான்மை உணர்வு நிலை நின்று செயற்படும் போது, ஒரு சாரார் மக்களின் உணர்வுகளை அபிலாசைகளை புரிந்து கொள்ளத் தவறுகிறார்கள். ஆம் வட கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்களின் எதிர்காலம் கேள்விக் குறியாக இருப்பதை முழு மனதுடன் புரிந்து கொள்வதாகத் தெரியவில்லை.

இன்னும் எத்தனை காலம் புரியாமல் செயற்படப் போகிறார்கள்? 'சமாதானம்' 'தீர்வு முயற்சிகள்' இலங்கையின் ஒருமைப்பாட்டுக்கும் மக்களின் ஒருங்கிணைவுக்கும் எத்துனை அவசியமானது அவசரமானது என்பதை தேசியக் கட்சிகள் என்ற போர்வையில் இயங்கும் பேரினவாதக் கட்சிகளுக்கு உணர்த்தியுள்ளது?

இலங்கைத் தேசியம், ஜனநாயக நீரோட்டம் என்பன எல்லாம் பெரும்பான்மை சிங்கள பௌத்தர்களின் இருப்புக்கும் அடையாள அரசியலின் நிலை பேறாக்கத்துக்கும் தான் உதவியுள்ளன. இலங்கை பல்லின, பல்மத, பல மொழி கொண்ட மக்களின் வாழ்விடம் என்ற உணர்வு தேசிய வாதமாக மலர்ச்சி பெற்றிருப்பின் பன்முக கலாசாரம் சமூம ஜனநாயகம் சமூக சமத்துவம் அரசியல் ஜனநாயகத்திலும் வலுப் பெற்றிருக்கும்.

ஆனால், இன்றைய யதார்த்தம் ஒரு சாராரின் எதிர்காலம் அவர்களுக்கான உரிமை, ஜனநாயகம் பங்கேற்பு என்னவென்று வெறும் பேச்சுகள் மட்டுமே உள்ளன. ஒரு கலாசார மாற்றம், சமாதானம் வேண்டி நிற்கும் மக்களின் வாழ்க்கைக்கான உத்தரவாதம் இன்றும் வெளிப்படவில்லை. சிங்கள ஆளும் தரப்பு தொடர்ந்து ஆதிக்க மனநிலையிலிருந்து செயற்படவே விரும்புகிறது. சமாதானம் போர் நிறுத்தம் போன்ற நடைமுறைகளில் கயமைத்தனத்துடன் ஈடுபடும் பொழுது எப்பவும் 'மீண்டும் போர்' 'அச்சுறுத்தலான சூழல்' தான் மிஞ்சும். அதுவே 'வரலாறு" என்றாகும் பொழுது புதிய வரலாறு குறித்த மாற்றுப் பார்வைகளும் தவிர்க்க முடியாமல் ஆகும். இலங்கை யதார்த்தம் எதை வேண்டியுள்ளது? நாம் எதை நோக்கி நகரப் போகிறோம். இவை ."யுகம்" எழுப்புகிற முக்கியமான அவசியமான கேள்விகள்.

## தேய்ந்து கட்டெறும்பாகும் கதை

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிலிருந்து தம்மை விலக்கியமை சட்டவிரோதமானது என உத்திரவிடுமாறு கோரி மூன்று பாராளுமன்ற உறுப்பினர்கள் உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளனர்.

எம்.பிக்களான குசைன் பைலா ரிசாட் பதுர்டீன், மஜித் ஆகிய மூன்று எம்பிக்களே இந்த மனுக்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளனர்.

இந்த மூவரும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் மீது குற்றச்சாட்டுகள் சுமத்தி மேலும் தனிநபர் ஒழுக்கவியல் பிரச்சினையையும் கிளப்பினார்கள். இந்தப் பிரச்சனை ஓர் திட்டமிட்ட சதியாகவே மேற்கொள்ளப்பட்டது. இதற்குப் பின்னணியில் ஆளும் தரப்பு இருந்தது. எப்படியும் தமது பெரும்பான்மையை நிரூபிக்க ஆளும் தரப்பு மூன்றாந்தர வேலைகளில் எல்லாம் ஈடுபட்டது. அந்த வலையில் பலியானவர்கள் தான் இந்த மூன்று எம்.பிக்கள்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவராக அஸ்ரப் இருக்கும் வரை கட்சி செல்வாக்கு மிக்க கட்சியாகத் தான் இருந்தது. இருப்பினும் அவரது காலத்திலேயே கட்சி இளைஞர்களிடமிருந்து எதிர்ப்புகளையும் விமரிசனங்களையும் சந்திக்க நேரிட்டது. அவரது திடீர் இறப்பு கட்சியை பலவாறு சிதைத்தது. பல்வேறு கட்சிப் பிளவுகள் இன்றுவரை தொடரவும் காரணமாயிற்று.

ஆளும் தரப்பாரின் ஆசை வார்த்தைகளுக்கு இலகுவில் பலியாகும் சூத்திரம் முஸ்லிம் காங்கிரஸின் நடைமுறையாகிவிட்டது. எந்த நோக்கத்துக்காக எந்த அரசியலுக்காக முஸ்லிம் காங்கிரஸ் தொடங்கப்பட்டதோ அந்த அரசியல் நோக்கத்திலிருந்து கட்சி விடுபட்டுச் செல்கிறது. பல கிளைகளாக உதிரிகளாக ஆகிவரும் அவலமும் அரங்கேறுகிறது. இரண்டு பேரினவாதக் கட்சிகளின் எடுப்பார் கைப்பிள்ளைகளாக மாறுவதில் போட்டி போடுகிறார்கள்? பாவம் அஷ்ரப்.

## சுகம் கண்ட கட்சி

இ.தொ.கா. பதவி ஆசைக்காக பெரும்பான்மை கட்சிகளுக்கு துணை போகும் கட்சியல்ல எனது தனது மாகாண சபைத் தேர்தல் பிரச்சாரத்தின் பொழுது ஆறுமுகன் தொண்டமான் குறிப்பிட்டார்.

ஆனால் இ.தொ.காவின் வரலாறு பெரும்பான்மைக் கட்சிகளின் தயவில் வாழ்ந்து கொண்டு தான் தனக்காக அரசியல் இழுப்பை எதிர்காலத்தை உத்தரவாதப்படுத்தி வந்துள்ளது. ஆட்சியில் பங்கு கொண்டு தான் தமக்கான நலன்களை காப்பாற்றி பாதுகாத்து வந்துள்ளது.

தற்போது கூட சுதந்திரக்கட்சி தலைமையிலான கூட்டணியில் இ.தொ.கா. ஈடுபடும் என்ற எதிர்பார்ப்பு பேரம் பேசும் அரசியல் வெளிப்படையாகவே நடைபெற்று வந்தது. இதுவரை ஐ.தே.கட்சியுடன் இருந்துவிட்டு சுதந்திரக்கட்சி கூட்டணியுடன் இணைவது இ.தொ.கா.விற்கு ஒரு பெரும் பிரச்சனை அல்ல. ஆனால் வரவிருக்கும் மாகாண சபைத் தேர்தலில் ஐ.தே.கட்சியுடன் இருந்தால் தான் வெற்றி வாய்ப்பை உறுதிப்படுத்த முடியும். அதற்காகத் தான் ஆறுமுகன் காத்துக் கொண்டிருக்கிறார். தேர்தல் முடிந்தவுடன் ஆறுமுகன் தனது ஒரு முகத்தை தெளிவாகவே காட்டுவார். பதவி ஆசைக்காக பெரும்பான்மை கட்சிகளுக்கு துணைபோவதன் மூலம் தான் இ.தொ.கா. உயிர்வாழும் என்பது அதன் விதி. இதை யாரால் மாற்ற முடியும்?

## முழக்கத்துக்குப் பஞ்சமில்லை?

பாராளுமன்றத்தில் எமது கட்சிக்கு ஓரிரு ஆசனங்கள் குறைந்தாலும் மக்கள் எமக்கு அளித்த அதிகாரத்தைப் பயன்படுத்தி 5 வருடங்கள் ஆட்சி நடத்தியே தீருவோம். அதேவேளை எனது ஜனாதிபதி பதவிக்காலம் 'நிறைவடைய முன்னர் யுத்தத்திற்கு முடிவு கண்டு நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த சகல முயற்சிகளையும் மேற்கொள்வேன்' என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கம்பளையில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றினார்.

மேலும் அவர் ஒரு சில எம்பிக்களை பணம் கொடுத்து வாங்கி ஆட்சி அமைக்கலாம் என எதிர்கட்சியினர் துடிக்கின்றனர். அவர்களின் கனவு ஒரு போதும் நிறைவேறாது எனவும் குறிப்பிட்டார்.

தற்போதைய இலங்கைச் சுழலில் புதிதாக ஆட்சிக்கு வந்துள்ள அரசாங்கத்துக்கு பெரும்பான்மை கிடையாது. சிஹல உறுமய, முஸ்லிம் காங்கிரஸ், இ.தொ.கா. உள்ளிட்ட கட்சிகளின் எம்பிக்கள் சிலரை விலைக்கு வாங்குவதற்கு சுதந்திரக் கட்சியினர் முயற்சி செய்தார்கள் என்பது பரவலாக வெளியில் அறியப்பட்ட உண்மை.

இன்றுவரை பாராளுமன்றத்தில் தமது பெரும்பான்மையை நிரூபிக்க முடியாத அரசாங்கமாகவே உள்ளது. ஜே.வி.பி.யுடன் சுதந்திரகட்சி கூட்டணி சேராதிருப்பின் சுதந்திரக்கட்சி ஆட்சிக்கு வந்திருக்க முடியாதென்று ஜே.வி.பி.தரப்புக் கூறுகிறது.

ஒரு காலத்தில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை நீக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை முன்வைத்து அரசியலுக்கு வந்தவர் சந்திரிகா. இன்று ஜனாதிபதியின் அதிகாரத்தை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டு பதவிக்காலம் முடிவதற்குள் தனது அரசியல் எதிர்காலத்துக்கான புகலிடம் அமைக்க திட்டமிடுகிறார்.

இந்நிலையில் தனது பதவிக்காலம் நிறைவடைய முன்னர் சமாதானத்திற்கான சகல முயற்சிகளையும் மேற்கொள்வேன் என்று முழங்குவது காரிய சாத்தியமான பேச்சாக இருக்குமா? என்ற சந்தேகம் எழுவது தவிர்க்க முடியாது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்குரிய முறைமையால் நாட்டில் நிரந்தரமான சமாதானம் நிலவ வழி வகிக்க முடியும். ஆனால்....?

## என் இந்தத்தாக்குதல்?

2006 ஆம் ஆண்டில் யாழ்குடாநாட்டைக் கண்ணிவெடியற்ற பிரதேசமாக்கும் இலக்குடன் 'ஹலோ ரஸ்ட்' எனும் நிறுவனம் செயற்பட்டு வருகிறது.

கடந்த மாதம் 25.06.2004 அன்று இந்த நிறுவனத்தின் - நல்லூர் கிழக்கு வீதியில் அமைந்துள்ள - வாகனத் தரிப்பிடம் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. 'இத்தாக்குதலில் ஒரிகுவர் சம்பந்தப்படவில்லை. 20 பேர் கொண்ட குழு சம்பந்தப்பட்டுள்ளது. நன்கு திட்டமிடப்பட்டு இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது' என்று இந்நிறுவனத்தின் செயற்பாட்டுக்குப் பொறுப்பான திட்டமிடல் முகாமையாளர் வலோன் குமனோவா தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி உதவியுடன் ஹலோ ரஸ்ட் பிரிட்டிஷ் நிறுவனம் குடாநாட்டில் கண்ணிவெடி அகற்றும் மனிதாபிமானப் பணியை மேற்கொள்ள 2002 யூன் மாதம் யாழ்ப்பாணத்தில் காலடி வைத்தது. யாழ்ப்பாண மக்களின் உயிருக்கும் உடலுக்கும் பாதுகாப்பு வழங்கும் பணியில் ஈடுபட்டுள்ள ஒரு நிறுவனத்தின் மீதான தாக்குதல் யாரால்? எந்த நோக்கத்துக்காக செய்யப்பட்டதென்று இதுவரை எந்த தகவல்களும் வெளிவரவில்லை. இந்தச் சம்பவத்தின் பின்னணியில் உள்ள சூத்திரதாரிகளைக் கண்டுபிடிக்க ஸ்ரீலங்காப் பொலிஸாரும் விடுதலைப் புலிகளும் தனித்தனியே விசாரணைகளை முனைப்புடன் முன்னெடுத்துள்ளனர்.

நாசகார சக்திகளின் முகத்திரை கிழிபட்டு வெளிப்படையாக முகம் தெரிந்தால் தான் இதன் பின்னணித் தகவல்கள் மேலும் தெரியவரும். தெரிய வருமா....?

## "சின்னப்பாலம்"

போர்க்கால அமைதி
எனது கிராமத்தின்
எஞ்சிய ஊர்மனைகளில்
வெட்ட வெளீரெனக் கிடந்த வயல் வெளிகளில்
சிற்றாறுகள் பின்னி வைத்த
வண்டல் மண் கரைகளில்
சின்னப்பாலத்தின் வெறிச்சோடலில்
ஐந்துவிரல் கொண்டு அறைந்து கிடந்தது.

சின்னப்பாலத்தடிக்கு
நித்தம் செட்டை அடித்து வந்தன
வழக்கத்திலும் கொழுத்த
ஒற்றைக்கால் கொக்குகளும்,
சுழியோடும் நீர்க் கோழிகளும்
அவற்றிலும் அதிகமாய்
விளைந்து கிடந்தன
ஊறி அழுகிய பிணங்களின்
வாசனை முகர்ந்து, சுவை அறிந்த
ஜப்பான் குறளிகளும், குறட்டை பெட்டியான் மீன்களும்
கபறக்கொய்யாக்களோ
எவ்வித நிர்ச்சலனமுமின்றி
நீரிற் பொசிந்தூறிய மனிதக் கபாலங்களை
ஆளுக்கு ஐந்து ஆறாய்ப்
பங்கிட்டுக் கொண்டன -
சண்டை சச்சரவின்றி சமாதானத்துடனே.

தேவைப்படும் போது
அவை பின்னிற்பதில்லை
தம் நாவால் மனிதக் கட்குழிகளை நீவிக்
கறுத்த விழிகளைத்
திராட்சைகளாய் உறிஞ்ச.

சின்னப்பாலத்தடி
தன்னைக் கடந்து போனவர்களை
நினைவில் பதித்துக் கொண்டாலும்,
ஊறி வெடிப்பற்றுச் சிதிலமாய்த் தொங்கும் தசைகளை
ஒட்டவைத்து
அடையாளம் காண்பதற்குள்
தலை கிறுகிறுத்துப் போய்விடும் அதற்கு.

அக் கிறுகிறுப்பில் அதுவோ தினமும்
'என்னை மட்டும் தனிக்க விட்டு
இந்த மனிதர் எங்கு போயினர்
எங்கு போயினர்'
எனப் பெருங்குரலெடுத்துக்
கதறத் தொடங்குகையில்,
எப்போதும் போல
ஊர்மனைச் சுவர்களில்
பிளவுண்ட கீறல்கள் வெடிப்புற்றுத் தொடர்ந்தன.

சிற்றாறுகள் அன்றைய வண்டலைக்
கரைகளில் கொட்டிக் களையாறின
வயல்வெளிகளில் காற்றின் ஓலத்துடன்
இரவு வந்து தரையிறங்க
கபறக் கொய்யாக்கள்
உண்டகளை தீர அரைக்கண் மயக்கத்தில்
கோயில் தெப்பங்களாய் மிதந்தன.

**ஆழியாள்**
(14.04.2002)

* கிழக்கிலங்கையிலுள்ள மூதூரில் உள்ளது.

# யுகம்

யுகம் : ஒன்று ஆடி 2004

89,LEYBRIDGE COURT,
ELTHAM ROAD,
LONDON SE12-8TQ,
U.K


## இன்று உங்கள் முன்!

வணக்கம்

உங்கள் கைகளில் தவழ்ந்து கொண்டிருக்கும் இந்த இதழ் - 'யுகம்' - புதிதுதான். ஆனால் இதில் எழுதுபவர்கள் ஈழத்துத் தமிழ்ச்சூழலில் பல்வேறு தடங்களிலும் காலூன்றியவர்கள். உங்களுக்கு நன்கு பரிச்சயமானவர்கள்.

1980 களுக்கு பின்னர் ஈழத்துத் தமிழ்ச் சூழலில் ஏற்பட்ட 'வாழ்வியல் நெருக்கடி' 'போரும் வாழ்வும்', 'இயக்க அரசியல்', 'விடுதலை அரசியல்' பல்வேறு விரிதள சிந்தனைகளை வேண்டி நின்றது. இக்காலத்தில் இயங்கிய பத்திரிகைகள் அவற்றின் வேட்கையை தீவிரத்தை முழுமையாகப் புரிந்து கொண்டு செயற்பட்டார்கள் எனக் கூற முடியாது. நிலவும் ஆதிக்க அதிகார சிந்தனையோட்டங்களுக்கும், ஜனநாயக விரோத நடவடிக்கைகளுக்கும் எதிரான மாற்றுச் சிந்தனைக்கான விதைகளை விதைப்பதில், அறிவூட்டுவதில், அபிப்பிராய உருவாக்கத்தில் இந்தப் பத்திரிகைகள் முழுமையாக ஈடுபடவில்லை.

மேலும் மாற்றுச் சிந்தனைக்கான மாற்றுக் கலாசாரம் அனைத்துத் துறைகளிலும் ஊடுபாவு கொண்டு மேற்கிளம்பி விரிந்து பரந்து வளர்வதற்கான சாத்தியங்களை வளர்க்கத் தவறின. வெறும் பரபரப்பு அரசியல் செய்திகளை வழங்குவது மட்டுமே தம்பணி என்று புரிந்து செயற்படுகிறார்கள்.

ஆனால் யதார்த்தத்தில் விரிவடையும் பிரச்சனைகள், முரண்பாடுகள் கூர்மையானவை. ஆழமானவை. இவை சமூக அரசியல் பண்பாட்டுத் தளங்களில் ஏற்படுத்தும் பாதிப்புகள் அதிகமானவை. வலுவானவை. இவற்றை விளங்கவும் விளக்கவும் வேண்டிய பாரிய பணி எம்முன் உள்ளது.

சமுகநீதி, சமூக ஜனநாயகம், சமூக சமத்துவம் சார்ந்து ஒடுக்கப்படும் மக்களின் உரிமைக்காக குரல் கொடுக்க வேண்டியவர்களாகிறோம். அரசியல் புரிதலை அரசியல் கண்ணோட்டத்தை சமுகவியல், பொருளியல், பண்பாட்டியல், அறிவியல், சூழலியல், பெண்ணியம், நலவியல், கல்வியியல், தொழில்நுட்பவியல் என பல்துறைச் சங்க' ஆய்வு நெறிமுறைகளுடன் இணைத்துப் புரிந்து கொள்ள வேண்டியவர்களாகின்றோம். அப்பொழுது தான் நாம் நமக்கான வாழ்க்கைத் தெரிவு என்ன என்பது புரியும்.

இன்று சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், ஜனநாயகம் உள்ளிட்ட மானிட சிந்தனைப் பெறுபேறுகளையும் வாழ்க்கை விழுமியங்களையும் இலங்கைச் சூழலில் எவ்வாறு அர்த்தப்பட வேண்டும் என்பது பற்றிய பொருத்தப்பாட்டையும் பிரக்ஞைபூர்வமாக விளங்கிச் செயற்பட வேண்டும். மக்களின் நல்ன் என்ற கண்ணோட்டம் எங்கும் வியாபித்திருக்க வேண்டும்.

சமுக ஜனநாயக வாழ்வை வாழவும் அதை உறுதிப்படுத்துவதற்குமான மக்களுக்குள்ள உரிமைகள் எவராலும் மறுக்கப்படாத ஜனநாயகச் சூழல் உருவாக்கப்படுவதில் யுகம் எப்பொழுதும் அக்கறையாகவும் விழிப்பாகவும் இருக்கும்.

'யுகம்' தமிழ்ச்சூழலில் எங்கும் 'விடுதலை அரசியல்' இலக்காகக் கொண்ட கருத்தாடல் சுதந்திரத்தை மதிக்கும் பண்பை வளர்த்தெடுக்கவும் பின் நிற்காது.

எல்லாவிதமான மாற்றுக் கருத்துக்களுக்கும், கருத்துத் தொடர்பான விவாதங்களுக்குமான ஒரு களமாக யுகம் அமையும். அதேவேளை எழுதுபவர்களது கருத்துச் சுதந்திரத்துக்கு மதிப்புக் கொடுக்கும். கருத்தச் சுதந்திரம் என்ற பெயரில் தனி நபர்களுக்கு எதிராக வசைபாடல் சமூக ஜனநாயக விரோதக் கருத்துக்களை பரப்புதல் உள்ளிட்ட கயமைத்தனங்கள் குறித்து யுகம் விழிப்பாக இருக்கும்.

போர்க் கலாசாரத்திலிருந்து சமாதானக் கலாசாரம் நோக்கிய நகர்வுக்கும் உரிய 'சமூக கருத்தியல் வெளி' உருவாக்கத்திலும் யுகம் தனது பங்களிப்பை வழங்கும். தமிழ்ச் சிந்தனை மரபில் புத்தாக்கங்களை ஏற்படுத்த வேண்டுமென்ற துடிப்புடன் உங்கள் முன் வந்துள்ள யுகத்தை ஏற்று ஆதரியுங்கள்.

***மீண்டும் சந்திப்போம்!***

***நன்றி, வணக்கம்***

## பாராளுமன்ற ஜனநாயகமும் மோதல் களமும்

இலங்கைப் பாராளுமன்று தனது மாட்சிமைத்தன்மைகளிலிருந்து விடுபட்டு மோதல்களமாக மாறிவிட்டது. நாட்டின் ஜனநாயகப்பாணி முறையின் எதிர்காலம் எவ்வாறு அமையும் என்பதற்கு பாராளுமன்ற நடவடிக்கைகள் சமிக்கை காட்டுகிறது.

2004 தேர்தல் முடிவடைந்து முதற் தடவையாக 2004 ஏப் 22இல் கூடிய பாராளுமன்றம் இலங்கைப் பாராளுமன்ற அரசியல் வரலாற்றில் சபாநாயகர் தெரிவின் போது முன்னர் ஒரு போதும் கண்டிராத காட்சிகளை அலங்கோலங்களாக வெளிப்படுத்தியது. மீண்டும் இரண்டாவது தடவையாக மே 18 இல் கூடிய போது பிரதி சபாநாயகரையும் குழுக்களின் பிரதித் தவிசாளரையும் ஏகமனதாகக் தெரிவு செய்யக் கூடிய வாய்ப்பு உருவாகியிருந்தது.

இந்த முடிவு குறித்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் பங்காளிகளான ஜே.வி.பி சர்ச்சையை கிளம்பியது பின்னர் ஜனாதிபதி சந்திரிகா தலையிட்டு இரு கட்சிகளிடையேயும் ஓர் இணக்கமான சூழலை உருவாக்கினார். ஆயினும் ஜே.வி.பி ஆளும் கூட்டணியில் இருந்தாலும் சுதந்திரக் கட்சியின் அனைத்து நடை முறைகளுடனும் ஒத்துப் போகும் என எதிர்பார்க்க முடியாது. இதுதான் இந்தக் கூட்டணியின் மிகப் பெரிய பலவீனம்.

மே 19 இல் மூன்றாவது தடவையாக சபை கூடிய பொழுது குறிப்பிடத்தக்க சர்ச்சை எதுவும் மூளவில்லை. ஆனால் யூன் 9இல் நான்காவது தடவையாக சபை கூடிய பொழுது இடம் பெற்ற சம்பவங்கள் - அலங்கோலங்கள்-காட்சிகள் பாராளுமன்ற வரலாற்றில் மறக்கப்பட முடியாத நாள். அதியுயர் சட்ட வாக்க சபையின் கையாலாகாத்தனம் அரங்கேறிய நாள்.

பாராளுமன்ற மேன்மையைச் சம்பிரதாயபூர்வமாக உருவகித்து நிற்கும் செங்கோலை அமைச்சர் ஒருவர் சபைக்கு வெளியே தூக்கிச் சென்று பல மணி நேரம் ஒளித்து வைத்திருந்து அவல நாடகம் அரங்கேறியதையும் அன்றைய தினம் காணக் கூடியதாக இருந்தது.

ஜாதிக ஹெல உறுமயவின் புதிய எம்.பி அக்மிமன தயாரத்ன தேரோ சபாநாயகர் முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்வதை ஆளும் சுதந்திர முன்னணியின் எம்.பிக்கள் சிலர் தடுக்க முயன்ற போது எதிர்க்கட்சி எம்பிக்களுக்கும் அவர்களுக்கும் இடையில் பெரும் கைகலப்பு மூண்டது. பேசத்தகாத வார்த்தைகள் சொற்போர்கள் நடந்தது.

அக்மீமன தயாரத்ன தேரோவை பதவிப்பிரமாணம் செய்து வைப்பதற்காக சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம் லொக்கு பண்டார அழைத்த போது அரசாங்கத் தரப்பு பிரதம கொடறடாவான அமைச்சர் ஜெயராஜ் பெர்னான்டோ புள்ளே, தயாரத்ன தேரோ பதவிப்பிரமாணம் செய்வதைத் தடுக்கும் உத்தரவொன்றை நீதிமன்றம் பிறப்பித்திருப்பதால் அவரை பிரமாணம் செய்ய அனுமதிக்க வேண்டாம் என்று கோரி ஒழுங்குப் பிரச்சனையொன்றை கிளப்பினார்.

நீதிமன்ற உத்தரவெதுவும் தனக்குக் கிடைக்க வில்லையென்று தெரிவித்த சபாநாயகர் தேரோவை பதவிப் பிரமாணத்துக்கு அழைத்த போது ஆசனங்களை விட்டு எழுப்பி ஒடி வந்த ஆளும் கட்சி எம்பிக்கள் தேரர் சபாநாயகரின் தலைமை ஆசனம் நோக்கிச் செல்வதை தடுத்தனர். தாக்கினர். தயாரத்தன தேரருக்கு பாதுகாப்பாக வந்த ஹெல உறுமயவின் எம்.பியான கொலன்னாவ சுமங்கள தேரோவும் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டார்.

எதிரணிகள் எல்லோரும் ஒன்றிணைவதற்கான நிலைமையை சபையில் ஏற்பட்ட கலவரங்கள் கைகலப்புகள் உருவாக்கின. கலவரங்களுக்கு பிறகு சபாநாயகர் தலைமையில் அவசரமாகக் கூடிய பாராளுமன்றக் கட்சிகளின் தலைவர்கள் கூட்டத்திலும் ஜே.வி.பியின் விமல்வீரவன்சவுக்கும் ஜாதி ஹெல உறுமயவின் அநுரலியேரத்ன தேரோவுக்கும் இடையில் வாக்குவாதங்கள் மூண்டது. இதனால் இணக்கப்பாடு எதுவும் இல்லாமல் யூன் மாதத்துக்கான சகல சபை அமர்வுகளும் ரத்துச் செய்யப்பட்டு யூலை 21வரை பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற வரலாற்றின் பௌத்த துறவிகளின் துகிலுரிந்து தாக்குதல் நடத்தி சபையின் கண்ணியத்தை காற்றில் பறக்கவிட்ட எம்.பிக்கள்தான் இன்று மக்கள் பிரதிநிதிகள். இங்கு நடந்தேறிய காடைத்தனங்கள் சபைக்கு வெளியில் நடந்திருந்தால் அது பயங்கரவாத நடவடிக்கையாக கருதப்பட்டிருக்கும். அதியுயர் சபையின் பிரதிநிதிகள் எந்தளவிற்கு கீழானவர்கள் என்பதை அடையாளம் காட்டியுள்ளது.

இலங்கை ஒரு பௌத்த நாடு. ஆட்சி அதிகார பலத்துடன் பௌத்தம் பாதுகாக்கப்பட்ட வேண்டுமென்று தான் தீவிர சிங்களவாதிகள் கருதுகிறார்கள். அதற்கான அரசியலைத் தான் கையில் தூக்கியுள்ளார்கள். ஆனால் பௌத்தத் துறவிகள் பாராளுமன்றத்தில் தாக்கப்படுகிறார்கள். இந்த முரண்பாடு இதுவரை இலங்கை அரசியல் கொண்டிராத ஒன்று. அரசியலின் பெயரால் எதுவும் ஆகும் என்னவும் செய்யலாம். ஆனால் யார் யாருக்குச் செய்கிறார்கள் என்பதைப் பொறுத்துதான் அனைத்துக்கும் அர்த்தம் உண்டு. அரசியல் உண்டு. அரசியலாக்கப்படுவதற்கான சூழமைவு தோன்றும்.

ஜனநாயகப் பாரம்பரியங்களை கட்டி வளர்க்கும் அதியுயர் சட்டவாக்க சபை காடையர்களின் கூடாரமாக மாறியிருக்கும் பொழுது ஜனநாய விழுமியங்கள் சகலதுமே துவசம் செய்யப்படும் சூழல்தான் உள்ளது. புதிய பாராளுமன்ற கூட்டத் தொடர் இதைத்தான் மெய்ப்பிக்கின்றது. ஒரு மக்களாட்சி முறை செயல்படுவதற்கு நான்கு முக்கியமான கூறுகள் அவசியமாகும். அவையாவன.

1. சுதந்திரமான நேர்மையான தேர்தல்கள்
2. வெளிப்படையான பதிலளிக்கும் பொறுப்புள்ள அரசாங்கம்
3. சமூக மற்றும் அரசியல் உரிமைகள்
4. மக்களாட்சி நெறிமுறையுடைய சமுதாயம்.

இந்தக் கூறுகள் எந்தளவிற்கு ஆரோக்கியமான திசைப் போக்கில் உள்ளனவோ. அந்தளவிற்குத்தான் மக்களாட்சி ஒருங்கிணைப்பு சாத்தியமாகும்.

இலங்கையின் பாராளுமன்ற நடவடிக்கைகள் ஜனநாயகநெறிமுறைகளுக்கும் மக்களாட்சித் தத்துவத்துக்கும் விரோதமாகத் தான் உள்ளது இந்த நிலையில் சர்வ தேச சமூகத்தின் ஒத்துழைப்புடன் தேசிய இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணக் கூடியளவிற்கு சிங்கள பௌத்த கட்சிகள் தயாராக உள்ளார்களா? என்பது விடை காண முடியாத கேள்வியாக மட்டுமே இன்று வரை தொடர்கிறது.

தொடரும் அரசியல் போட்டா போட்டிகள் எதிர்க்கட்சி மனோபலங்கள், கழுத்தறுப்புக்கள். அரசியல் சண்டித்தனம். காடைத்தனம் வன்முறைகள் யாவும் பாராளுமன்ற நெறிமுறைகளை அரித்துச் செல்லும் குணங்குறிகளாகவே உள்ளன. இந்நிலையில் இனங்களுக்கிடையிலான, மதங்களுக்கிடையிலான, மொழிகளுக்கிடையிலான, பிரதேசங்களுக்கிடையிலான சமூக சமத்துவம் சமூக நிதி சமூக ஜனநாயகம் யாவும் கட்டி வளர்க்கப்படுவதற்கான முதிர்ச்சியை சிங்களப் பாராளுமன்றம் கொண்டிருக்கிறதா? என்பது தான் இலங்கை எதிர் கொண்டுள்ள பெரும் சவால்.

புதிய பாராளுமன்ற கூட்டத் தொடர் ஜனநாயக மரபுகளை நோக்கி செல்லும் என்பதற்கான தடயங்கள் எதனையும் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை அப்படியானால் இலங்கை. எதை நோக்கிச் செல்கிறது....?

— ஆணிமுத்தர் —

# பழைய பயங்கரச் சம்பவத்தின் நினைவு மீளமீள தொல்லைப்படுத்துகிறதா?



உங்கள் வாழ்வில் எப்பொழுதாவது மிகப் பயங்கரமானதும், உங்கள் மனதில் ஆழமாக பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதுமான சம்பவம் எதையாவது எதிர் கொண்டிருக்கிறீர்களா?

நிச்சயம் இருக்கும்!

ஈழத் தமிழர்களது வாழ்வு சென்ற இருபது வருடங்களாக தினம் தினம் இடர்பாடுகளுக்கு ஊடாகத் தான் நகர்கிறது. குண்டு வெடிப்பு. விமானத் தாக்குதல், எறிகணைவீச்சு, அந்நிய இராணுவத்தினது அடாவடித்தனம், உடல் ரீதியான தாக்குதல், சிறையில் அடைபடல், பாலியல் பலாத்காரம் போன்ற ஏதாவது வன்முறை ஒன்றினால் எங்களில் எவராவது ஒருவருக்கு பாதிப்பு ஏற்படாமல் இருந்திருக்குமேயானால் அது அதிசயம்தான்.

உடல் ரீதியான பாதிப்பு ஏற்படாவிட்டால் கூட உளரீதியான பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடிய சம்பவங்களை எதிர் கொண்டிருப்பீர்கள். இவற்றில் சிலவாவது மரண பீதியை ஏற்படுத்தக் கூடிய பாரிய சம்பவங்களாக உங்களை உலுப்பியிருக்கும்.

அத்தகைய சம்பவங்களில் ஏதாவது ஒன்றாவது ஒன்று உங்கள் மனத்தில் ஆழமாக பதிந்து அழுத்தமான வடுவை ஏற்படுத்தி உங்கள் தினசரி வாழ்க்கையையும், குடும்பத்தினருடனும் சமூகத்தினதும் ஆன உறவாடலில் சிக்கலை ஏற்படுத்துகிறது எனில் நீங்கள் Post traumatic stres Desorder (PTSD) என்று சொல்லப்படும் நெருக்கீட்டுக்குப் பிற்பட்ட மனவடு நோயால் பாதிக்கப்பட்டிருக்கக் கூடும்.

இது ஏதோ கேள்விப்படாத புதினமான நோய் என்று எண்ணுகிறீர்களா? பெயர் புதிதாக இருக்கலாம். ஆனால் உங்களையும உங்களைச் சுற்றியுள்ளவர்களையும் திரும்பிப் பார்த்தால் எத்தனை பேர் இந்நோயால் பீடிக்கப்பட்டிருக்கக் கூடும் என்பதை இக் கட்டுரையை வாசித்து முடிந்த பின் நீங்கள் உணர்வீர்கள்.

எந்த ஒரு சமூகத்தையும் எடுத்துக் கொண்டாலும் அதில் 10 சதவிகிதத்தினர் இந்நோயால் பீடிக்கப்பட்டுள்ளனர் என ஆய்வுகள் கூறுகின்றன. போர், வறுமை முதலியன அதிகம் பாதிக்காத அமெரிக்காவில் கூட வருடாவருடம் 5.2 மில்லியன் மக்கள் இந் நோயால் பாதிக்கப்படுவதாகக் கணிக்கப்பட்டுள்ளது. அப்படியாயின் அடக்குமுறையால் வெடித்த உள்நாட்டுப் போர் காரணமாக இழப்புகளும், துன்பங்களும், நெருக்கீடுகளும் மலிந்த ஈழத் தமிழ் மக்களிடையே இந்நோயின் தாக்கம் எவ்வளவு அதிகமாக இருக்கும்!

இந்நோய் உங்களுக்கோ நீங்கள் அறிந்த ஒருவருக்கோ இருக்கக் கூடும் எனக் கண்டுபிடிப்பது எப்படி? அதாவது இந்த நோயின் அறிகுறிகள் என்ன?

குறிப்பிட்ட அந்தப் பயங்கரச் சம்பவம் மீண்டும் முழுமையாக, நிஜமாகவே நடப்பது போன்ற உணர்வு எழுகின்றதா? அதுவும் எந்தவித முன்னறிவித்தலும் இன்றி அவ்வுணர்வு திடீரென ஏற்படுகின்றதா? எந்நேரமும் ஆபத்து சூழ்ந்து வரக்கூடும் என்ற பயமும் பாதுகாப்பற்ற உணர்வும் எழக் கூடும். இதனால் வெளிப்படையான தூண்டுதல் எதுவுமின்றியே எரிச்சல், கோபம் பதற்றம் போன்றவை தோன்றி உங்களைப் பாதிப்பதுடன் மற்றவர்கள் மனத்தையும் நோகச் செய்யலாம்.

முன்பு நடந்த அந்தச் சம்பவம் தொடர்பான பயங்கரக் கனவுகள் உங்களைத் தொல்லைப்படுத்துகிறதா? அல்லது அந்தத் திகிலூட்டும் நிகழ்வு பற்றிய நினைவுகள் அடிக்கடி வந்து அல்லல்படுத்துகிறா? இதனால் அண்மையில் நடந்த சம்பவங்களை நினைவு படுத்த முடியா ஞாபக மறதி ஏற்படக் கூடும். எந்த விடயத்திலும் முழுமையான அக்கறை எடுக்கவோ மனத்தை ஒருமுகப்படுத்தவோ முடியாதிருக்கும்.

நடந்த அந்தப் பயங்கரச் சம்பவம் பற்றி மீண்டும் மீண்டும் சிந்திக்க தோன்றுகிறதா. நீங்களாக வலிந்து யோசிக்காவிட்டால் கூட உங்களை மீறி அவ்வெண்ணம் பீறிட்டு எழுகிறதா?

அந்தச் சம்பவம் தொடர்பான நினைவுகளைக் கிளறுகிற இடங்களுக்குச் செல்வதையும், அது சம்பந்தமான உரையாடல்களையும் நீங்கள் தவிர்க்க முனைகிறீர்களா?

எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் ஏதாவது சம்பவம் திடீரென நடந்தால் கூட நீங்கள் பதற்றம் அடைந்து நிலை தடுமாறி விடுகிறீர்களா? உதாரணமாக கதவு அடிபடுகின்ற சத்தமோ, ஆகாய விமான அல்லது கார்ச் சத்தமோ உங்களைப் பதற்றப்படச் செய்கிறதா?

சிறுசிறு சம்பவங்கள் கூட உங்களை உணர்ச்சி வசப்படுத்தி தன்நிலை இழக்கவைக்கிறதா?

மற்றவர்கள் மரணித்துவிட்டபோது நீங்கள் மாத்திரம் உயிர் தப்பிவிட்டோமே என்ற குற்றவுணர்வுக்கு ஆளாகின்றீகளா?

மற்றவர்களில் நம்பிக்கை கொள்ளவோ, அவர்களிடத்தில் அக்கறை காட்டவோ, அவர்களுடன் உணர்வுபூர்வமாக நெருங்கிப்பழகவோ முடியாதிருக்கிறதா? சமுதாயத்திலிருந்து ஒதுங்கவும் தனிமையை நாடவும் முனைகிறீர்களா?

உங்களுக்கு நித்திரைக் குழப்பம் ஏதாவது இருக்கிறதா? தூக்கம் கண்களைத் தழுவ நீண்ட நேரம் எடுக்கிறதா, அல்லது அடிக்கடி குழம்புகிறதா அல்லது வேளை கெட்ட நேரத்தில் கண்பிழித்து மீண்டும் தூக்கம் வராமல் தொல்லைப்படுகிறீர்களா?

வாழ்வில் ஆர்வமும் அக்கறையும் குறைந்து செல்கிறதா? எதையும் அப்புறமாக செய்யலாம் என தள்ளி வைக்கத் தோன்றுகிறதா?



இவற்றில் ஒரு சில அறிகுறிகளாவது உங்களுக்கு இருந்ததால் நீங்கள் நெருங்கிட்டுக்குப் பிற்பட்ட மனவடு நோயால் பாதிக்கப்பட்டு இருக்க கூடும் என எண்ணலாம். நீங்களாக முடிவுஎடுக்க வேண்டாம். உங்கள் வைத்தியருடன் கலந்தாலோசிப்பது முக்கியமானது.

மாறாகச் சில இவற்றிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக மதுவையோ போதைப்பொருட்களையோ நாடி அவற்றிற்கு அடிமையாகும் துர்ப்பாக்கிய நிலையும் ஏற்படுகின்றது. வேறு சில சுய வைத்தியத்தில் இறங்கி ஆபத்தான மருந்துகளை தாமே உட்கொண்டு அழிந்து போவது உண்டு.

நெருக்கீட்டுக்குப் பிற்பட்ட மனவடு நோய் முதன் முதலில் வியட்நாமில் போரிட்டு பயங்கர அனுபவங்களைப் பெற்ற அமெரிக்க போர் வீரர்களில் தான் இனம் கானப்பட்டது. இன்றும் கூட போரினால் பாதிக்கப்பட்ட இடக்களில் உள்ளவர்களையே அதிகம் பாதிக்கின்றது. ஆனால் இது முழுமையாக போர் தொடர்பான நோய் அல்ல. வேறு பல நெருக்கீடுகளும் பயங்கர அனுபவங்களும் கூட இந் நோயை கொண்டுவரலாம்.

1. ஒருவர் பாலியல் வல்லுறவிற்கு அல்லது பாலியல் ரீதியான வன்முறைக்கு உட்பட்டிருந்தால்
2. குடும்பத்தில் உள்ள ஒருவரினால் அடித்தோ துன்பப்படுத்தப்பட்டு இருந்தால்.
3. கொலை, கொள்ளை, தீ வைப்பு போன்ற ஏதாவது கொடுரமான குற்றச் செயலுக்கு ஆட்பட்டிருந்ததால்
4. விமான விபத்து அல்லது வீதி வாகன விபத்துக்கு ஆளாகியிருந்தால்
5. சூறாவளி, புயல் பயங்கர தீ விபத்து போன்ற ஏதாவது ஒன்றில் மாட்டுப்பட்டிருந்தால்
6. நான் கொல்லப்படக் கூடும் இதில் இருந்து உயிர் தப்ப முடியாது என்பது போன்ற ஏதாவது ஒரு சம்பவத்தில் அகப்பட்டிருந்தால்.

நீங்கள் நேரடியாக பாதிக்கப்படாவிட்டாலும் அத்தகைய சம்பவம் நடக்கும் போது அவ்விடத்தல் இருந்திருந்தாலும் இந் நோய் வருவதற்கான வாய்ப்பு இருக்கின்றது.

இந்நோய் எப்போது வரும் யாருக்கு வரும்? எவருக்கும் வரலாம். எந்த வயதிலும் வரலாம், குழந்தைகளுக்கு கூட வரலாம். ஆனால் ஆண்களை விட பெண்களை அதிகம் பாதிப்பதாக கூறுகின்றன. சம்பவம் நடந்த பின் உடனடியாக ஆரம்பிக்கும் என்றில்லை. பெரும்பாலும் 3 மாதங்களுக்குள் ஆரம்பிக்கலாம். ஆனால் சிலருக்கு நீண்டகாலத்திற்கு பின்னரே வருவதுண்டு. நோய் வந்தால் கூட பெரும்பாலும் 6 மாத காலத்தில் குணமாகிவிடும் என்பது நம்பிக்கையுட்டும் விடயமாகும். ஒரு சிலரின் சிகிச்சையை நீண்டகாலத்துக்கு தொடர வேண்டியிருப்பதுண்டு.

இந் நோய்க் கான சிகிச்சையை பொறுத்த வரை இந்நோய் பற்றிய பயங்கள் நீங்கி தெளிவு ஏற்பட்டாலேயே பெருமளவு குறைந்து விடும். பாதிப்பை ஏற்படுத்திய சந்தர்ப்பமே இதற்கு காரணமே என தெளிவுறுவதும், இன்நோயால் பாதிக்கப்பட்டவர்கள் சமூகத்தில் பெருமளவில் இருப்பதை அறிவதும், அவர்கள் காலக்கதியில் குணமாகி மற்றவர்கள் போல சந்தோசமாக வாழ்வதை உணர்வதும் நோயாளியின் மனத்தில் நம்பிக்கையை ஊட்டி விரையில் குணமாக்க உதவும்.

இதைத் தவிர எமது சமூகத்தில் காலம் காலமாக கடைப்பிடிக்கப்படும் சமய, கலாசார ரீதியான பழக்கங்களும் நடைமுறைகளும் இந் நோயிலிருந்து விடுபட பெருமளவு உதவுகின்றன. பகுத்தறிவு வாதம் பேசி அவற்றை கண்டிக்கவோ பெற தயங்கவோ வேண்டியதில்லை. கோயில் செல்வதும் நேர்த்திக் கடன் வைப்பதும் மந்திரித்து நூல் கட்டுவதும் அபிஷேகம் செய்வதும் நல்ல பயனை அளிக்கக் கூடும். காய்வெட்டுதல் கழிப்புக் கழித்தல், பார்வை பார்த்தல், மருந்து விழுத்தல் போன்ற முறைகளை எமது பாராம்பரிய வைத்தியர்கள் மிகவும் சிறப்பான முறையில் பயன்படுத்தி பலரை குணமாக்குறார்கள் என்பதையும் குறிப்பிட்டே ஆகவேண்டும். ஒவ்வொருவரும் தத்தமது மதரீதியான தமக்கு நம்பிக்கையுள்ள பாரம்பரிய முறைகளை பெறுவதே இதிலிருந்து விடுபட சிறந்த வழியாகும்.

இதைத் தவிர தனது குடும்பத்தில் அல்லது சமூகத்தில் உள்ள அனுபவசாலியான முதியவரை அனுகி அவருடன் தனது பயங்கர அனுபவங்களை பகிர்ந்து கொள்வதன் மூலம் தனக்கேற்பட்ட மனப் பாதிப்பை குறைத்துக்கொள்ள முடியும்.

வைத்திய முறையைப் பொறுத்தவரையில் மருந்துகளுக்கு மேலாக உளவளத் துணையாளருடன் மனம் விட்டுப் பேசுவது முக்கிய இடத்தைப் பிடிக்கிறது. இது உள ஆலோசனையல்ல, உளவளத் துணையாளருடன் கலந்துரையாடுவதன் மூலம் தனக்கு ஏற்ற முறையைத் தானே சுயகண்டுபிடிப்புச் செய்யும் நம்பிக்கையான வழிமுறையாகும்.

மனத்தையும் உடலையும் தளரச் செய்யும் பயிற்சிகள் மூலம் மனஇறுக்கத்திலிருந்து விடுபடுவதும் கூட ஒரு வகைச் மருத்துவச் சிகிச்சை முறைதான். சுவாசப் பயிற்ச, சாந்நியானம், தியானமும், மந்திரம் ஜெபித்தல் போன்ற வழிமுறைகள் நல்ல பலன் அளிக்கும்.

இத்தகைய எளிய வழிமுறைகள் மட்டுமே பெரும்பாலனவர்களைக் குணமாக்கப் போதுமானது. நித்திரையின்மை, கடுமையான மனச்சோர்வு, பயங்கரக் கனவுகள் போன்றவை ஒருவரைத் துன்பப்படுத்துமேயானால் சில மாத்திரைகளையும் சில காலத்திற்கு உபயோகிக்க நேரலாம்.

அடக்குமுறையால் வெடித்த உள்நாட்டுப் போர் காரணமாக இழப்புகளும், துன்பங்களும், நெருக்கீடுகளும் எமது மக்களை வதைக்கிறது. உயர் பண்பாடும், கலாசார மேன்மையும், கல்விச் சிறப்பும், அமைதியான வாழ்க்கை முறையும் கொண்ட எமது சமுதாயத்தின் கட்டுக்கோப்பு உடைந்து சிதிலமடைந்து வருகிறது. இடப்பெயர்வு தினசரிக் கடமை போலாகியிருந்தது. இவற்றால் மேற் கூறிய நெருக்கீட்டுக்குப் பிற்பட்ட மனவடு நோய் மாத்திரமின்றி மனப் பதகளிப்பு (Anxiety) மனச்சோர்வு (Depression) பீதிநோய் (Phobia) போன்ற வேறுபல உளம் சார்ந்த நோய்களுக்கும் எமது மக்கள் ஆளாகித் தவிக்கிறார்கள் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

Dr. M.K. முருகானந்தன்


நாட்டில் பொருளாதார அபிவிருத்தி ஒன்று காணப்பட்ட போதும் அது பெருமவில் சேவைத்துறை வளர்ச்சியினாலேயே ஏற்பட்டதாக இருந்தது. அதனைத் தொடர்ந்து கைத்தொழில் துறை காணப்பட்டது. ஆனால் நாட்டின் பெரும்பாலான மக்கள் தமது ஜீவனோபாயத்தினை கொண்டு செல்ல நம்பியிருக்கும் விவசாயத்துறை போதியளவு வளர்ச்சியினை கொண்டிருக்கவில்லை. 2003ம் ஆண்டில் நாட்டின் மொத்த தேசிய உற்பத்தி வளர்ச்சியில் சேவைத்துறை 7% மாகவும் கைத்தொழில்துறை 5% மாகவும் விவசாயத்துறை 1.5% மாகவும் இருந்துள்ளது.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு சேவைத்துறை மற்றும் கைத்தொழில்துறை முக்கியமானவை என்றபோதிலும் விவசாயத்துறை புறக்கணிக்கக் கூடிய தொன்றன்று வளர்ச்சியடைந்து வரும் நாடான நம்நாட்டில் தற்போதும் கூட பெருமளவு மக்கள் இந்த விவசாயத்துறையினையே நம்பிருக்கின்றனர். சேவைத்துறை, கைத்தொழில்துறை, அரசவேலை வாய்ப்பு போன்றவற்றை பெறமுடியாதவர் எல்லோரும் நம்பியிருக்கும் ஒரு துறையாக இது காணப்படகின்றது. மறு புறத்தில் நாட்டிற்குத் தேவையான பல அடிப்படை உணவுப் பொருட்களின் வழங்கலும் இந்த விவசாய துறையில் தான் தங்கியிருக்கின்றது.

நம்நாட்டின் விவசாய உற்பத்திப் பொருட்களினைப் பொறுத்தவரை ஒரு அசாதாரண நிலையொன்று காணப்படுகின்றது எனலாம். ஒரு பக்கம் விவசாயிகள் உரியவருமானமின்றி பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் இருக்கின்றனர். மறுபுறம் நாட்டில் விவசாய நுகர் பொருட்களின் விலையும் மிகவும் அதிகரித்து காணப்படுகின்றன. இங்கு விவசாயப் பொருட்களை உற்பத்தி செய்வோர் வருமானக் குறைவினால் கஷ்ரப்பட்டு நுகர்வோர் அதிகரித்த விலையினால் ஏற்படும் வாழ்க்கை செலவு அதிகரிப்பினால் அவதியுறும் நிலையொன்று காணப்படுகின்றது. இந்த நிலையில் விவசாயத்துறையில் முக்கிய கவனம் செலுத்தி விவசாயத்தினை தமது ஜீவனோபாயத்திற்கு நம்பியிருப்பவர்களை காப்பாற்றும் அதேவேளை நுகர்வோருக்கும் நியாயவிலையில் விவசாய பொருட்களினை பெற்றுத்தர வேண்டிய கடமையொன்று உண்டு.

நாட்டில் பொருளாதாரமானது எவ்வளவு தூரம் வளர்ச்சியடைந்த போதும் அதன் பயன்கள் சமூகத்தில் எல்லா மட்டத்தினரையும் சென்றடையாத போது அது எதிர்பார்த்த பயன்களை அடைவதில்லை. கடந்த ஐக்கிய தேசிகட்சியின் ஆட்சியின் போது இலங்கைப் பொருளாதாரம் சிறப்பான வளர்ச்சியொன்றினைக் காட்டியிருந்தது. அதற்கு முன்னைய ஆட்சிக்காலத்தில் 2001 ஆம் ஆண்டு எதிர்கணிய வளர்ச்சியினை காட்டிய பொருளாதாரம் பின்னர் 5-6% வளர்ச்சியினை காட்டியிருந்ததுடன் பொருளாதார முன்னேற்றத்தின் முக்கிய சுட்டிக்காட்டிகளான சென்மதி நிலுவை, பணவீக்கம், வட்டிவீதம், அன்னிய செலாவணி வீதம், அன்னிய செலாவணி இருப்புகள் போன்றவையெல்லாம் சாதகமான போக்குகளைக் காட்டியிருந்தன. இதேபோன்றதொரு நிலமைதான் இந்திய பொருளாதாரத்திலும் அன்மைக்காலத்தில் காணப்பட்டது. ஆனால் அந்த பொருளாதார வளர்ச்சியானது தமது ஆட்சிக்கே ஆதரவு கொடுப்பார் என எதிர்பார்த்த ஐக்கிய தேசியக்கட்சி அரசு இலங்கையிலும், B.J.P அரசு இந்தியாவிலும் படுதோல்வியை அடைந்திருந்தன. இவர்களின் தோல்விக்கு பல்வேறுபட்ட காரணிகள் காரணமாக இருந்தபோதும் இருநாடுகளிலுமே குறிப்பிடப்பட்ட முக்கிய காரணியாக அமைந்தது நாட்டின் அடிமட்டத்தில் இருந்தவர்கள் இந்த பொருளாதார நன்மைகளைப் பெறாமல் போனது என்பது தான் இது தோல்வியைடைந்த கட்சிகள் உட்பட எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதொன்றாகும்.

இந்த வகையில் நாட்டின் அடிமட்ட மக்களின் வளர்ச்சி என்பது தொடர்-




பில் முக்கிய இடத்தினை வகிப்பது விவசாய வளர்ச்சியே ஆகும். ஏனெனில் நாட்டில் பெரும்பாலான மக்கள் குறிப்பாக பொருளாதார நிலையில் பின்தங்கி காணப்படும் சாரார் விவசாயத்தினை நம்பியிருப்பவர்களாகவே காணப்படுகின்றனர். அதிலும் குறிப்பாக நம்நாட்டில் வடக்கு கிழக்கு மக்களைப் பொறுத்த வரை விவசாய மேம்பாடு என்பது அவர்களின் உடனடித் தேவையாகும். நாட்டில் சமாதானம் ஏற்பட்டு மக்களின் வாழ்க்கை ஓரளவு இயல்பு நிலையினை அடைந்திருந்தாலும் அவர்களது வாழ்க்கை ஓரளவு இயல்பு நிலையினை அடைந்திருந்தாலும் அவர்களது பொருளாதாரநிலை மிகவும் பின்னடைந்து தான் காணப்படுகின்றது. அத்துடன் வடக்கு கிழக்கில் வாழ்வோரில் ஒரு சாரார் வெளிநாடுகளில் இருந்து தமது உறவினர்கள் அனுப்பும் பணத்தினைக் கொண்டு உழைப்பின் கஸ்ரம் தெரியாமல் செலவு செய்து வாழ்ந்து வருகின்றனர். இது சமூகத்தில் புதியதொரு ஏற்றத்தாழ்வினை ஏற்படுத்தியுள்ளது என்பதுடன் இந்த ஏற்றத்தாழ்வு உழைக்க வசதியில்லாதவர்களிற்கும் தமது உழைப்பிற்கேற்ப வருமானம் கிடைக்காமல் தவிக்கும் மக்களின் வாழ்க்கையினையும் மேலும் கடினமாக்கி உள்ளது.

நாட்டில் யுத்த நிறுத்தம் ஒன்று வந்தவுடன் தமது தொழில்களையும் வியாபாரங்களையும் வடக்கு கிழக்கிற்கு விஸ்தரிப்போம் என்று ஓடிச் சென்றவர்கள் எல்லேரும் தமது உற்பத்தி பொருட்கள் சேவைகளினை வடக்கு கிழக்கு மக்களிற்கு விற்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றனரே ஒழிய அம்மக்களின் வருமானத்தை அதிகரிப்பதற்குரிய தொழில்துறைகளை ஆரம்பிக்கவோ அல்லது வேறு உரிய நடவடிக்கைகளை எடுத்ததாகவோ தெரியவில்லை. முதலில் மக்களின் வருமானம் அதிகரிக்க வழிசெய்ய வேண்டும் அப்போது தான் அவர்களது கொள்வனவு சக்தி அதிகரித்து அவர்கள் இந்த புதிய நிறுவனங்களின் பொருட்கள் சேவைகளினை கொள்வனவு செய்ய முன்வருவர். தற்போதய நிலையில் சமூகத்தின் சிறியதொரு சாரார் தமது பண பலத்தினைக் கொண்டு ஆடம்பர வாழ்க்கையினை அனுபவித்துக் கொண்டிருக்க மறுபுறத்தில் பெரும்பாலான மக்கள் யுத்தத்தின் அழிவுகளில் இருந்து மீள முடியாதவர்களாகவும் தமது அடிப்படை பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்ள முடியாதவர்களாகவும் இருக்கின்றனர்.

இந்த வகையில் இம்மக்களின் தற்போதய பொருளாதார நிலையினை மேம்படுத்த மேற்கொள்ள வேண்டிய மிகவும் அடிப்படை விடயம் விவசாய அபிவிருத்தியினை உறுதிப்படுத்துவதாகும். குறிப்பாக விவசாயம், மீன்பிடி. கால்நடை வளர்ப்பு, விவசாயம் சார் கைத்தொழில்கள் (விவசாய வெளியீடுகளை உள்ளீடுகளாக கொண்ட கைத்தொழில்கள்) என்பவற்றினை மேம்படுத்த வழி செய்வதாகும். தற்போது நாட்டில் இத் தொழில் துறையானது சமூகத்தின் கணிசமான பகுதினினரால் மேற்கொள்ப்படுவதொன்றாக இருந்த போதும் அவை உரிய முறையில் மேற்கொள்ளப்படவில்லை. அதனால் இவற்றினை மேற்கொள்பவர்களும் இவற்றினை நுகரும் ஏனைய மக்களும் உரிய பயனைப் பெறமுடியாதவர்களாக இருக்கின்றனர்.

எந்தவொரு பொருளும் உற்பத்தி செய்யப்படும் போது அது உரிய திட்டமிடலினை அடிப்படையாக கொண்டதாக இருக்கவேண்டும். வேறு ஒருவகையில் குறிப்பிடுவதாயின் அதாவது சந்தைப்படுத்தல் கோட்பாட்டின் அடிப்படையில் எடுத்துக் கூறுவதாயின் தேவையொன்று அடையாளம் காணப்பட்டு அதனைப் பூர்த்தி செய்யும் வகையில் தான் உற்பத்தியானது மேற்கொள்ளப்படல் வேண்டும். ஆனால் நம்மூரில் விவசாயத்தினை எடுத்துக் கொண்டால் தனிப்பட்டவர்கள் எழுந்த வாரியாக மேற்கொள்ளப்படும் ஒரு உற்பத்தியாகவே விவசாயம் காணப்படுகிறது. இதனால் தான் பல சந்தர்ப்பங்களில் விவசாய அறுவடைகளை உரிய விலையில் விற்க முடியாமல் உள்ளது. ஒரு முறை குறிப்பிட்ட விவசாயப் பொருட்களுக்கு நல்ல விலை காணப்பட்டால் பெரும்பாலான விவசாயிகள் அடுத்த முறை அதனை பயிர்செய்வதும் அதனால் விலை மிகவும் குறைந்து விவசாயிகள் கஸ்ரப்படுவதும் நாமறிந்த விடயம்.

பெரும்பாலான விவசாயப் பொருட்கள் விரைவில் பழுதடைந்து போகக் கூடியவை என்பதாலும் அவற்றினை பழுதடையாமல் களஞ்சியப்படுத்தி வைக்கும் வசதிகள் போதிய அளவில் இல்லாத நிலையும் களஞ்சியப்படுத்தி வைத்திருப்பது விலைகூடும் போது விற்குமளவிற்கு பண பலம் பல விவசாயிகளிடம் சந்தைப்படுத்துனர்களிடம் இல்லாமையும் விவசாயப்பெருட்களிற்கு அவற்றின் நேரடி பாவனை தவிர்ந்த மாற்றுப் பாவனைகள் உரியளவில் நாட்டில் வளராமையும் இந்த நிலையினை மோசமாக்கி விடுகின்றன.

இந்த வகையில் பொருட்களின் தேவையானது அளவிடப்பட்டு அதற்கேற்றவாறு விவசாய உற்பத்தி நெறிப்படுத்தப்படல் வேண்டும். அவை மேலதிக விளைச்சலை தரும் போது அவற்றைத் கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்தவோ அல்லது அழித்துவிடவோ அல்லது செய்முறைக்குட்படுத்தி முடிவுப் பொருட்களாக மாற்றி சந்தைப்படுத்த ஆவன செய்யப்படல் வேண்டும்.

அடுத்ததாக எல்லா பயிர்களும் எல்லாப் பிரதேசத்திலும் எல்லா வகை மண்ணிலும் சிறந்த விளைச்சலைத் தருவதில்லை. இந்த வ்கையில் மண்பரிசோதனை, விளைவிக்கக் கூடிய தன்மை போன்ற ஆய்வுகள் செய்யப்பட்டு உரிய இடத்தில் உரிய பயிர்கள் செய்கை பண்ணப்படல் வேண்டும். நாட்டில் விவசாயமானது மிகவும் பின்தங்கிய முறைகளினைப் பயன்படுத்தியே மேற்கொள்ளப்படுகின்றது. கல்வியறிவு என்பது வேறு தொழில்களை மேற்கோள் அவசியமானது என்றும் கல்வியறிவு இல்லாதவர்களே விவசாயம் செய்வதென்றும் அல்லது விவசாயம் செய்ய கல்வியறிவு தேவையில்லை என்றும் ஒரு எண்ணப்பாடு நம்மிடையே உள்ளது. இது தவறான ஒரு எண்ணமாகும். எந்தவொரு அறிவியல் உள்ளீட்டுடன் மேற்கொள்ளப்படும் போது சிறந்த பயன்பாடுகளை பெற முடியும். இந்த வகையில் எல்லோரிற்கும் பயன்படக்கூடிய முறையில் விவசாயக் கல்வியானது உள்ளுர் ஆய்வுகள் கண்டுபிடிப்புகள் என்பனவற்றின் உதவியுடன் எல்லா மட்டத்தவர்களுக்கும் கற்கும் வகையில் புகுத்தப்படல் வேண்டும். இவ்வாறு அறிவியல் உள்ளீடுகளுடன் விவசாயமானது மேற்கொள்ளப்படும் போது சிறந்த விளைச்சலைக் குறைந்த செலவுடனும் குறைந்த உடலுழைப்புடனும் அடைய முடியும். நம்நாட்டில் கல்விகற்ற சாரார்கட்கும் விவசாயம் மீன்பிடி, கால்நடைவளர்ப்பு போன்ற தொழில்களைச் செய்வோர்களுக்குமிடையே அந்தஸ்து ரீதியிலும் அறிவு ரீதியிலும் பாரிய வேறுபாடு காணப்படுகின்றது. இது தவிர்க்கப்படல் வேண்டும்.

நம்நாட்டு விவசாயத்தில் உள்ள இன்னுமொரு குறைபாடு ஒரு சில பொருட்களில் தங்கியிருத்தலாகும். பலர் ஒன்று அல்லது மிகச்சில விவசாயப்பொருட்களை மட்டுமே விவசாயம் செய்பவர்களாக இருக்கின்றனர். இந்த வகையில் அந்த ஒரு சில பயிர்களின் அறுவடையின் போது உரிய விலை கிடைக்காமல் போகும் போது அல்லது இயற்கை அனர்த்தங்களில் அந்த விவசாயப் பயிர்கள் பாதிப்படையும் போது அந்த விவசாயிகள் பாரிய பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

உதாரணமாக வட கிழக்கில் பல விவசாயிகள் நெல்லை மட்டும் அல்லது புகையிலையை மட்டும், வெங்காயத்தை மட்டுமென ஒரு பயிரில் தங்கியிருந்து பொதுவாக காணப்படக் கூடிய தொன்றாகும். இந்த வகையில் விவசாயப் பயிர்கள் பன்முகப்படுத்தல் எனும் போது அவை பலதரப்பட்ட மரக்கறி பயிர்கள், பழவகைகள், பணப்பயிர்கள், மூலிகை மரங்கள், மற்றும் செடிகள், பூமரங்கள், விறகிற்கான மரங்கள் என பல வகைப்பட்டவையாக அமையமுடியும்.

விவசாய மேம்பாடு தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய மிக முக்கியமான விடயம் அறுவடை பொருட் சேகரிப்பு முறையினை அபிவிருத்தி செய்தலாகும். நம் நாட்டு விவசாயத்தை பொறுத்த வரை குறிப்பாக வடக்கு கிழக்கில் சரியான சேகரிப்பு முறைகள் காணப்படாமையினால் பலர் சரியான முறையில் வெவ்வேறுபட்ட விவசாய முயற்சிகளில் ஈடுபட முடியாதவர்களாக இருக்கின்றனர். பல பகுதிகளில் சில அளவில் மரக்கறி மற்றும் ஏனைய பயிர்களை செய்பவர்கள் அப்பயிர்களை பயிரி-

(தொடர்ச்சி பக்கம் 14இல்)

# பெருந்தோட்டப் பொருளாதாரம் சில அவதானங்கள்...



தெளிவத்தை ஜோசப்

இலங்கை பல நூற்றாண்டு கால வரலாற்றினையும் அரசியல், கலாசாரப் பின்னணியினையும் கொண்ட ஒரு சிறிய நாடு.

இலங்கையின் ஏடறிந்த வரலாற்றில் ஏறக்குறைய இருபத்தைந்து வீதம் அந்நிய ஆதிக்கத்தின் கீழ் குறிப்பாக மேற்கு ஐரோப்பியர்களால் ஆளப்பட்ட சரித்திரத்தையே உள்ளடக்குகின்றது.

போர்த்துக்கேயர் (1505 - 1658) ஒல்லாந்தர் (1658 - 1796) ஆகியோர் இலங்கையைக் கைப்பற்றி ஆண்ட போதும், பிந்தி வந்த பிரித்தானியர் (1796 - 1948) முந்தியவர்களில் இருந்து மிகவும் வேறுபடுகின்றனர்.

நிலப்பிரபுத்துவ முறையை ஆதாரமாகக் கொண்டு புராதனகிராமிய முறையில் கட்டி எழுப்பப்பட்ட இலங்கையின் பொருளாதார அடித்தளத்தை மாற்றியமைக்கும் முயற்சியில் பிரித்தானிய ஏகாதிபத்தியம் வெகுவாக ஈடுபட்டது.

நவீன சந்தை மயமாக்களையே நோக்கமாகக் கொண்ட தமது அரசியலுக்கேற்ப ஏற்றுமதியையே ஆதாரமாகக் கொண்ட முதலாளித்துவப் பொருளாதாரத்தை அறிமுகப்படுத்தியதன் மூலம் இலங்கையில் இருந்து வந்த நிலப்பிரபுத்துவப் பொருளாதார அமைப்பை பலம் குன்றச் செய்தது. ஆனாலும் முற்றாக இல்லாதொழிக்க முடியவில்லை. அதன் விளைவாக ஒரு புறம் பாரம்பரியமாகப் பேணப்பட்ட நிலப்பிரபுத்துவ பொருளாதாரமும் மறு புறம் புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட முதலாளித்துவ பொருளாதாரமுமாக இரு இரட்டைப் பொருளாதார முறை உருவெடுத்தது.

இலங்கையில் இதுவரைகால பொருளியல், சமூகவியல் அமைப்புக்கள் யாவும் பழைய கிராமிய முறையில் கட்டிஎழுப்பப்பட்டவை. புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட முதலாளித்துவ பொருளாதாரம் அதன் வரவையும் வளர்ச்சியையும் வரவேற்கின்ற, வளர்த்தெடுக்கின்ற ஒரு அரசியல் சமூகக் கட்டு எதிர்பார்த்தது. இப்புதிய பொருளாதார உருவாக்கம் தனது எழுச்சிக்காக இரண்டு முக்கிய அம்சங்களை வேண்டி நின்றது. ஒன்று வெளிநாட்டு முதல். மற்றது வெளிநாட்டு உழைப்பு.

முதலின் உரிமையாளராக பிரிட்டிஷாரும், உழைப்பின் உரிமையாளராக இந்தியத்தமிழரும் இந்தப் புதிய பொருளாதார அமைப்பின் எழுச்சிக்கான பங்காளர்கள் ஆனார்கள்.

இவ்வாறு ஒரு புதிய பொருளாதாரத்தின் எழுச்சியினை மையமாகக் கொண்டே இன்று இலங்கையில் தோட்டத் தொழிலாளர்கள் - மலையக மக்கள் - என வழங்கப்படும் ஒரு சமூகத்தினரின் வரலாறு இலங்கையில் ஆரம்பமாகிற்று.

எந்த ஒரு நாட்டிலும் குடிப்பெயர்வு நிகழ்வதற்கு அந்த நாட்டின் அன்றைய அரசியல், சமூக, பொருளாதார சூழ்நிலைகளே காரணமாகின்றன.

ஒரு நாட்டிலிருந்து மக்கள் இன்னொரு நாட்டிற்கு, அல்லது ஏதாவதொரு நாட்டிற்கு இடம் பெயருகின்றார்கள் என்றால் அந்த நாட்டில் அவர்கள் வாழ முடியாதபடியான ஒரு சூழல் உருவாகியிருக்கவேண்டும். இப்படியான தொரு சூழலை தள்ளும் காரணி என்பர் சமூகவியல். ஆய்வறிஞர்கள் (Push Factor)

இப்படி வாழமுடியாதபடியான சூழல்கள் எதுவுமின்றி, இருக்கும் நாட்டைவிடப் போகும் நாட்டின் வாழ்க்கை வசதிகள், கூடுதலான நன்மைகளைத் தரும் என்கின்ற கவர்ச்சியால் இடம் பெயர்வதை இழுக்கும் காரணி என்பர். (Push Factor)

எந்த ஒரு குடிப்பெயர்வு நிகழ்விலும் இந்த இரண்டு காரணிகளில் ஏதாவது ஒன்று மற்றதைவிட கூடிய அழுத்தம் கொண்டதாக இருக்கும் என்றாழும் இரண்டுமே செயற்படுவதையும், செயல்பட்டிருப்பதையும் நாம் பொதுவாகக் காணலாம்.

இலங்கையில் இம்மக்களின் வருகை அதுவும் அதிக அளவிலான வருகை பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இடம் பெற்றுள்ளது. இதன் அடிப்படையில் அந்த நாட்களின் இலங்கை- இந்தியா என்பவற்றின் அரசியல், சமூகச் சூழல்களை அவதானிப்பது அவசியமாகிறது.

அந்த நாட்களில் இந்தியா ஒரு மானிய சமுதாய அமைப்பினைக் கொண்டிருந்தது. விவசாயத்தை மையமாகக் கொண்ட கிராமிய பொருளாதரம். நிலச் சொத்துரிமையுடைய பண்ணை முறையும் இவர்களின் கீழ் கூலிக்கு உழைக்கும் நில உரிமையற்ற விவசாயிகளையும் கொண்ட - சாதிப் பிரிவுகளினால் கட்டுப்படுத்தப்பட்ட சமூக அமைப்பு என்பவையே இந்தக் கிராமியப் பொருளாதாரத்தின் அம்சங்கள், ஒவ்வொரு கிராமமும் சுயதேவைப் பூர்த்தியுடையதாகவே இருந்தது.

ஆனால் அந்நிய ஆதிக்கத்தின் விளைவாக இக்கிராமியக் கட்டுக்கோப்பு சீர் குலையத் தொடங்கியது. ஆங்கில ஆட்சியின் கீழ் கைத்தொழில் புரட்சியின் செல்வாக்கு வெகுவாகப் பரவியது. இது வரை விவசாயத்துக்கு - குறிப்பாக நெல் உற்பத்திக்கு அளிக்கப்பட்டு வந்த முக்கியத்துவம் கைத்தொழில் துறைக்கும், கைத்தொழில்சார் பயிர் உற்பத்திக்கும் அளிக்கப்பட்டது. ஆங்கிலேயருக்கு நெல் முக்கியமல்ல. அதனால் அவர்கள் நெல் உற்பத்தி பற்றி அக்கறைப்பட வில்லை அக்காலத்தில் பிரித்தானிய தன் பொருள்தாரத்தை நெசவுத் தொழில் மூலமே கட்டி எழுப்பி வந்தது. அது தன் குடியேற்ற நாடுகளில் இதற்கான மூலப்பொருட்களைப் பொறுவதில் விழிப்புடன் செயற்பட்டது. இந்தியா பருத்தி உற்பத்திக்கு சிறந்து விளங்கியதால் ஆங்கிலேயர்கள் இந்தியாவில் பருத்தி உற்பத்தியை முதன்மைப்படுத்தினர். இவ்வாறான செயற்பாடுகளால் கைத்தொழில்துறை வளர்ச்சியும், நகராக்கமும் பெருகவே விவசாயத்துறை புறக்கணிக்கப்பட்டது.

நகராக்க விஸ்தரிப்பும், கைத்தொழில்துறை வளர்ச்சியும் ஆங்கிலேயரின் தேவைகளைப் பூர்த்தி செய்தன. நகர சனத்தொகை பெருக்கம் தங்களது உணவுத் தேவைகளுக்கு கிராமத்தை எதிர் பார்க்க வேண்டிய சூழல் உருவாகியிருந்தது. விவசாயம் சீராகப் பராமரிக்கப்படாததால் இருக்கும் பொருட்களுக்குக் கூடிய தேவையும், விலை நிர்ணயமும் விலை உயர்வும் ஏற்பட்டன. பண்டமாற்று முற்றாக நிராகரிக்கப்பட்டு நாணயப் புழக்கம் அறிமுகம் கொண்டது. உணவுப் பற்றாக்குறை இறக்குமதிக்கு வழிகோலியது. இவ்வாறு ஆங்கிலேயரின் (இந்திய) புதிய பொருளாதார அறிமுகம் காலம் காலமாகப் பேணப்பட்டு வந்த இந்தியக் கிராமிய பொருளாதார அமைப்பை சீர் குலைத்தது. இப்பொருளாதாரச் சீர்குலைவு இந்திய சமூக அமைப்பினை ஆட்டம் காணச் செய்தது.

கிராமப் பொருளாதார அமைப்பில் உயர் நிலையில் இருந்தவர்களுக்கு ஆங்கில ஆட்சியாளர்களின் புதிய பொருளாதார அமைப்பின் கவர்ச்சி வரவேற்புக் கூறி உள்ளிழுத்துக் கொண்டது.

சமூக அமைப்பில் முக்கியமான இடம் கொண்டிருந்த சாதிப்பிரிவின் கீழ் மட்டத்தினரும் நிலமற்ற- உழைப்பை மட்டுமே நம்பியிருந்த ஏழை விவசாயிகளும் இப்புதிய சூழல்களுக்கு ஈடு கொடுக்க முடியாமல் அனாதரவாக நிற்கின்றனர்.

இத்தகைய சூழல் வேலையற்றது, பட்டினியால் வாடும் ஒரு மக்கள் கூட்டத்தை ஒவ்வொரு கிராமத்திலும் உருவாக்கி வைத்திருந்தது.

> **ஆங்கில சாம்ராஜ்யம் தென்கிழக்காசிய நாடுகளில் பரவி இருந்தமையால் ஒரு நாட்டிலிருந்து பிரிதொரு நாட்டுக்கு மக்களைத் தருவிப்பதில் சிரமங்கள் இருக்கவில்லை. இந்தியாவில் இருந்து குறிப்பாகத் தமிழ் நாட்டுக் கிராமங்களில் இருந்து குறைந்த கூலிக்கு பெருந்தொகையான மக்கள் கிடைக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படவே தென்னிந்தியத் தமிழ் மக்கள் இலங்கையின் பெருந்தோட்டப் பயிர்செய்கையின் உழைப்புச் சக்தியாக வர வழைக்கப்பட்டனர்.**
>
> **இதுவே மலையக மக்கள் என்றழைக்கப்படும் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைத்துறைத் தொழிலார்களின் வரலாறு இந்நாட்டின் சரித்திரத்தின் இடம் பெற்ற கதையாகும்.**

இலங்கையில் 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பப்பகுதியிலேயே (1815) அதுவரையும் ஆங்கிலேயருக்கு உட்படாதிருந்த கண்டி ராஜ்யமும் கைப்பற்றப்பட்டு முழு இலங்கையும் ஆங்கிலேய ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டது. முழு இலங்கையையும் தங்களுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த பிறகே ஆங்கிலேயர் நாம் ஆரம்பத்தில் கண்டது போன்ற அரசியல் பொருளாதாரத் துறைகளில் புதிய மாற்றங்களைக் கொண்டு வந்தனர்.

கண்டியும் கண்டியைச் சூழவுள்ள மலைப்பகுதியும் காடுகள்அடர்ந்த மனித சஞ்சாரமற்ற பிரதேசங்களாக இருந்தன. காடுகளை அழித்து கோப்பிப் பயிர் செய்கைக்கு ஏற்ற நிலமாக அவற்றை மாற்றவும் மலைகளை குடைந்து பாதைகளை போடவும் நிரந்தரமான தொழிலாளர்கள் கூட்டம் தேவைப்பட்டது. ஆனால் சிங்கள விவசாயிகளுக்கு இப்படியானதொரு கடினமான பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டிய அவசியம் இருக்கவில்லை. சிங்கள மக்கள் தமது கிராமிய சமூக அமைப்பிலிருந்து முற்றாக விடுபட்டு வேறு புதிய இடங்களில் குடியேறக் கூடிய நிலையில் இருக்கவில்லை. கிராமிய சமூகக்கட்டுப்பாட்டு முறைகளாலும் நிலத்தாலும் தத்தமது கிராமங்களுடன் பிணைக்கப்பட்டவர்களாகவே இருந்தனர். மேலும் புதிய பொருளாதார அமைப்பின் சவாலையும் தேவையையும் பூர்த்தி செய்யக் கூடிய அளவில் பெருந்தொகையான மக்கள் இலங்கையில் உருவெடுத்திருக்கவில்லை.

தேசிய மக்களின் நாட்டுப்பற்றும் சுய கௌரவ உணர்வுமே அந்நியரான ஆங்கில முதலாளிகளின் கீழ் வேலை செய்ய அவர்களை விடவில்லை என்னும் பொதுவான அபிப்பிராயமும் ஒரு சில வரலாற்றசிரியர்களின் கூற்றும் ஆதாரமற்றதும் உண்மைக்குப் புறம்பானதுமாகும்.

நவீன பொருளாதார அமைப்பின் எழுச்சிக்கு பிரத்தியேகமான ஒரு தொழிலாளர் கூட்டம் தேவைப்பட்டது. சுதேச மக்கள் இத் தேவைக்குப் பொறுத்தமற்றுப் போகவே அந்நிய தேசம் ஒன்றிலிருந்து இவ்வுழைப்புச் சக்தியை தருவிக்க வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாயிற்று.

ஆங்கில சாம்ராஜ்யம் தென்கிழக்காசிய நாடுகளில் பரவி இருந்தமையால் ஒரு நாட்டிலிருந்து பிரிதொரு நாட்டுக்கு மக்களைத் தருவிப்பதில் சிரமங்கள் இருக்கவில்லை. இந்தியாவில் இருந்து குறிப்பாகத் தமிழ் நாட்டுக் கிராமங்களில் இருந்து குறைந்த கூலிக்கு பெருந்தொகையான மக்கள் கிடைக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படவே தென்னிந்தியத் தமிழ் மக்கள் இலங்கையின் பெருந்தோட்டப் பயிர்செய்கையின் உழைப்புச் சக்தியாக வர வழைக்கப்பட்டனர்.

இதுவே மலையக மக்கள் என்றழைக்கப்படும் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைத்துறைத் தொழிலார்களின் வரலாறு இந்நாட்டின் சரித்திரத்தின் இடம் பெற்ற கதையாகும்.

இலங்கையின் புதிய கொலனித்துவ அமைப்பானது "ஏற்றுமதியை" அதன் பொருளாதாரத்தின் உயிர் நாடியாக ஆக்கியபோது தன்னிறைவையே முக்கியமாகக் கொண்டிருந்த பழைய பொருளாதார அமைப்பு உருக்குலைந்தது.

இதன் விளைவாக இறக்குமதி இந்த நாட்டிற்கு அத்தியாவசியமானதாயிற்று. ஆக மொத்தத்தில் இந்த நாட்டின் சகல நடவடிக்கைகளும் - உற்பத்தி - ஏற்றுமதி - உலகசந்தை - ஆகியவற்றிலேயே தங்கியிருந்தன.

உற்பத்தியும் ஏற்றுமதியும் தேயிலையும், றப்பருமாகவே இருந்தமை பெருந்தோட்டப் பொருளாதாரத்துக்கு முதன்மையும், முக்கியத்துவத்தையும் கொடுத்தன.

ஏற்றுமதி மூலம் இலங்கைக்குக் கிடைத்த அந்நியச் செலாவணியில் 90% தேயிலை, றப்பர் தென்னை

(தொடர்ச்சி பக்கம் 14இல்)

# கடற்புறத்தில் வாழ்க்கையின் தேடல்



**1980களின் ஆரம்பப் பகுதிக்கு பின்னர் ஸ்ரீலங்காவின் படையினரின் அத்துமீறல்கள் கெடுபிடியில் மீன்களுக்கு மட்டுமல்ல மீனவர்களுக்கும் பெரும் துன்பம் கொடுத்தார்கள். போரின் வன்முறை எங்கும் வியாபித்தது. கரையோர மீனவர்களின் வாழ்க்கையில் பெரும் துன்பத்தையும் துயரத்தையும் கொடுத்தது**

**இலங்கையின் வடகிழக்குப் பிரதேசத்தில் ஏற்பட்ட போரியல் நடவடிக்கைகள் மனித வாழ்க்கையில் மட்டுமல்ல பௌதிக வளப்பரம்பலிலும் அவற்றின் பயன்பாட்டிலும் கூட தாக்கம் செலுத்தியுள்ளன.**

**கடல்வளம் போரியல் நடவடிக்கையால் மிக மோசமாகவே அழிவுற்றுள்ளன.**

சுற்றுச் சூழல் பற்றிய மக்களின் விழிப்புணர்வையும் அரசுகளின் கரிசனைகளையும் செயற்பாட்டையும் வேண்டி யூன் 5ந் திகதியை உலக சுற்றுச் சூழல் தினமாக ஐக்கிய நாடுகள் சபை கொண்டாடி வருகிறது. ஒவ்வொரு வருடமும் அக்காலப் பகுதியில் முன்னுரிமை பெற வேண்டிய சூழற் பிரச்சனைகளை அடையாளம் கண்டு கவனம் கொள்கிறது.

2004இல் கடல் சார் பிரச்சனைகள் முக்கியத்துவம் பெற்றுள்ளன. 1970 களில் இருந்து கடந்த மூன்று தசாப்த காலத்தில் கடல்களிலும் சமுத்திரங்களிலும் சூழல் மாசுபாட்டால் ஒட்சிசன் பற்றாக்குறைவு ஏற்பட்டு உயிர்விட்ட 'சிறந்த வலயங்கள்' (Dead Zones) எண்ணிக்கையிலும் பரப்பளவிலும் அதிகரித்திருப்பது தெரிய வந்துள்ளது. இதனால் ஐ.நா.ச. இம்முறை 'கடல்களும் சமுத்திரங்களும்' குறித்து அக்கறைப்பட்டுள்ளது.

மனிதத் தேவைகளுக்குப் பயன்பட்டுவரும் வளம் அவர்களது வளர்ச்சிக்கும் காரணமாக இருந்துள்ளது. ஆனால் அதே நேரம் மனிதச் செயற்பாடுகளின் தான்தோன்றித்தனம் வளங்களை திட்டமிடாமல் பயன்படுத்தும் வேகத்தையும் கொண்டுள்ளன. மீளப் புதுப்பிக்கக் கூடிய வளங்களில் ஏற்பட்டு வரும் பற்றாக்குறை சமூக உறுதியின்மையையும் முரண்பாடுகளையும் தோற்றுவித்து வருகின்றது.

உற்பத்தித்திறன் மிக்க விவசாய நிலங்களின் மொத்தப் பரப்பில் வீழ்ச்சி ஏற்பட்டு வருகின்றது. நீரூற்றுகளின் உள்ளார்ந்த ஆற்றல் குறைவடைந்து செல்கின்றது. இவற்றுடன் காலநிலை மாற்றங்களின் பாதிப்பையும் எதிர்காலச் சமூகம் எதிர்கொள்ளப் போகின்றது. இத்தகைய சூழல் பிரச்சனைகள் மிகக் கடுமையாக இருப்பதினால் சர்வதேச ரீதியாக அமைதியின்மைகள் தோன்றுவதற்கான அறிகுறிகள் தென்படத் தொடங்கியுள்ளன. இதனால் தான் சூழலியலாளர்கள் பல்வேறு நிலைகளில் இருந்து எச்சரிக்கை செய்கிறார்கள்.

இலங்கையின் வடகிழக்குப் பிரதேசத்தில் ஏற்பட்ட போரியல் நடவடிக்கைகள் மனித வாழ்க்கையில் மட்டுமல்ல பௌதிக வளப்பரம்பலிலும் அவற்றின் பயன்பாட்டிலும் கூட தாக்கம் செலுத்தியுள்ளன. கடல்வளம் போரியல் நடவடிக்கையால் மிக மோசமாகவே அழிவுற்றுள்ளன.

இலங்கையின் மொத்தக் கரையோர நீளமான 1730 மி.மீற்றர்களில் ஏறத்தாழ 1155 கி.மீற்றர்கள் அதாவது மூன்றில் இரண்டு பங்கு தமிழர்கள் வாழும் பிரதேசங்களிலேயே உள்ளது. வடகிழக்குப் பிராந்தியத்தில் அண்ணளவாகக் 506 கி.மீற்றர்களையும் வடக்கு 649 கி.மீற்றர்களையும் கொண்டுள்ளன. இலங்கையின் மொத்த மீன் உற்பத்தியில் வடகிழக்கு மிகப் பெரிய பங்களிப்பைச் செய்திருக்கிறது. உச்சபட்சமாக 1961 இல் 80 சதவீதமான மீன்பிடிபாடு நிகழ்ந்திருக்கிறது. 1983 இல் இலங்கையின் கரையோர மீன்பிடியான 1,84,400 மெற்றிக் தொன்களில் வடகிழக்கின் பங்களிப்பு 101,900 மெற்றிக் தொன்கள். இது மொத்த கரையோர மீன்பிடியில் 55 சதவீதமாகும்.

வடகிழக்கில் எல்லா மாவட்டங்களுமே தேவைக்கு மிகையாக மீன்களை அறுவடை செய்தமையால் 40, 50 சதவித மீன்கள் தென்னிலங்கையில் சந்தைப்படுத்தப்பட்டது. தமிழ்ப் பிரதேசத்தின் பௌதிக வளமும், மனித வளமுமாகச் சேர்ந்து முழு இலங்கைக்கும் பசியாறக் கொடுத்தது.

1980 களின் ஆரம்பப் பகுதிக்கு பின்னர் ஸ்ரீலங்காவின் படையினரின் அத்துமீறல்கள் கெடுபிடியில் மீன்களுக்கு மட்டுமல்ல மீனவர்களுக்கும் பெரும் துன்பம் கொடுத்தார்கள். போரின் வன்முறை எங்கும் வியாபித்தது. கரையோர மீனவர்களின் வாழ்க்கையில் பெரும் துன்பத்தையும் துயரத்தையும் கொடுத்தது ஜெயவர்த்தனாவின் ஆட்சி. கடல்சார்ந்த வாழ்க்கையிலும், நிலம் சார்ந்த வாழ்க்கையிலும் ஏற்படுத்திய வடுக்கள் இழப்புகள், மரணங்கள் பற்றிய கணக்கெடுப்பகள் சொல்லி மாளாது.

1985 இல் கொண்டுவரப்பட்ட கடல்வலயப் பாதுகாப்புத் தடைச்சட்டம், வடபகுதி மீனவர் சட்டம் வடபகுதி மீனவர்களை 5 மைல்களுக்கப்பால் கடலில் இறங்குவதைத் தடை செய்தது. தொடர்ந்து படையினரின் கெடுபிடி கடலில் மட்டுமல்ல கரையோர மக்களின் வாழ்க்கையிலும் தொடர்ந்தது. 1995 இல் மூன்றாம் ஈழப்போரை அடுத்து கடலில் அனுமதிக்கும் தூரம் 3 கிலோ மீற்றர்களாக சுருங்கியது. கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் முழுதான தடை விதிக்கப்பட்டது. இந்தத் தூரத்தடையுடன் காலத்துக்குக் காலம் நேரத் தடைகளும் வேகத் தடைகளும் மீனவர்களை பழிவாங்கியது.

தற்போது உயர் பாதுகாப்பு வலயம் காரணமாக யாழ் மாவட்டத்தில் 81.5 கி.மீற்றர்கள் நீளக் கரையோரத்தில் மக்களின் நுழைவுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருப்பதுடன் நாகர் கோவில், பலாலி, மயிலிட்டி, காங்கேசன்துறை, மணியந்தோட்டம் என்று பல கரையோரப் பகுதிகள் மீளக் குடியிருப்புக்கும் முற்றாக மறுக்கப்பட்டுள்ளது.

கரையோர மக்கள் தொடர்ந்து பல்வேறு இடங்களிலும் மற்றும் தமிழகத்திலும் உள்ள அகதி முகாம்களில் வாழ்ந்து வருகிறார்கள். போர்நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர் இடம் பெயர்ந்து சிதறி வாழ்ந்த 65 சதவீத மீன்பிடியாளர்கள் சொந்த இடத்துக்கு திரும்பி உள்ளார்கள். என்று ஒர் கணிப்புக் கூறுகிறது.

வட கிழக்கில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் கரைவாழ் மக்களின் வாழ்க்கையில் ஓர் இருண்ட யுகத்தையே ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில் கடல்வாழ் உயிரினங்கள் வளங்கள் பற்றிய தேடல் அதன் பாதுகாப்புப் பற்றி இன்னும் விரிவாகவே சிந்திக்க வேண்டியுள்ளது. எந்தக் கடலை நம்பி வாழ்ந்து வருகிறார்களோ அந்தக் கடல் வளம் சிறந்த கடலாக மாறினால் அம்மக்களின் ஜீவாதார வாழ்க்கை மேலும் பறிபோகும். கடல் வாழ் உயிரினப் பாதுகாப்பு பற்றிய சிந்தனை தமக்கான எதிர்காலத்தை சுபீட்சமாக அமைப்பதற்கு அடிப்படையாகும்.

இலங்கையைச் சூழ உள்ள கரையின் நீட்சியாக கண்ட மேடை என்னும் கடலின் சமதளப்பகுதி சுமார் 32500 சது ர கிலோ மீற்றர்களாக உள்ளது. இலங்கைத் தீவின் பரப்பளவில் இது ஏறத்தாழ அரைவாசியாகும். இந்தக் கண்ட மேடை தெற்கிலும் கிழக்கிலும் ஒடுங்கிக் காணப்பட வடக்கில் மன்னார் வளைகுடாவிலும் பாக்குக் குடா சார்ந்தும் 40 கிலோ மீற்றர்கள் வரையில் அகன்று காணப்படுகின்றது.

வடக்கின் கண்ட மேடையில் பருத்தித்துறைப் பக்கமாக உள்ள பீதுருத்திட்டு மிகவும் பிரசித்தமானது. 2500 சதுர கி.மீ. பரப்பளவுள்ள இதன் மூன்றில் ஒரு பாகம் தமிழ்நாட்டுக் கடல் எல்லைக்கள் அடங்கியுள்ளது. கடல்வளங்கள் எல்லாவற்றினதும் 80 சதவீதமான அளவு கண்ட மேடைப் பகுதிகளிலேயே செறிந்து காணப்படுகிறது.


கண்ட மேடைகள் சூரிய ஒளி அதிகம் ஊடுருவும் அளவுக்கு ஆழம் குறைந்தவை என்பதால் இங்கு பிறாந்தகைகள் எனப்படும். நுண் உயிரிக் கூட்டத்தைச் சேர்ந்த தாவரங்கள் பெருவாரியாக வாழ்கின்றன. இந்தத் தாவரப் பிளாந்தன்கள் பிரதான உணவுத் தொகுப்பாளர்களாகக் கடலுக்குப் போசிப்பதால் இவற்றை உணவாகக் கொள்ளும் நுண்ணிய விலங்குப் பிறாந்தன்களாலும் உணவுச் சங்கிலியின் அடுத்தடுத்த கொழுவி இரை கௌவி மீன்களாலும் கண்ட மேடை நீர்ப்பரப்பு உயிர்ப்புடன் விளங்குகிறது. மேலும் கண்ட மேடைகளின் அடித்தளச் சேறு கூட கடலட்டை, இறால், சங்கு, கறுப்புநிற நண்டு போன்ற உயிரிகளால் நிறைந்துள்ளது.

இலங்கை வெப்பவலய நாடுகளுள் ஒன்றாக இருப்பதால் கடலின் மழைக்காடுகள் என வர்ணிக்கப்படும் பவளப் பாறைகள் கண்ட மேடைகளில் கணிசமான அளவு காணப்படுகின்றன. இலங்கையின் உயிர்ப் பல்வகைமை மிக்க இந்தச் சுழலமைவில் சுமார் 183 வகையான பவளப் பாறை இனங்களும், 300 வகையான பாறைத் தொடர் மீனினங்களும் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

கிழக்கில் பவளப் பாறைகள் வாகரை, பாசிக்குடா, புறாத்தீவுப் பகுதியிலும், வடக்கில் யாழ்ப்பாணக்குடாக்கரை, குடாவை அண்டிய தீவுகள், மன்னார் வளைகுடா, கற்பிட்டிக் குடாப் பகுதியிலும் காணப்படுகின்றன. யாழ்ப்பாணக் குடாநாட்டைச் சுற்றியுள்ள பவளப் பாறைகள் குறைவிருத்தியடைந்த நிலையில் பெரும்பாலும் கரையை அண்டிக் காணப்படுகிறது. ஆனால் மன்னார் வளைகுடாவில் நன்கு விருத்தியடைந்து கரைக்கு அப்பால் காணப்படுகின்றன. மேலும் ஆவுளி எனப்படும் கடற் பசுக்கள் தென்கிழக்காசியாவின் மன்னார் வளைகுடாப் பகுதியில் மாத்திரமே உள்ளது. பாலூட்டி விலங்கான கடற் பசுக்கள் உலகில் அழிந்து வரும் இனங்களில் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு கடல்வளம் பற்றிய வடகிழக்குப் பிரதேசம் சார்ந்து இன்னும் விரிவாக தேட முடியும். இலங்கையில் கடல்வளப் பயன்பாடு மீன் உற்பத்தி அரசாங்கத்தால் நன்கு திட்டமிட்டு மேற்கொள்ளப்படும். ஆனால் வடகிழக்கில் பிரதேசத்தில் 1980 களுக்குப் பின்னர் ஏற்பட்ட போரியல் நடவடிக்கைகள் மிகமோசமான விளைவுகளைத் தந்துள்ளன. இதற்கு அரசாங்கமும் முழுப் பொறுப்பு போர்நிறத்த ஒப்பந்தத்திற்கு பின்னர் சமாதானம் தீர்வுத்திட்டம் அபிவிருத்தி என்ற ரீதியில் சிந்திக்கும் பொழுது நிலைத்து நிற்கும் அபிவிருத்தி சார்ந்து தான் அனைத்தையும் திட்டமிட வேண்டும். போரினால் ஏற்பட்டுள்ள சூழல் பாதிப்புகள் வளங்களின் அழிவுகள் என்ற நிலையிலும் பார்க்கப்பட வேண்டும். விடுதலை என்பது நம்மைப் பீடித்துள்ள அனைத்துத் தளைகளிலிருந்தும் விடுபட்டு வாழும் வாழ்க்கைக்கான ஓர் ஏற்பாடாக வாழ்க்கை ஒழுகலாறாக அமையவேண்டும். ஆகவே சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வு நமது வாழ்க்கைக்கான தேடல். கடல் சார்ந்த வாழ்க்கை உயிர்க்கடல் சார்ந்த வாழ்க்கையுடன் தொடர்புபட்டது. அதையும் கடந்து அனைவருக்கும் ஆரோக்கியமான சூழலுடன் பின்னிப் பிணைந்த வாழ்க்கைக்கான தெரிவுகளை வலியுறுத்துவதாகவும் இருக்கும்.

(பொ.ஐங்கரநேசன் உதவியுடன் கிருபாளினி)




# விட்ட இடத்தில் இருந்தாரம்பித்தல்

திடிரென ஐ.நா. சபை எனத் தொடங்கினால் சலிப்பாக இருக்கும். சிலவேளை அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் என ஆரம்பித்தால் புஷ்ஷின் பேர்போன கோணங்கித்தனமான பதில்களுக்காக சுவாரசியம் ஏற்படக்கூடும். (உதாரணத்திற்கு ஜோர்ஜ் புஷ் ஒரு முறை கூறினார் "60 சத விகித இறக்குமதிகள் அமரிக்காவிற்கு வெளிநாடுகளில் இருந்தே வருகின்றன."). எது எவ்வாறிருந்தபோதும் இக்கட்டுரை ஜோர்ஜ் புஷ் தலைமையிலான அமெரிக்கா தனது அறிவிக்கப்பட்ட ஏகாதிபத்திய போர் மூலோபாயத் திட்டத்துடன் (Imperial Grand Strategy) எடுக்கும் 'பயங்கரவாதம்' எனும் பாடம் குறித்தே தன் கவனத்தை செலுத்தும்.

ஐ.நா. சபை என்பது ஒரு மலினப்பட்ட சொல்லாக மாறிவிட்டது. அதற்கு முக்கியமான பல காரணங்களில் ஒன்று ஐ.நா. சபையின் முதுகெலும்பான பாதுகாப்புச் சபையின் தீர்மானங்களை அங்கம் வகிக்கும் நாடுகள் அலட்சியம் செய்வதும், மீறுவதுமாகும். முப்பது ஆண்டுகளுக்கு மேலாக, இஸ்ரேல் ஐ.நா. தீர்மானங்களை மீறிவந்தது. அதற்காக கண்டிக்கப்பட்டது. அதனுடன் இராஜதந்திர தொடர்புகள் வைக்கக் கூடாது என நாடுகள் உத்தியோக பூர்வ கொள்கையை கொண்டிருந்தன. இருந்த போதும் அமெரிக்காவானது, இஸ்ரேல் பாதுகாப்பு சபை தீர்மானங்களை மீறியும் செயற்பட உறுதுணையாக இருந்தது. பின்னர் அமெரிக்காவும் ஈராக் தொடர்பான பாதுகாப்புச் சபை தீர்மானங்களுக்கு எதிராக ஈராக்கை ஆக்கிரமித்தது. எனவே தான் ஐ.நா. செல்லாக் காசாகிவிட்டது எனச்சொல்ல நேர்கிறது. ஆனால் ஐ.நா. இதுவரை காலமும் பயங்கரவாதம் குறித்து வெளியிட்டுவந்த கருத்துக்களும், 'பயங்கரவாதம்' என்பதை வரையறுக்க முற்பட்டு சர்வதேச சட்ட நிபுணர்களை அழைத்து அதனை மேற்கொள்ள பணித்ததும், 'பயங்கரவாதம்' என்பதை வரையறுப்பதில் ஒத்த கருத்தினை எட்ட முடியாமல் இருந்ததும் 98க்கு முன் நடந்தவை. ஆக இம் முயற்சிகளை ஐ.நாவின் பயங்கரவாதம் பற்றிய பாடமாக்க கொண்டால், அமெரிக்காவின் பயங்கரவாதம் பற்றிய பாடம் எப்போது ஆரம்பித்தது என்ற கேள்வி சுவாரசியத்தை ஏற்படுத்த வல்லவை.

முன்னர் 'கம்யூனிச அபாயம்' என்ற பாடத்தை செய்தி ஊடகங்கள் மூலம் பரப்பியபடி, தனது 'மீறல்களை" நியாயப்படுத்திய அமெரிக்கா இப்போது "பயங்கரவாத அபாயம்' என்ற பாடத்துடன் அம் மீறல்களை தொடர்கின்றது. எனினும் பயங்கரவாதம் என்ற சொல்லை வரையறுப்பதில் முடிவு எட்டப்படவில்லை. ஆனால் 'பயங்கரவாதம்' 'பயங்கரவாத பட்டியல்' என்பவற்றுடன் அமெரிக்கா தனக்கு சார்பான ஊடகங்களுக்கும் முன்வைக்கும் 'தடுப்பு யுத்தம்' (Pre- emptive war) என்பது இக்கால வரலாற்றுப் போக்கை தீர்மானிக்கும் பதங்களாகிவிட்டன. இருந்தபோதும் இக்கட்டுரை 'பயங்கரவாதம்' குறித்தே அலசும்.

முன்னரே சுட்டிக்காட்டியது போல். ஐ.நா. சபையால் பயங்கரவாதத்தை வரையறுக்க இயலவில்லை. ஆனால் அது பயங்கரவாதம் குறித்த பொருத்தனையில் இப்படிச் சொல்கிறது.

> "ஒரு அரசாங்கத்தையோ அல்லது ஒரு சர்வதேச நிறுவனத்தையோ நிர்பந்தித்து, அல்லது மக்களை கொலைப் பயமுறுத்தி ஒரு விடயத்தை செய்யும் படி அல்லது, ஒரு செயலை செய்யாமல் இருப்பதற்காக மோதலில் பங்கெடுக்காத தரப்பினர், மக்கள் மீது (ஆயுத மோதல் நிலவுகையில்) காயத்தை அல்லது மரணத்தை உண்டு பண்ணும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்படும் செயல், பயங்கரவாதம் ஆகும்."

உண்மையிலேயே இது யுத்த நடவடிக்கையில் இருந்து பயங்கரவாத நடவடிக்கையை இனம் பிரித்துக் காட்டுகிறது. ஆனால்

இதில் உட்புதைந்த கருத்துக்களை அலச ஒரு உதாரணத்தைப் பார்ப்போம்.

சில மாதங்களுக்கு முன் குவைத்தில் உள்ள அமெரிக்க முகாம் மீது (Camp Pensylavania) நடைபெற்ற தாக்குதல் பலருக்கு ஞாபகம் இருக்கக்கூடும். அத்தாக்குதல் யாரால் நிகழ்த்தப்பட்டது என்ற குழப்பம் நிலவிய ஆரம்ப நிலையில், CNN உட்பட்ட அமெரிக்க சார்பு ஊடகங்கள் அதனை எவ்வித தயக்கமின்றி "பயங்கரவாதம" "பயங்கரவாதத் தாக்குதல்" என வர்ணித்தன. அவை ஒரு ஈராக்கிய படைவீரன் ஒருவன் முகாமில் ஊடுருவி, படையதிகாரியின் கூடாரத்தின் மீது எறிகுண்டை எறிந்திருக்க வேண்டும் என்றன. மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சியானது ஊடகங்கள் 'பயங்கரவாதம்' குறித்து, உலக மக்களிடையே பரப்பும் விசமத்தனமான கருத்தை இனங்கான உதவுகின்றது. உண்மையில் அத்தாக்குதலை மேற்கொண்டது ஒரு விரக்தியுற்ற அமெரிக்க படைவீரனே என்பது பின்னர் வெளிப்படுத்தப்பட்டது. ஆனால் இந்த உண்மையை கூட இங்கு கருத்தில் கொள்ள தேவையில்லை. ஏனென்றால் இது ஒரு ஈராக்கிய படைவீரனால் தான் செய்யப்பட்டது என ஒரு பேச்சுக்கு எடுத்துக் கொண்டால் கூட. அது மோதலில் ஈடுபடும் இராணுவம் மீதான படைவீரன் ஒருவனின் தாக்குதல் என்ற வகையில் தான் அடங்கும். இதுவொன்றும் பொதுமக்கள் சம்பந்தப்படுகிற விடயம் அல்லது . இன்னும் சொன்னால், வழமையான. மரபு சார் கொரில்லா யுத்த முறை. இதில் பயங்கரவாதம் என்ற கருத்துக்கே இடமில்லை. (அது அமெரிக்காவுக்கு எதிரானது என்ற அம்சத்தை தவிர)

இந்த உதாரணம் பயங்கரவாதம் என்ற பதப்பிரயோகத்தை அமெரிக்க சார்பு ஊடகங்கள் எவ்வளவு தூரம் மலினப்படுத்தி விட்டன என்பதைக் காட்டுகின்றது. செப்ரம்பர் 11, 2001 தாக்குதலின் பின், பொருந்தாத சந்தர்ப்பங்களில் எல்லாம் பயங்கரவாதம் என்ற பதப்பிரயோகம், திட்டமிட்டு பயன்படுத்தப்படுகிறது. இணைய ஊருடுவல்காரர்கள், வைரஸ் நிகழ்ச்சி நிரலை எழுதுவோர், தொடர் கொலையாளிகள் என எல்லோரையும் பயங்கரவாதி என குறிப்பிட ஊடகங்கள் தயக்கம் காட்டவில்லை. மேலும் அமெரிக்க முகாம் மீதான தாக்குதலானது (அது உண்மையில் நிகழாத போதும்) சட்டபூர்வமான தாக்குதலாக இருந்த போதும், அதனைப் பயங்கரவாதம் என வர்ணிக்கும் போக்கே திட்டமிட்டு செய்யப்படுகின்றது.

இவ்வாறாக அமெரிக்காவின் தலைமையில் முன்னெடுக்கப்படும் 'பயங்கரவாத பாடத்தை' எதிர்க்கும் முகாங்களை முதலில் பார்ப்போம்

> ஐரோப்பிய ஒன்றியம்( அது அமெரிக்காவின் முதன்மைஸ்தானத்தை பிடிக்க மட்டும் இந்த பயங்கரவாத பாடத்தை விமர்சனத்துடன் நோக்கும்.)
>
> பாலஸ்தீன போராட்டவாதிகளும் ஆதரவு நிலை எடுக்கும் அறிவுஜீவிகளும்.
>
> மூன்றாம் உலக தேசிய விடுதலைப் போராட்ட இயங்கங்களும் ஆதரவான அறிவுஜீவிகளும்
>
> இடதுசாரிகளும் சமூக சனநாயகவாதிகளும்.
>
> சுற்றுச் சூழலியளாளர்கள்.

இனிவருங்காலத்தில் யார் யாரெல்லாம் பயங்கரவாதப் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்ற கேள்விக்கு பதில் அளிப்பது அவசியமாகின்றது. ஏனெனில் எமது உயிர்ப் போராட்டம் இதில் தங்கியுள்ளது. ஏனெனில் ஒருவனை பயங்கரவாதத்துடன் தொடர்புபடுத்துவதன் மூலம் அவனை மரண தண்டனைக்கு உள்ளாக்க முடியும். ஒரு அமைப்பை பயங்கரவாதத்துடன் தொடர்புபடுத்துவதன் மூலம் அதனை முடக்க முடியும். இதனையே அமெரிக்க நாடுகள் செய்து வருகின்றது. இப்படியே போனால்

> மாற்று அரசியல் கருத்துக்களைக் கொண்டிருப்போர்
>
> எதிர்ப்பு நடவடிக்கையை மேற்கொள்வோர்.
>
> அரசியற் கருத்துக்களுடன் முரண்படுவோர்

என எவரும் இனிவரும் காலத்தில் 'பயங்கரவாதி' என முத்திரை குத்தப்படும் காலம் நெருங்கிவிட்டது.

ஆகவே 'பயங்கரவாதம்' என்பதால் வரையறுக்கப்படுவது என்ன என்பது குறித்த விவாதங்கள் மக்கள் மத்தியில் ஆரம்பமாக வேண்டும்.

இனி விவாதத்துக்குரிய சில அம்சங்களை நோக்குவோம். **ஒரு செய்தி ஊடகமோ அல்லது ஒரு அரசாங்கமோ. பொது மக்களைக் கட்டுப்படுத்த 'அச்சுறுத்தலை' பயன்படுத்துமாயின் அதனை பயங்கரவாதப் பட்டியலில் சேர்க்க முடியுமா?** என்ற கேள்வியுடன் விவாதத்தை ஆரம்பிக்க முடியும். இன்னும் எளிமையாக வேண்டு— **மென்றே அப்பாவி மக்களை இலக்கு வைப்பது பயங்கரவாதம்** என வரையறுக்க முடியும். இதன்படி இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது, ஜப்பானை சரணடைய வைப்பதற்காக ஹிரோசிமா, நாகசாகி மீது அடுத்தடுத்து அணுகுண்டுகள் வீசி 150 ஆயிரம் மக்களையும், நகரங்களையும் அமெரிக்கா பஸ்பமாக்கியது. எமது எளிய வரைவிலக்கணத்தின் படியும், போரில் ஈடுபடாதவர் மீதான தாக்குதல் என்ற அடிப்படையிலும் இது பயங்கரவாதத் தாக்குதலே. ஆனால் அமெரிக்கா பக்கம் நின்றுகொண்டு இதனை நியாயப்படுத்த, மேற்சொன்ன வரைவிலக்கனம் சரிப்பட்டு வராது.

(உண்மையில் அமெரிக்காவின் 'மீறல்களை' பயங்கரவாதம் அல்லாமலும், அமெரிக்க நலனுக்கு எதிரானவை பயங்கரவாதம் எனவும் வரக்கூடிய வரைவிலக்கணத்தையே, அமெரிக்க நிபுணர்களும், ஐ.நா. சபையும் தேடிக்கொண்டிருக்கின்றன என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.)

மேலும் மீறல்களை நியாயப்படுத்த, உதாரணத்துக்கு மேற்சொன்ன யப்பான் மீதான அணுகுண்டுத்தாக்குதல்) சொல்லப்படும் இன்னொரு கருத்து :

**இறுதி நோக்கம் வழிமுறையை நியாயப்படுத்தும்.**(ends justify the means)

அதன் படி யப்பான் மீது நன்னோக்குக்காக அணுகுண்டு எறியப்பட்டது என்ற வாதம் முன்வைக்கப்பட்டது. இதற்கு ஒரு எளிய உதாரணத்தை பார்ப்போம். நீங்கள் ஒரு அலுவலகத்தில் வேலை செய்கிறீர்கள். உங்கள் தலைமைஅதிகாரி நீண்ட காலமாக உங்கள் பதவி உயர்வை தடுத்து வருகிறார். உங்களுக்கு கிடைக்க வேண்டிய ஏனைய சலுகைகளைத் தடுக்கிறார். நீங்கள் அவருடைய சிறிய மகளை கடத்தி, பாலியல் வல்லுறவுக்குட்படுத்தி கொலைசெய்துவிடுவதன் மூலம், உங்களுக்கு பதவியுயர்வும் ஏனைய படிகளும் வரிசைகளும் கிடைக்கின்றன. ஆக இறுதி நோக்கம், வழிமுறைகளை நியாயப்படுத்துகிறது, என்ற வாதம்

இப்படி செல்கிறது. உலக அரங்கிலும் இதுதான் மேற்கொள்ளப்படுகின்றன.

சட்டபூர்வமான பயங்கரவாத்தை வரையறுப்பது சாத்தியமா, அல்லது ஒரு நாடு ஜெனிவா ஒப்பந்தத்தில் கையெழுத்து இட்டிருந்தாலும் இடாவிட்டாலும் அது ஒப்பந்தத்தை மீறினால் அச்செயலை பயங்கரவாதம் என வரையறுக்க முடியுமா? அல்லது கிண்டலாக, ஒரு நாட்டுமக்கள் பொதுவாக ஒப்புக்கொள்ளாத மாற்றங்களை சட்டங்களில் கொண்டுவர அரசாங்கத்துக்கு உதவும் நடவடிக்கைகள் தான் பயங்கரவாதம் என்று வரையறுக்க முடியுமா?

பிரித்தானிய கலைக் களஞ்சியம் இவ்வாறு சொல்கிறது.

> "சில அரசியல் நோக்கங்களை எய்தும் வழிமுறையாக, அச்சுறுத்தலை மேற்கொள்ளுதல், இதனை ஒரு அரசு மேற்கொண்டால் கருத்து முரண்பாட்டை அடக்குவதாக நோக்கப்படும் கிளர்ச்சியாளர் அல்லது கொரிலாக்கள் பயன்படுத்தினர், விரும்பிய அரசியல் மாற்றத்தை ஏற்படுத்த முயற்சிப்பதன் ஒரு பகுதியாக அமையும்."

இவை தவிர பல்வேறு கருத்துநிலைப்பட்டவர்களும் பயங்கரவாதம் குறித்து பேசியும், வரையறுத்தும், பிரச்சாரம் செய்தும் வருகின்றனர் அதற்குள்ளும் அமெரிக்காவின் துணை நிறுவனங்கள் தமது நோக்கங்களுக்கு ஏற்ப பயங்கரவாதம் குறித்து பேசுகின்றன.

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் கருத்தின்படி, **பயங்கரவாதமானது சிறுபான்மை தேசிய குழுக்களால் (அரசாங்கம் அல்ல) மேற் கொள்ளப்படும் செயல். அது அரசியல் காரணங்களுக்காக அமையும்.**

சமஸ்டி அவசரநிலை முகாமைத்துவ முகவராண்மை (Federal Emergency Managment Agency) ஆனது, **மரணபய மூட்டி. கப்பம் பெற சட்ட விரோதமாக வன்முறையை பிரயோகிப்பதை** உள்ளடக்குகிறது. ஆனால் அரசியல் காரணங்களால் தூண்டப்படும் என்பதை குறிப்பிடுவதில்லை.

சமஸ்டி புலனாய்வு அமைப்பு (FBI) ஆனது, பயங்கரவாதத்தை, "**அரசியல் அல்லது சமூக நோக்கங்களுக்காக. ஒரு அரசையோ சிவல் சமூகத்தையோ அல்லது அதன் ஒரு பகுதியையோ பீதியூட்டி. கொலை பயமுறுத்தி. சட்டவிரோதமாகி பலத்தை. வன்முறையை திணிப்பது**" என்று வரையறுக்கின்றது.

(FBI) தனது பயங்கரவாத பட்டியலில் சுற்றுசூழலில் செயற்பாட்டு நிறுவனங்களை உள்ளடக்கியிருப்பதையும் (eg. Earth Libration Front) இங்கு சுட்டிகாட்டுவது அவசியம். இவ்விவாதங்களை இன்னும் ஆழமாக்கி செல்லமுடியும். அதேவேளை அமெரிக்க அரசின் பயங்கரவாத பட்டியலை சற்று ஒத்து தயாரிக்கப்பட்ட வித்தியாசமான பயங்கரவாத பட்டியல்(முழுமை பெறாதது)

> *சர்வதேச போர் குற்றவியல் நீதிமன்றுக்கு ஜனாதிபரி கிளின்டன் ஒப்பமிட்டார். அதை நிராகரித்து. அதில் கைச்சாத்திட்ட 90 நாடுகளுடன் இருதரப்பு ஒப்பந்தம் செய்து. அதன் மூலம் அமெரிக்க படைவீரர் போர் குற்றங்கள் புரிந்தாலும் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காமல் இருக்க ஏற்பாடு செய்து வருகின்றது அமெரிக்கா.*
>
> *ஜோகனஸ் பேர்ககில் நடந்த 'நீர்' மாநாட்டை அமெரிக்ா புறக்கணித்தது. இடைஞ்சல் செய்தது.*
>
> *தடுப்பு யுத்தம் (Pre emptive) என்பதை நியாயப்படுத்தியமை.*
>
> *தேசிய இனப் போராட்டங்களை பயங்கரவாதம் என வர்ணித்து ஜனநாயக மறுப்பு செயல்களில் அமெரிக்கா ஈடுபடுதல்*

இங்கு புலனாய்யுவுத்துறைகளின் படு கொலைகள், ஆட்சிக்கவிழ்ப்புக்கள் இடங்கருதி எடுத்துக்காட்டப்படவில்லை. எது எவ்வாறு இருந்த போதும் இரு முரண் உண்மைகளை கருத்தில் கொள்ள வேண்டும்

<u>முதலாவது (உண்மை)</u>

சர்வதேச சட்டங்களால் ஏற்றுக்கொள்ளப்படும், தந்திரோபாயங்களால் சட்டபூர்வ யுத்தத்தை மேற்கொள்வது (அது அரசானாலும் சரி, கிளர்ச்சியானாலும்) பயங்கரவாதம் அல்ல. அத்துடன் பயங்கரவாதிகள் (உதாரணத்துக்கு சர்வதேச போதைபொருள் கடத்தல், ஆட்கடத்தல் முதலானவை) அங்கீகரிக்கப்பட்ட நியமங்களையும், சட்டங்களையும் மதிப்பதில்லை அத்துடன் "தாக்குதல் இலக்கும்" ஒரு செயல் பயங்கரவாதமா இல்லையா என்பதை தீர்மானிக்கின்றது.

<u>இரண்டாவது (முரண் உண்மை)</u>

ஜநா சபையால் பயங்கரவாதம் குறித்து முழுமையான வரைவிலக்கணத்துக்கு வர முடியாததுக்கு ஒரு காரணம் அமெரிக்காவின் பயங்கரவாத செயல்களை, நியாயப்படுத்த வல்ல வரைவிலக்கணத்தை கண்டுபிடிக்கும் அதே வேளை,அமெரிக்க ஏகாதிபத்திய நலனுக்கு எதிரானவர்களின் செயற்பாடுகளை பயங்கரவாதம என வரையறுக்கும் வண்ணம், ஒரு "தந்திரோபாய வரைவிலக்கணத்தை" கண்டடைய முடியாமல் உள்ளமை ஆகும்.

எனவேதான்
அமெரிக்கா படைகள் உள்ள நாடுகளில் எல்லாம் அமெரிக்க போர்வீரர்களுக்கு போர்குற்றங்களுக்கு விலக்களிக்க வேண்டும் என்ற அமெரிக்காவின் நீண்டகால கோரிக்கைக்கு அடி பணிந்து, ஐ.நா சபை அந்த 'விலக்கை' வழங்கி, ஐ.நா வின் பெயரை இன்னும் மலினப்படுத்துகின்றது. சில தினங்களுக்கு முன்தான் 2005 வரை இவ்விலக்கு மீளவும் நீடிக்கப்படுவதற்கான தீர்மானம் பாதுகாப்புச்சபையில் நிறைவேற்றப்பட்டது.

**நேசன் கதிரவேல்.**

# அமெரிக்க தந்தையும் தனையனும்

அப்பா பயங்கரவாதி என்றாள் என்ன?

அது ஒக்ஸ்போட் அகராதிப்படி பார்த்தால் அரசியல் நோக்கத்துக்காக வன்முறையும் கொலைப்பயமுறுத்தலையும் செய்யும் ஒருவன். அதாவது பயங்கரவாதிகள் கெட்டவர்கள் அவர்கள் எங்களை போன்ற சாரண மக்களை அச்சுறுத்துகின்றனர். சில வேளைகளில் கொலையும் செய்கிறார்கள்.

அவர்கள் ஏன் கொலை செய்கிறார்கள்?

ஏனென்றால் அவர்கள் எங்களைவெறுப்பதினால் ...இதை விளங்கப்படுத்துவது கஸ்டம்... அது அப்படித்தான் இருக்கிறது. பல்வேறு காரணங்களுக்காக, உலகத்தில் உள்ள நிறையபேர் எம்மை வெறுக்கின்றார்கள்.

அதாவது ஈராக்கில் அமெரிக்க மக்களை கடத்தி வைத்துக் கொண்டு இராணுவம் வெளியேறா விட்டால் கொல்வோம் என சொல்கிறார்களே அவர்களை போன்றவர்களா வெறுக்கிறார்களா?

சரியா சொன்னாய். இந்த கேட்டைத்தான் பிளைக்மெயில் என அழைக்கிறோம். அந்த பணயக்கைதிகள் அப்பாவிகள். அமெரிக்கஅரசாங்கம் தாம் சொல்வதை செய்யாவிட்டால் பணயக் கைதிகளை கொல்வோம் என்று மிரட்டுகிறார்கள்.

அப்ப, முன்பு ஈராக்கியர்கள் ஆயுதங்கள் எங்கேயென்று சொல்லாவிட்டால் நாம் ஈராக்கை தாக்கி, அப்பாவிகளை கொல்வோம் என்பதும் பிளைக்மெயில் தானா?

இல்லை....... ஓமோம் அப்படி என்று தான் நினைக்கிறேன் ஆனால் அது காலகெடு தான் அது "நல்ல பிளைக் மெயில்" (good Blackmail)

நல்ல பிளைக்மெயில் !!..அப்படி யென்றால்?

நல்ல காரியங்களுக்காக செய்யப்படுவது நல்ல பிளைக்மெயில் அந்த ஆயுதங்கள் பயங்கரமானவை பெருமளவு மக்களை பாதிக்க கூடியவை அவற்றை தேடி அழிப்பது மிக முக்கியமானது.

ஆனால் அங்கு தான் அவை இல்லையே?

உண்மைதான் இப்போது தான் அது எமக்கு தெரியும் முன்பு தெரியாதே

அப்படியென்றால் ஈராக்கில் அப்பாவி மக்களை கொன்றது தவறா?

இல்லை அது ஒரு துயரம் நிறைந்த நிகழ்வு நாம் நிறைய உயிர்களை காப்பாற்றியுள்ளோம், சாதாரண ஈராக்கிய மக்கள் கொடுரமாக சதாமால் கொல்லப்படுவது நிறுத்தப்பட்டுள்ளதே. சதாமின் ஆட்சி யென்றால் ஆயிரக்கணக்கான மக்களின், ஏன் சிறுவர்களின் மரணம் என்று தானே பொருள்.

அப்ப நான் தொலைக்காட்சியில் பார்த்த குண்டு தாக்குதலில் கைகள் சிதறிய சிறுவனைப் போன்றவர்களை கொன்றானா?

ஓம்... அவனைப் போன்றவர்களைத்தான்

அப்ப அதைத்தானே எமது தலைவர்களும் செய்கிறார்கள் எமது தலைவர்கள் பயங்கரவாதிகளா?

அடக்கடவுளே! இல்லையில்லை அது ஒரு விபத்து மட்டுமே. துரதிஷ்டவசமாக, அப்பாவிமக்களும் போரினால் பாதிக்கப்படுகிறார்கள்.

ஆகவே, யுத்தமொன்றில் போர்வீரர் மட்டுமே கொல்லப்படவேண்டும் என எடுத்துக் கொள்ளலாமா?

தமது நாட்டை பாதுகாக்க வென போர்வீரர் பயிற்சியளிக்கப்படுகிறார்கள். அது அவர்களது வேலை. யுத்தம் அபாயகரமானது சதாம் கொல்லப்படக் கூடும் என்பதை அவர்கள் அறிவார்கள். போருடைதரித்தவுடனே, அவர்கள் தாக்குதல் இலக்குரியவராகின்றனர்.

பயங்கரவாதிகள் எவ்வகைக் சீருடை அணிகிறார்கள் அப்பா?

அவர்கள் சீருடை அணிவதில்லை. மக்களை விட்டு விலகி நிற்குமாறு எம்மால் சொல்ல முடிவதில்லை. யார் சண்டை பிடிக்கிறார்கள் என்று எமக்கு தெரிவதில்லை. அதனாற்றான் பல அப்பாவிகள் கொல்லப்பட நேர்கிறது போர்விதிகளை பயங்கரவாதிகள் கைக் கொள்வதில்லை.

யுத்தத்துக்கு விதிகளா!!!!?

ஒம்! படைவீரர் சீருடை அணிய வேண்டும். ஒருவர் முதலில் எதுவும் உமக்கு செய்யாவிட்டால், நீர் தாக்கக் கூடாது. அவர்கள் தாக்கினால் நீங்கள் தற்காக்க வேண்டும்.

ஆகவே அதனால்தான் நாம் ஈராக்கை தாக்கினோமா? ஏனென்றால் ஈராக்எம்மை முதலில் தாக்கியது நாம் எம்மை தற்காக்க முதலில் தாக்கியது நாம் எம்மை தற்காக்க முயற்சிக்கின்றோம். அப்படித்தானே அப்பா?

ஈராக் எம்மை தாக்கவில்லை..... ஆனால் அது தாக்கியிருக்க முடியும். அந்த ஆயுதங்களை பயன்படுத்தலாம் என்ற நாம் முதலில் தாக்க முடிவு செய்தோம்.

அப்பா! ஈராக்கியர் கொண்டிராத ஆயதங்களால் தாக்குவார்களென்றா....? அப்படியென்றாள் நாம் யுத்த விதிகளை மீறிவிட்டோமா?

தர்க்கப்படி பார்த்தால் உண்மைதான். ஆனால்.... அப்படி யென்றாள். யுத்தவிதிகளை முதலில் மீறியது நாம் என்றாள், சீருடை யணியாத ஈராக்கியர் யுத்தவிதிகளை மீறியது எப்படி பிழையாகும். இது வித்தியாசமானது நாம் சரியானதையே செய்கிறோம்.

நாம் சரியானதையே செய்வதை, எப்படி அறிந்து கொள்வது?

எமது தலைவர்கள் சரியான செயல் என்று எமக்கு சொல்கிறார்கள். ஈராக்கை நல்ல இடமாக மாற்ற ஏதாவது செய்யப்பட வேண்டும்.

அது நல்ல இடமா?

அப்படித்தான் நினைக்கிறேன். அப்பாவிகள் கொல்லப்படுவதும், கடத்தப்படுவதும் பயங்கரமானவை அதற்காக நாம் பயங்கரவாதிகளுடன் பணிந்து போக முடியாது.

அப்பா, நான் பணயக்கைதியாக பிடிக்கப்பட்டால் கூட, இப்படியா சொல்வீர்கள்?

ஓம்.. இல்லை ...இல்லவே இல்லை

அப்ப நீங்கள் நான் கொல்லப்படவிட்டுவிடுவீர்கள், நீங்கள் என்னை நேசிக்க வில்லையா அப்பா?

உன்னை வெகுவாக நேசிக்கிறேன் இந்த பிரச்சனை 'அந்தமாதிரி' சிக்கலானது. எனக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை மகனே.

சரியப்பா விடுங்கள்! யாராவது எம்மைத்தாக்கி, எமது வீடுகளின் மேல் குண்டு வீசு, உங்களையும் அம்மாவையும் தங்கச்சியையும் கொன்றாள், எனக்கு என்னை செய்ய வேண்டுமெனத் தெரியும்.

என்ன?

யாரிதைச் செய்தார்களோ, அவர்களை கண்டு பிடித்து அவர்களைக் கொல்வேன். கண்டுபிடித்து அவர்களைக் கொல்வேன். எப்படியாவது இதைச்செய்வேன் அவர்களை என்றென்றைக்குமாக வெறுப்பேன். ஒரு விமானத்தை எடுத்துச் சென்று அவர்களது நகரங்கள் மீது குண்டுமாரி பொழிவேன்.

ஆனால் மகனே பல அப்பாவிகளை சொல்ல நேருமே.

எனக்குத் தெரியும். ஆனால் யுத்தம் என்றால் அப்படித்தான் இருக்கும் என்பதை நினைவில் வைத்திருங்கள்.

(The Age இல் பிரசுரமான டேவிட் கம்பெல் எழுதிய உரையாடலின் தமிழ் வடிவம்.)




அமெரிக்க வரலாற்றில் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த மிகப் பிரபலமான ஜனாதிபதியாகத் திகழ்ந்த றொனால்ட் றேகன் அண்மையில் தனது 93ஆவது வயதில் மறைந்ததையடுத்து, அவரது ஆட்சிக்காலம் தொடர்பாகவும், அவரது கொள்கைகள் தொடர்பாகவும், பல அரசியல் ஆய்வாளர்கள் தமது கருத்துக்களையும் விமர்சனங்களையும் முன்வைத்துவருகின்றனர்.

அத்தோடு தற்போது அமெரிக்க ஜனாதிபதியாக குடியரசுக் கட்சியைச் சேர்ந்த ஜோர்ஜ்.டபிள்யூ.புஷ் பதவி வகிக்கின்ற நிலையில், றேகனின் கொள்கைகளை குடியரசுக்கட்சி என்ற நிலையில் றேகனின் கொள்கைகளை குடியரசுக் கட்சியினர் பின்பற்றிவருகின்றனரா அல்லது தற்போதைய குடியரசுக் கட்சியினரது கொள்கையின் அடிப்படையை உருவாக்கியவராக றேகன் இருந்தாரா என்பது குறித்தும் றேகன் தற்போது ஜனாதிபதியாக இருந்திருந்தால் ஈராக் மீது போர் தொடுத்திருப்பாரா என்பது குறித்தும் பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

புஷ்ஷின் ஈராக் போரை ஆதரிக்கும் ஆய்வாளர்கள் றேகனதும் புஷ்ஷினதும் கொள்கைகள் ஒன்றையேனும் இருவரும் தமது எதிரிகளை கையாளும் முறை ஒரே மாதிரியானதென்றும் குறிப்பிட்டுள்ளதுடன் புஷ்ஷைப் போன்று தற்போதைய நிலையில் றேகனும் ஈராக் மீது போர் தொடுத்திருப்பாரெனவும் தமது அபிப்பிராயங்களை தெரிவித்துள்ளனர். றேகனைப் போன்று புஷ் தீயவற்றுக்கு (Evil) போராடுகிறார். றேகன் கம்யூனிசத்தை தோற்கடித்தது போல், புஷ்ஷும் 'இஸ்லாமிய தீவிரவாதத்திற்கு' எதிரான தனது போரில் நிச்சயம் வெற்றிபெறுவாரேன்பதே அவர்களது நிலைப்பாடாகும்.

ஆனால் எதிரிகளுடனான புஷ்ஷினதும் றேகனினதும் அணுகுமுறைகள் ஒத்தவையல்லவென்பதை அமெரிக்கா கொம்யூனிசத்தை எவ்வாறு தோற்கடித்தது என்பதிலிருந்து அறிந்து கொள்ள முடியும். கொம்யுனிசத்தை தோற்கடிக்க றேகன் கடைப்பிடித்த கொள்கைகளும் அணுகுமுறைகளும் தற்போது இஸ்லாமிய தீவிரவாதத்தை' ஒடுக்க புஷ் எடுத்து வரும் நடவடிக்கைகளிலும் அவரது கொள்கைகளிலிருந்தும் மாறுபட்டதாகவே இருக்கிறது.

றேகன் புஷ்ஷைப் போன்று அதிரடி அரசியல்வாதியாக இருந்தார் என்பது உண்மை. காரியங்களில் உடனடியாக இறங்குவதற்கு அவர் தயங்கவில்லை. 1987இல் ஜனாதிபதியாக பொறுப்பேற்றுக் கொண்டதையடுத்து முதல் வேலையாக, ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்து வந்த செம்படைக்கு எதிராக போராடிவந்த ஆப்கான் முஜாஹிதின்களுக்கு உதவிகளை செய்தார். அத்தோடு எல்-சல்வடோர், நிக்கராகுவா மற்றும் அங்கோலா ஆகிய நாடுகளில் கொம்யூனிச எதிர்ப்புப் படைகளுக்கும், கிழக்கு ஐரோப்பாவிலும் கொம்யூனிச எதிர்ப்பு விடுதலை அமைப்புகளுக்கு பொருளாதார தொழில்நுட்ப உதவிகளை வழக்கினார். அதாவது வித்தியாசமான வகையிலான உதவிகளை கொம்யூனிச எதிர்ப்பு இயக்கங்களுக்கு வழங்குவதற்கான திட்டமே றேகனின் கொள்கையாக இருந்தது.

உண்மையில் குறிப்பிடத்தக்களவில் வெளிநாடுகளில் அமெரிக்கப் படைகள் நிலைகொள்ளச் செய்வதை றேகன் தவிர்த்துக்கொண்டார். 1982இல் லெபனானுக்கு சமாதான நடவடிக்கைக்காக அமெரிக்கப் படைகளை அனுப்பிய போதும் 1983இல் அங்கு தற்கொலைத் தாக்குதலொன்றில் 241 அமெரிக்கப் படையினர் உயிரிழந்ததையடுத்து லெபனானை 'விடுவிக்கும்' எண்ணத்தைக் கைவிட்டு அங்கிருந்து உடனடியாவே படையினரை வாபஸ் பெற்று கொண்டார்.

லெபனானில் அமெரிக்க படையினரது உயிரிழப்பு அமெரிக்க வரலாற்றில் அமெரிக்களுக்கு துன்பமான அத்தியாயமாக இருந்தாலும், அது மிகப்பாரிய தாக்கத்தை ஏற்படுத்துவதாக அமையவில்லை. றேகனின் 8 வருட கால ஆட்சியில் அமெரிக்க படையினர் பெரியளவில் இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை. அதுவே றேகனின் கொள்கையாக இருந்தது. கொம்யூனிசத்தை வெல்வதற்கு அது பெரிதும் உதவியது என்றுகூடச் சொல்லலாம். தற்போது குடியரசுக் கட்சியினர் றேகனின் கொள்கைகளையா பின்பற்றுகின்றனர்? புஷ்ஷின் நிலைப்பாடு அணுகுமுறை றேகனிடமிருந்து முற்றிலும் மாறுபட்டதாக இருக்கின்றது.

புஷ்ஷினால் பிரகடனப்படுத்தப்பட்ட 'பயங்கரவாத்திற்கு எதிரான போரில்' அவரால் வெல்லமுடியுமா? பயங்கரவாதத்திற்கெதிரான உலகளாவிய போரை பிரகடனப்படுத்தியதையடுத்து, வெற்றிபெறவே முடியாத இரு போர்களுக்குள் புஷ் அமெரிக்காவைத் தள்ளியுள்ளார். அவை ஆப்கானிஸ்தானில் மற்றும் ஈராக் மீதான அமெரிக்காவின் போர்கள்.

பயங்கரவாதத்திற்கெதிரான போரென்பது உண்மையில் ஒரு போரல்ல. இதில் கைதுசெய்வதற்கு ஒரு எதிரியில்லை. கைப்பற்றுவதற்கு நிலமுமில்லை. போரில் எப்போது வெற்றிபெறுகிறோமென யாருக்கும் தெரியாது. இது உண்மையில் சட்ட அமுலாக்கலுடன் தொடர்புடையது. ஆனால் பயங்கரவாதத்திற்கெதிரான உலகளாவிய போர்ப் பிரகடனப்படுத்திய பின்னர், அமெரிக்கா உடனடியாகவே தனது எதிரியை அறிந்து கொண்டது. அது ஆப்கானும் ஈராக்குமே.

16 மாதங்களுக்கு முன்னர் அமெரிக்கா ஈராக் மீது போர் தொடுத்தது. பலரால் எதிர்வு கூறப்பட்டது போன்று வெல்வதற்கு சாத்தியமேயில்லாத போர் ஒன்றினுள் அது சிக்குப்பட்டுள்ளது. மனித உரிமைகளையும் ஜனநாயகத்தையும் மதிக்கும் நாடுகளில் அமெரிக்காவும் ஒன்றென போலியாகக் கூட சொல்லமுடியாத நிலையினை அமெரிக்க நிர்வாகம் தற்போது தோற்றுவித்துள்ளது.

ஏறக்குறைய 3 வருடங்களுக்கு முன்னர், அமெரிக்கா ஆப்கானிஸ்தான் மீது போர் தொடுத்தது. ஒசாமா பின் லாடனுக்கும் அல்கய்தாவிற்கும் உதவிய தலிபான் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்தது. தலிபானைக் கவிழ்த்த போதும் அதன் தலைவராக கருதப்படும் பின்லாடனை அமெரிக்க படையினரால் பிடிக்க முடியவில்லை.

ஆப்கான் மீது போர் தொடுத்தபோது அமெரிக்க படையினர் சிலரே உயிரிழந்திருந்தனர். இன்று ஆப்கானை கைப்பற்றிய பின்னரும் அங்குள்ள மலைகளில் மறைந்து வாழும் தலிபான் போராளிகளினது தாக்குதல்களைல் அமெரிக்கப் படையினர் தொடர்ந்தும் உயிரிழந்தே வருகின்றனர். ஆப்கானில் அமெரிக்காவிற்கு நெருக்கமான அரசாங்கம் ஆட்சியிலிருக்கின்றபோதும் நகருக்கு வெளியே அதனால் அதிகாரத்தை செலுத்த முடியவில்லை. ஈராக்கைப் போலல்லாது ஐரோப்பா உள்ளிட்ட சர்வதேச சமூகம் ஆப்கானில் அமெரிக்காவிற்கு உதவிக்கரம் நீட்டியுள்ள போதும், அவர்களால் பாதுகாப்பை உறுதிசெய்ய முடியவில்லை. மாறாக தலிபான் தன்னை மிகவும் பலப்படுத்திவருகிறது. ஈராக்கைப் போன்று இங்கும் முடிவென்பது கண்ணுக்குப் புலப்படாத ஒன்றாகவே இருக்கிறது.

ஆப்கானிஸ்தானிலும் சரி, ஈராக்கிலும் சரி அமெரிக்காவின் போர், தீவிரவாதிகளை அதிகளவில் உருவாக்குவதற்கு மட்டுமே பெரும் உதவி புரிந்துள்ளது. அமெரிக்கப் படையினர் இவ்விரு பிரதேசங்களில் நிலைகொள்ளத் தொடங்கிய பின்னர் முன்னெப்போதுமில்லாதைவிட தீவிரவாதத் தாக்குதல்கள் மிக மோசமாக அதிகரித்துள்ளன. அமெரிக்கா ஆப்கானிலும் ஈராக்கிலும் போர் தொடுத்ததற்கு தீவிரவாதிகளது செயற்பாட்டை குறைப்பதுதான் நோக்கமெனில், அதில் முழுமையான தோல்வியே ஏற்பட்டுள்ளது.

ஆப்கானைக் கைப்பற்றியதையடுத்து அமெரிக்கா அங்கு என்ன செய்தது, தீவிர அடிப்படை மதவாத தலிபானின் ஆட்சி அங்கு இல்லை. தலிபானின் ஆட்சி அங்கு இருந்த போது ஒபிய வர்த்தகம் முற்றாக நிறுத்தப்பட்டிருந்தது. ஆனால் இன்று ஆப்கானில் ஓபிய வர்த்தகம் கொடிகட்டிப் பறக்கின்றது. உலகின் மிகப் பெரும் ஹெரோயின் உற்பத்தி நாடாக ஆப்கான் மாறிவிட்டது. தலிபானின் மோசமான அடக்குமுறைகளில் இருந்து மக்கள் மீண்டதாக கூறுவதா? இல்லை போதைப் பொருள் சந்தையில் ஆப்கான் தவிர்க்க முடியாத முக்கியத்துவத்தைப் பெற்று விட்டதாக கூறுவதா?

றேகன் குறிவைத்த இலக்குகள் அனைத்தம் கொம்யூனிசம் பரவுவதற்கு எதிரானதாகவும் அவை பௌதீகமாக சுட்டக்கூடியதாகவும் இருந்தது. அதனால் அநேகமான, முதலாளித்துவத்தை தக்க வைக்க விரும்பும் நாடுகளிடமிருந்து அதற்கு எதிர்ப்பு கிளம்பவில்லை. புத்திஜீவிகளால் அதற்கு உலகில் எதிர்ப்பு இருந்த போதும், நாடுகளால் அதற்கு எந்த வித உறுதியான எதிர்ப்பும் தோன்றவில்லை. ரஷ்யா ஆப்கானிலிருந்து துரத்தப்பட்டதை கொம்யூனிஸ்ட் நாடான சீனா உட்பட உலக நாடுகள் உள்ளூர விரும்பினவென்றே கூறலாம்.

ஆனால் புஷ்ஷின் இலக்குகள் எவை என்றே அறியமுடியாத மாயத் தோற்றமாகவே இருக்கிறது. புஷ் முன்வைக்கும் பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கையென்பது ஒரு உள்ளீடற்ற வெற்றுக் கோஷமாக இருக்கின்றது. இதற்கு உலக நாடுகளினது ஆதரவு மிகவும் குறைவாகவே இருக்கும். பிரான்ஸ் ஜேர்மனி, ரஷ்யா போன்ற நாடுகள் புஷ்ஷின் பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டுவதற்காக ஈராக் ஆக்கிரமிப்பை கடுமையாக எதிர்த்தமை குறிப்பிடத்தக்கது. சில நாடுகளது தலைவர்கள் புஷ்ஷிற்கு பின்னால் நிற்கின்றபோதும் அங்கு மக்களாதரவு வென்பது பூச்சியமாகவே இருக்கிறது.

தற்பாதுகாப்பிற்கான போர் மட்டுமே நியாயமான போரென்று கூறப்படுகிறது. ஏனைய போர்கள் நியாயமற்றவையாகவே கருதப்படுகிறது. 1945 முதல் அமெரிக்கா தொடுத்துவரும் நியாயமற்ற போர்கள் அனைத்தும் 'சுதந்திரத்தை பாதுகாப்பதற்காக' மேற்கொள்ளப்பட்டவையென்றே அமெரிக்கத் தலைவர்களால் கூறப்பட்டுவருகின்றது. இன்று புஷ்ஷும் அதையே கூறுகிறார். ஈராக் அமெரிக்காவின் சுதந்திரத்திற்கு அச்சுறுத்தலாக இருக்கவில்லையென்பதை அனைவரும் அறிவர். அதேபோன்று வட வியட்னாமோ, ஆப்கானிஸ்தானோ யூகோஸ்லாவியாவோ, வடகொரியாவோ அச்சுறுத்தலாக இருக்கவில்லை. இந்நாடுகள் மீதான போர்கள் ஆட்சியிலிருப்பவர்களால் தமது தேவைகளுக்காக வேண்டுமென்றே தொடுக்கப்பட்ட ஆக்கிரமிப்பு யுத்தங்களாகவே சமாதான விரும்பிகளால் கருதப்படுகிறது.

ஜேர்மன் நாசி படைகளுக்கு எதிராக போர் தொடுக்க பிரான்சின் நோமன்டியில் நேசநாடுகளது படைகள் தரையிறங்கிய தினத்தின் (D-DAY) 60ஆவது வருட பூர்த்தியைக் கொண்டாட நோமண்டியில் புஷ் உட்பட உலகத் தலைவர்கள் பலர் ஒன்று கூடியிருந்தனர். இங்கு உயிர்நீத்த படையினரது கல்லறைகள் மீது மலர்கள் துாவி அவர்கள் கௌரவத்துடன் நினைவு கூரப்பட்டனர்.

இவ்வாறு போரில் உயிர் நீத்தவர்களைக் கௌரவிப்பதற்கான ஒரே சிறந்த வழி, அவர்களது எண்ணிக்கையைத் தொடர்ந்தும் அதிகரிக்காமலிருப்பதே. ஆனால் அந்த எண்ணிக்கையை அதிகரிக்கும் நடவடிக்கைகளே இன்று உலகில் இடம் பெற்றுவருகின்றன.

**அகஸ்தி**

# கடித இலக்கியம்



உல்லுபீ
புயனாக்ஸ்கி

உல்லுபீ புயனாக்ஸ்கி (1890 — 1919) பதினைந்தாம் வயதில் போல்ஷ்விக் நிறுவனத்தில் வேலை செய்யத் தொடங்கினார். மாபெரும் அக்டோபர் புரட்சியும் உள்நாட்டுப் போரும் நடந்த ஆண்டுகளில் இந்தக் கம்யூனிஸ்டு இளைஞர் காக்கேசியக் குடியரசுகளில் ஒன்றான தாகிஸ்தானில் கட்சி நிறுவனத்தின் "தலைவராக" எல்லோராலும் மதிக்கப்பட்டார்.

சோவியத் நாடு போர் முனைகளில் வளையத்தால் நெரிக்கப்பட்டுத் திணறிக் கொண்டிருந்தது. தாகிஸ்தானில் உள்நாட்டுத் தேசியவாதிகளும் வெளிநாட்டு தலையீட்டாளர்களும் ஆதிக்கம் செலுத்தி வந்தார்கள். ரஷ்சியக் கம்யூனிஸ்ட் (போல்ஷ்விக்) கட்சியின் மறைமுக மாவட்டக் கமிட்டியையும் தாகிஸ்தான் இராணுவ ஆலோசனை சபையையும் 1919ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் புய்னாக்ஸ்கி அமைத்தார். எண்ணாயிரம் படையினர் கொண்ட கிளர்ச்சிச் செஞ்சேனை சட்டவிரோதமான நிலைமைகளில் உருவாயிற்று. புரட்சி எதிர்ப்பு அரசாங்கத்தை வீழ்த்துவதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டது.

ஆனால் உளவாளி தகவல் கொடுத்து விட்டதால் தாகிஸ்தான் மாவட்ட கமிட்டி உறுப்பினர்கள் அனைவரும், புய்னாக்ஸ்கியும் கைது செய்யப்பட்டார்கள். வெண்படைக் கொலையாளியின் துப்பாக்கிக் குண்டால் உல்லுபீ புய்னாக்ஸ்கி கொல்லப்பட்டார். அப்போது அவருக்கு 30 வயது கூட நிரம்பவில்லை.

# காதலிக்குக் கடிதம்

அன்பார்ந்த தாத்து!

கடைசியில் உன்னை ஒருமையில் விழிக்க அனுமதி கொடு. இதுவரை நாம் ஒருவரை ஒருவர் "நீங்கள்" என்று பன்மையில் அழைத்து வந்தோமே, அதனால் சொல்கிறேன்.

என்னுடைய குறுகிய வாழ்க்கைப் பாதையில் முடிந்தவரை பயனுள்ள விதத்தில் முன்னேற முயன்று வந்திருக்கிறேன். நான் நேர்மை அற்றவனாகவும் வேறு கெட்ட குணங்கள் உள்ளவனாகவும் இருந்தேன் என்று ஒருவனும் சொல்ல மாட்டான், சொல்லத் துணிய மாட்டான். என்னைப்பற்றி அவதூறு கூற எவனும் துணிய மாட்டான். இதுவே எனக்குப் போதும். என் வாழ்க்கை எத்தகையதாய் இருந்தது.? நான் சொல்வதை நம்பு. சின்னஞ்சிறு வயது முதலே நான் களிப்பைக் கண்டறியவில்லை. இப்போது. அஸ்தமன வேளையில் எனக்குக் கதிரொளி கிடைத்து விட்டது போல், தெளிந்த, தூய வானம் என்னை நோக்கிப் புன்னகை புரிவது போல் இருக்கிறது. இது உன்னுடைய புன்னகை.... என் கடிதத்துக்கு நீ மிக நன்றாக பதில் எழுதியிருந்தாய். "நான்தான் உங்களைக் காதலிக்கின்றேனே" என்று. எனக்கு இதுவே போதும். அந்தக் கணம் முதல் நான் இன்பத்தில் திளைக்கிறேன். ஆனால் பரிவு, நிரந்தரப் பிரிவு நம் இருவரையும் இவ்வளவு விரைவில் வேறுபடுத்தி விட்டது. எதற்காக? இதுதான் விதி போலும்.

நீ எப்போதும் போலத் துணிவும் உறுதியும் கொண்டிரு. உன் இளமையையும் முகையவிழும் வாழ்க்கையையும் உச்சத்திலிருக்கும் உலகப் போராட்டத்தையும் எண்ணிப்பார். நினைவு வைத்துக்கொள், நான் இல்லாவிட்டால் உலகம் வெறுமை ஆகி விடாது! உறுதியாய் இரு. பெருமிதத்தோடு தலை நிமிர்ந்து ஒளி வீசும் வருங்காலத்தை நோக்கி நட... நீ என்னை உளமாரக் காதலித்தால் ஒரு சொட்டு கண்ணீர் விடாதே. கொடிய பகைவர்கள் நகையாட இடம் தராதே. உன் எண்ணங்கள் யாவற்றாலும் நீ எவனும் உன் பலவீனத்தைக் கண்டு கொள்ள விடாதே. மாறாக, உன் விழிகளின் மின் வெட்டைக் கண்டு ஒவ்வொருவனும் குற்றவாளிபோல் இருப்பு கொள்ளாமல் தவிக்கட்டும். நான் மன்னிப்புக் கோரலாம் என்று வழக்குரைஞர், சொன்னார். என் அருமைத் தாத்து! நானா மன்னிப்புக் கோருவேன்? ஒரு போதும் மாட்டேன். அப்படிச் செய்தால் நான் உல்லுபீ என்று நீ ஒப்புக் கொள்ளவே மாட்டாய்....

ஆகவே என் அன்பே, முன்னே பார்வை செலுத்து. நீ உளமார நேசிக்கும் நம் மக்களின் நன்மைக்காக வாழ்ந்திரு. அசட்டுத்தனம் எதுவும் செய்யாதே. நல்லது. விடை கொடு. தொலைவில் இருந்து நெஞ்சார முத்தமிடுகிறேன்.

**விரும்பிய பாதையில் நடை**
**போட்டே. உள்ளம்**
**விழைந்திடும் வகையினில்**
**வாழ்ந்திடல் இங்கே**
**அரும் பெரும் சாதனை.**
**ஆயினும் அதினில்**
**ஆதாயம் கிட்டுதல் அரிதினும்**
**அரிதே....**

அருமைத் தாத்து, நான் தெரிந்தெடுத்த பாதையை நீயும் சற்று விரும்பேன்.

**உன் உல்லூபீ.**

✉ ✉ ✉

**...காதலிப்பது என்றால்**
**பகுத்தறிவைத் தள்ளு!**

இது உண்மைதானா? இப்படித்தான் காதலிக்க வேண்டுமா? தற்காலத்தில் இதற்கு திருத்தம் தேவை என்று நினைக்கின்றேன்.

என்னுடைய நம்பிக்கைகள் முயற்சிகள் ஆகியவற்றின் வட்டத்தில் இருந்து வெளியேற்றப்படும் அளவுக்கு நான் பகுத்தறிவை இழந்து விட வேண்டுமா? கூடாது!

காதல் எவ்வளவுதான் வலியாய் இருந்தாலும் என்னுடைய கருத்தோட்டத்திற்கு பொருந்த வேண்டும் என்று திட்டவட்டமாக உனக்கு கூறி விடுகின்றேன். இல்லாவிட்டால் அதை நான் என் நெஞ்சிலிருந்து பகுத்து அகற்றிவிட வேண்டும் அல்லது மடிந்து விட வேண்டும். இந்த வரிகளைப் படித்ததும் ஒரு வேளை நீ இப்படிச் சொல்லலாம்: ஓ, வீரம் பேசுகிறாயோ! அப்படியானால் பையா, உனக்கு ஏதோ சரியாய் இல்லை என்று அர்த்தமாகிறது.

நீ நினைப்பது சரியா இல்லையா என்பது எனக்குத் தெரியாது ஆனால் ஒன்றை மட்டும் நினைவு வைத்துக்கொள். காதலிக்கும் இருவரில் ஒருவர் மற்றவரின் செல்வாக்குக்கு உள்ளாக வேண்டும். பிறகு இந்த நிலை மாறலாம், ஆனால் முழுமையான சமத்துவத்தைக் கடைப்பிடிப்பது அனேகமாக இயலாது.காதலுக்கு உரியவரின் செல்வாக்கிற்கு உள்ளாவது அவ்வளவு மோசமானதா என்ன? "இல்லை" என்றே சொல்ல வேண்டும் ! ஆனால் காதலரின் கருத்தோட்டம் புரிவதாகவும் மதிப்புக்கு உரியதாகவும் இருக்கும் போது தான் இது நியாயமாகும்.

வாழ்கையின் அர்த்தம் மனிதகுலத்தின் இன்பத்தில் அடங்கி இருக்கிறது. சிறப்பாக கூர்மையான கோணங்கள் தேய்ந்து மென்மை ஆவது அப்போது தான் தொடங்கும். சமூகத்தின் ஒடுக்குமுறை மட்டுமீறி வலியாதாக இருந்தால் அதிலிருந்து தனி நபரின் விடுதலை அப்போது நிகழும். இவை எல்லாவற்றிலும் நீ என்னுடன் இசைகிறாய் என்று நினைக்கின்றேன். ஆகவே, பிரச்சனை செயல் உத்தியை பற்றியது. உன் செயல் உத்தி எத்தகையது? எது முதலாவது, எது அடுத்தது? இப்போது எது இன்றியமையாது செய்ய வேண்டியது உனக்கு தோன்றுகிறது? எந்த நடவடிக்கைகள் விரும்பத்தக்கவை என்ற நினைக்கிறாய்? இவை எல்லாம் சமூக விவகாரங்கள். சொந்த விவகாரங்களோ? தாத்துா, இந்த காலத்தில் சொந்த விவகாரங்கள் சில வேளைகளில் பொது நலனுக்கு அடிமைப்படுத்தப்பட வேண்டும். ஆனால் அவற்றை ஒரேடியாக விட்டுவிடவும் முடியாது. அப்படிச் செய்வது தேவையும் இல்லை. ஏனெனில் தனிப்பட்ட முறையில் என்னை திருத்திப்படுத்திக் கொள்ளாமல் பொதுநலத்துக்காக தேவையான வகையில் போராட என்னால் முடியாது. சொந்த நலத்தை நிறைவேற்றிக் கொள்வதும் பொது நலத்தை நிறைவேற்றிக் கொள்வதும் பொது நலத்தை போராடிப் பெறுவதும் அறிவார்ந்த விதத்தில் ஒருங்கிசைவுடன் இணைக்கப்பட வேண்டும்... நிறைய எழுதுவது உனக்கு பிடிக்காது. ஆனால் இப்போதோ, உன்னுடன் முடிவின்றிப் பேசிக் கொண்டிருக்க ஆசையாக இருக்கிறது. என்ன செய்வது? இந்த நாட்களில் என்னை எனக்கே அடையாளம் தெரியவில்லை! நான் சிந்தனை செய்வதும் கனவு காண்பதும் உன்னைப் பற்றித்தான். சாவைப் பற்றி நான் நினைப்பதே இல்லை, அது நிலவவே இல்லை போல. நம் அன்புக்கு உரிய ஒருவர் இருக்கிறார் என்று தெரிந்த பின் சாவது அவ்வளவு பயங்கரமாய் இல்லை. ஆனால் இவ்வாறு இல்லாவிட்டால் உள்ளத்தில் வெறுமையை உணர்ந்திருப்பேன்!....

...ஹார்க்கவ் நம்மவர் வசம் ஆகிவிட்டது... எக்கத்தெரீனஸ்லாவை மீண்டும் கைப்பற்றுவதற்காகச் செஞ்சேனை போரிட்டுக் கொண்டிருக்கிறது. அஷ்ஹாபாத் நம் கைக்கு வந்து விட்டது. நம்மவர் கிராஸ்னவோத்ஸ்க் நகரை நோக்கித் தாக்கி முன்னேறுகிறார்கள். எங்கும் முறியடிக்கப்பட்ட எதிர்ப்புரட்சி ஜெனரல் கல்ச்சாக்கின் படைகள் தாறுமாறாகப் பின்வாங்கி ஓடுகின்றன. சிறைப்படக் கூடாது என்பற்காகக் கல்ச்சாக் சுட்டுக் கொண்டு இறந்து விட்டதாக கூட வதந்தி உலாவுகிறது. நம்மவர்கள் ஸ்லத்தவூஸ்தை நெருங்கி விட்டார்கள். இத்தாலியிலும் பிரான்சிலும் புரட்சி இயக்கம் தொடங்கி விட்டது. நம்முடைய, ரசியாவினுடைய விவகாரங்களில் தலையிடுவதை பிரிட்டிஷ் தொழிலாளர்கள் உறுதியாக எதிர்த்திருக்கிறார்கள். இவ்வளவுக்கு பின் மகிழ்ச்சி கொண்டாடாமல் இருப்பது எப்படி?

அருமைத் தாத்தா, சிறையிலிருந்து வெளியேறிச் சுதந்திரமாக இடைவிடாது உழைக்க எவ்வளவு ஆவலாய் இருக்கிறது, தெரியுமா? இத்தகைய மாபெரும் கணத்தில் நிகழ்ச்சிகளிலிருந்து தொலைவில் இருப்பது எவ்வளவு படுமோசம்!

இப்படி நீண்ட காலம் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. ஒன்று வெற்றி, இல்லாவிட்டால் வீழ்ச்சி. இந்தக் கல்மூட்டையிலிருந்து தப்பி வெளியேற எல்லா முயற்சிகளையும் செய்வேன். சில ஏற்பாடுகள் இப்போதே செய்து கொண்டிருக்கிறோம்: துப்பாக்கி, அரம் முதலியவை சேகரித்துவிட்டோம். எங்கள் அறைக்கு தனிக்காவல் போடப்பட்டிருக்கிறது. இது பொருத்த இடைஞ்சலாக இருக்கிறது....

சிறையில் அடைபட்டிருந்தாலும் நான் உலகிலேயே எல்லோரிலும் செல்வன் என்று இப்போது உணர்கிறேன். ஒரே நேரத்தில் மூன்று சூரியர்களின் கதிர்கள் என்னை முழுக்காட்டுகின்றன: எல்லோருக்கும் பொதுவான சூரியன், சோவியத் ஆட்சி, முடிவில் நீ, இவையே என் சூரியர்கள், நீ எனது கதிரவள்...

...ஒரு முறை நான் மாஸ்கோ செல்லப்ப புறப்பட்ட போது உன் தாயாரும் நீயும் என்னை வழியனுப்ப வந்தீர்கள், நினைவு இருக்கிறதா? அப்போது நான் உன் நினைவாகவே மாஸ்கோ சென்றேன். மாஸ்கோவில் இருந்த போது நான் உன்னை நினைக்காத நாள் ஒன்று கூட இல்லை. நீ அழகிய, இனிய சிறுமி (இது நடந்து 1915-இல் என்று நினைக்கிறேன்). பின்னர் புரட்சியின் தொடக்கத்தில் நான் உங்கள் வீட்டில் வசித்த போது அனேமாகக் கோடை காலம் முழுவதும் நோயுற்ற நிலையில் இருந்தேன். எனக்கு மிக கெடுதாய் இருந்த மாஸ்கோ பனிக்காலத்தின் விளைவு இது. அப்போது நான் சதா என்னையே எல்லாக் கோணங்களிலிருந்தும் ஆராய்ந்து விமர்சனத்துக்கு உள்ளாகிக் கொண்டிருந்தேன். உனக்கு அகத்திலும் அதிகமான இன்பம் அளிக்க கூடிய மனிதன் நான் அல்ல என்ற முடிவுக்கு வந்தேன். இது என்னை நிலைகுலைய செய்யும் முடிவு... எனக்கு நினைவு இருக்கிறது, ஒரு முறை நி.யுடன் பொதுவாக, எவர் பெயரையும் குறிப்பிடாமல், கவர்ச்சியையும் காதலையும் பற்றிப் பேசிக் கொண்டிருந்தேன். நான் இன்பத்துக்கு ஏற்றவன் அல்ல, காதலிக்கு இன்பம் அளிக்க வல்லவன் அல்ல என்று தெரிந்தால் விலகிப்போய்விடுவேன். தவிர இந்த விசயமும் மிக முக்கியமானது: உனக்கும் எனக்கும் இடையே சமத்துவம் ஒரு போதும் இருக்கவில்லை. நான் போதனை ஆசிரியன் போலவும் நீ மாணவி போலவும் எப்போதும் இருந்து வந்தோம்! தாத்துா, என் காதல் எனது உணர்வுப் பொட்டகத்திலும் எனது உலக கண்ணோட்டத்திலும் மாற வேண்டும் என்று எண்ணுகிறேன், ஏனென்றால் என் காதலி என் நண்பனின் இடத்தை பெற வேண்டும் என்று விரும்புகின்றேன்... நீயே என் காதலி, நீயே என் நண்பன்!

**அன்புள்ள தாத்தூ!**

**இ[illegible] பெத்ரோகிராதில் எழுதுகிறேன்.**

**இரயில் நிலையத்தில். பெட்டியில் இருந்தபடி.**

**நான் சுட்டுக் கொல்லப்படலாம்.**

**எனக்குச் சிறிதும் அச்சம் இல்லை.**

**நான் உங்களைக் காதலிக்கிறேன்.**

உல்லுபீ.

**குறிப்பு:**

1919, ஆகஸ்டு 16-ந் தேதி இரவு, தண்டனை விதிக்கப் பெற்றவர்கள் சுடுகளத்துக்கு இட்டுச் செல்லப்பட்ட போது உ.புய்னாஸ்கி தனது காதலி தாத்துா புலாச்சுக்குக் கடைசிக் கடிதம் எழுதிக் கொடுத்தனுப்பினார். என் வாழ்க்கையின் புலர் போதில் என் நண்பன் உல்லுபீ புய்னாக்ஸ்கிக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற முழு மூச்சாகப் பாடுபட்டு வருகிறேன். கடைசி துளி இரத்தம் இருக்கும் வரை மக்களுக்குத் தொண்டுசெய்வேன். என்பது அந்த வாக்குறுதி என்ற தாத்துா புலாச் பிற்காலத்தில் கூறினார். தாகிஸ்தானின் முதல் இளங் கம்யூனிஸ்டும், கம்யூனிஸ்டுமான தாத்துா இளங் கம்யூனிஸ்டுகள் கழக மாவட்டக் கமிட்டித் தலைவியாகவும் கம்யூனிஸ்டுக் கட்சி மாவட்டக் கமிட்டியின் முதலாவது மாதர் பிரிவின் தலைவியாகவும் பணி ஆற்றினார். 1920- இல், பாக்கூநகரில் இருந்த கீழை நாட்டு இளைஞர் மன்றத்தின் செயலாளராத் தர்த்துா, புலாச் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

# புதுக்காலனியம்: புரிதலும் விடுதலையும்

கென்யாவில் பிறந்த கூகி—வா—தியாங்கோ ஆப்பிரிக்க இலக்கியம், நாடகம், அரசியல் என பல துறைகளில் முத்திரை பதித்தவர். மாணவப்பருவம் தொட்டே நாவல், நாடகம், கட்டுரைகள் என இலக்கியத்தில் தனி இடம் பிடித்ததோடு, பேராசிரியராக பணிபுரியத் தொடங்கியது முதல் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் ஆப்பிரிக்க நாடுகளில் நிகழ்த்திவந்த பண்பாட்டுப் படுகொலையை தோலுரித்துக் காட்டினார். "தேவைப்படும் போது நான் மணமுடித்துக்கொள்கிறேன். *(I will marry when I want!)* என்ற இவரது நாடகம் ஒரு பெரும் மக்கள் எழுச்சியை உண்டாக்கும் அபாயம் கொண்டதென உளவுத்துறை கூறியதன் பேரில், கென்யா அரசால் கைது செய்யப்பட்டு, தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டார். கூகி, சிறைக்காவலர்கள் கண்களில் மண்ணைத்தூவி மலம் துடைக்கும் தாளில் இவர் எழுதிய "டெவில் ஒன் த குராஸ்" தமிழாக்கம் "சிலுவையில் தொங்கும் சாத்தான்" என்ற பெயரில் வெளிவந்ததுள்ளது. (தாமரைச் செல்வி பதிப்பகம்" டிசம்பர் 2000. மொ.பெ. அமரந்த்தா) அதன் பிறகு நாடுகடத்தலுக்கு ஆளான கூகி, இன்று நியூயோக்கில் வசித்து வருகிறார்.

ஆங்கிலத்தில் எழுதப்படும் இலக்கியம் உள்நாட்டு எளிய மக்களுக்கு பயன்படுவதில்லை என்றுணர்ந்த கூகி, இனி ஆங்கிலத்தில் எழுதுவதில்லை என்ற அறிவிப்போடு " காலனீய ஆதிக்கத்திற்கு ஆட்பட்ட மனதை விடுவித்தல்" *(De-colonizing the mind)* என்ற தலைப்பில் வெளியிட்ட கட்டுரைத் தொகுதியின் முன்னுரை இங்கு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

அமரந்த்தா.

கடந்த இருபது ஆண்டுகளாக நான் உணர்வுபூவமாக ஈடுபட்டுள்ள புனைகதை, நாடகம், விமர்சனம், இலக்கிய ஆசிரியப்பணி ஆகியவற்றின் தொகுப்பே இந் நூல். வீடு திரும்புதல் (ஹோம் கம்மிங்) அரசியல் எழுத்தாளர்கள். (ரைட்டர்ஸ் இன் பொலிடிக்ஸ்). பேனாவின் குழல் (பரல் ஒவ் எ பென்) சிறைப்பட்டவன்: ஒரு எழுத்தாளனின் சிறைக் குறிப்புகள். (டீடெயின்ட்: ஏ ரைட்டர்ஸ் பிரிசன் டயரி) உள்பட அனைத்துமே ஏற்கனவே எங்கோ படித்தது போன்ற உணர்வை ஏற்படுத்துகிறது என்று நீங்கள் சொல்லக்கூடும். அப்படிப்பட்ட எதிர்வினை ஓரளவு சரியானதே. எனது முந்தைய எழுத்துக்களிலும் பேட்டிகளிலும் இலக்கிய ஆக்கத்தில் மொழிகுறித்த பிரச்சனைகள் ஆங்காங்கே தொட்டிருந்த போதிலும், அவற்றை ஒன்றோடொன்று தொடர்டையதாகவும் கோர்வையாகவும் முன்வைக்கும் வாய்ப்பினை இப்புத்தகத்தில் இடம்பெற்றுள்ள உரைகள் அளித்துள்ளன. அந்த காலகட்டத்தில் மற்றவர்கள் அப்பிரச்சனைகளை ஆதரித்தும் முரண்பட்டும் எதிர்கொண்ட விதத்தில் இருந்து நான் பெற்ற தெளிவினால் இந்தத் தொகுப்பில் உள்ள உரைகள் பயனடைந்திருக்க வேண்டுமென நம்புகிறேன். ஆப்பிரிக்காவின் எதிர்காலம் குறித்த கண்டந்தழுவிய தொடர் விவாதங்களின் ஒரு பகுதியே இப்புத்தகம்.

நீண்ட நெடுங்காலமாகவே ஆப்பிரிக்க நிலைமைகள் குறித்த ஆய்வுகள் யாவும், இம்மக்கள் பழங்குடியினர் (Tribes) என்ற அடிப்படையிலேயே அமைந்துள்ளன. கென்யா, உகண்டா, மாளாவி நாடுகளில் என்ற நடந்தாலும் அது பழங்குடி 'அ' விற்கு எதிராக பழங்குடி 'இ' மோதல் என்று காட்டப்படுகிறது. செய்ரேஇ நைஜுரியா, லைபீரியா, ஸாம்பியா நாடுகளில் என்ன கலவரம் வெடித்தாலும் அது பழங்குடி 'உ' க்கு எதிராக பழங்குடி 'எ' வின் பாரம்பரிய பகையினால் எற்பட்டது எனப்படுகிறது. மக்களை சுலபமாக "பழங்குடிகள்" என்ற அடைப்பிற்குள் கொண்டுவர இயலாதபோது அதுவே இஸ்லாமியருக்கு எதிராக கிறிஸ்தவர் அல்லது கத்தோலிக்கருக்கு எதிராக புராட்டஸ்டண்ட் பிரிவினர் என்றும் கூறப்படுகிறது. இலக்கிய ஆக்கங்களே கூட பல சமயங்களில் எழுதுபவரின் 'பழங்குடிப்பிறப்பு' அடிப்படையிலும் சம்பந்தப்பட்ட நாவல் அல்லது நாடகத்தின் பாத்திரங்களுடைய 'பழங்குடிப் பிறப்பு' அடிப்படையிலும் தர நிர்ணயம் செய்யப்படுகின்றன. ஆப்பிரிக்காவின் பெரும்பான்மையான பிரச்சனைகளுக்கு இன்னமும் ஏகாதிபத்தியம் தான் அடிப்படைக் கார்ணம் என்னும் உண்மையை மக்கள் அறியவிடாமல் செய்யும் மேற்கத்திய ஊடகங்கள் இது போன்ற முற்றிலும் தவறான புரிதலைப் பரவலாக்குகின்றன. துரதிஷ்டவசமாக ஆப்பிரிக்க புத்திஜீவிகளில் சிலர் இந்தப் பிரச்சனைக்கு மீட்சியோ இல்லாமல் நிரத்தரமாக இரையாகிவிட்டனர். அறிவர்தமான கண்ணோட்டங்களில் உள்ள மாறுதலையும் அரசியல் மோதல்களையும் தனிநபர்களின் இனக்குழு அடையாளங்களுடன் தொடர்புபடுத்தி விளக்குவதில் உள்ள பிரித்தாளும் சூழ்ச்சியை காணத் தவறி விட்டார்கள் அவர்கள். எந்தவொரு ஆணும் பெண்ணும் தனது பிறப்பு எந்த நாட்டில் நிகழவேண்டுமென தீர்மானிக்க முடியாது. நிலையானவற்றைக் கொண்டு (மாற்ற முடியாதவை) பல்வேறு மக்களுக்கிடையேயான பிரச்சனைகளும் எல்லாக் காலங்களிலும் இடங்களிலும் ஒன்று போலவே இருக்கும். மேலும் நிரந்தரமாக உள்ளவற்றில் ஏற்படக்கூடிய மாற்றங்களினால் (எடுத்துக் காட்டாக: மக்களின் மரபணு அல்லது உயிரியலில் தலைகீழ் மாற்றங்கள்) அன்றி சமூக பிரச்சனைகளுக்கு வேறு எதனாலும் தீர்வும் இராது.

எனது அணுகுமுறை வேறாக இருக்கும். ஆப்பிரிக்க நிலைமைகளை இன்று ஆப்பிரிக்காவை பாதிக்கும் இருவேறு எதிரிடையான சக்திகளுக்கிடையேயா்ன பெரும் போராட்டமாகவே நான் காண்பேன். ஒரு புறம் ஏகாதிபத்திய மரபு. மறுபுறம் அதனை எதிர்க்கும் மரபு. இன்றைய ஆப்பிரிக்காவில் ஏகாதிபத்திய மரபு பன்னாட்டு நிறுவனங்களில் வாயிலாக சர்வதேச பூர்ஷ்வாக்களாலும், கொடிபிடித்துக் கூத்தாடும் உள்நாட்டு ஆளும் வர்க்கங்களாலும் பேணப்படுகிறது. இத்தகைய நவ காலனீய பூர்ஷ்வா வர்க்கத்தின் பொருளாதார மற்றும் அரசியல் சார்பு நிலை, அதன் கற்கால பண்பாட்டிலும், காவல்துறையினரின் சப்பாத்துக்களாலும் முள்கம்பிகளாலும் கவுண் மாட்டிய போதகர்கள் மற்றும் (அ) நீதியாளர்களாலும் ஆளப்பட்ட இம் முரட்டு மக்களின் கிளிப்பிள்ளைத் தனத்தாலும் வெளிப்படுகிறது. அவர்களது கருத்துக்கள் தேசிய அறிவுஜீவிகளையும் கொண்ட அமைப்பால் பரப்பப்படுகின்றன. எதிர்ப்பு மரபானது உழைக்கும் மக்களால் (கூலி விவசாயிகள் மற்றும் கூலித் தொழிலாளிகள் ) நாட்டுப்பற்று மிக்க மாணவர்கள், அறிவு ஜீவிகள் (கல்வி மற்றும் இன்ன பிற துறைகளைச் சேர்ந்த) இராணுவ வீரர்கள் மற்றும் நடுத்தர வர்க்கம் சார்ந்த முற்போக்கு சக்திகள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் செயல்படுத்தப்படுகின்றது. இந்த எதிர்ப்புணர்வு விவசாயி மற்றும் தொழிலாளி வேர்களைக் கொண்ட தேசிய பண்பாட்டினை நாட்டுப்பற்றுடன் காப்பதிலும் ஒரே தேச எல்லைக்குள் வசிக்கும் அனைத்து தேசிய இனங்களினதும் ஏகாதிபத்திய எதிர்ப்புக்குக் கிடைத்த வெற்றியே ஆகும். இதுபோன்ற அடிகளின் கனம், அளவு, தீவிரம், காலம், இடம் ஆகியவை என்னவாக இருந்தாலும் அவற்றின் கூட்டுத்தொகையே தேசிய பாரம்பரியமாகும்.

ஆப்பிரிக்க மக்களின் போராட்டப் பண்பாட்டினை நாட்டுப்பற்றுடன் ஆதாிப்பவர்களுக்கு ஏகாதிபத்தியம் என்பது வெறும் கோஷம் அல்ல. உள்ளடக்கத்திலும் வடிவத்திலும் செயல்முறையிலும் விளைவுகளிலும் உணரக் கூடியதாக உண்மையாக உள்ளது அது. ஏகாதிபத்தியம் என்பது ஒருங்கிணைந்த பணமுதலீட்டின் ஆட்சி. 1884 முதல் இந்த ஒற்றை ஒட்டுண்ணி முதலீடு, எங்கள் நாடுகளில் மூலைமுடுக்குகளில் உள்ள ஏழை விவசாயிகளின் வாழ்வைப் பாழாக்கி வருகிறது. சந்தேகமிருந்தால், இப்போது எத்தனை ஆப்பிரிக்க நாடுகள் ஐ.எம்.எஃ. இங்கு ஜுலியஸ் ரைரேரே ஒருமுறை குறிப்பிட்டது போல 'சர்வதேச நிதி அமைச்சகத்திற்கு' அடகு வைக்கப்பட்டுள்ளன ஏ்னறு எண்ணிப் பாருங்கள். அடகுத்தொகையை யார் கட்டுகிறார்கள்? அடகு வைக்கப்பட்ட நாட்டின் ஒவ்வொரு செல்வம் விளைவிப்பவரும் (பயன் பாடு மதிப்பு) அதாவது அந்நாட்டின் ஒவ்வெரு தொழிலாளியும் விவசாயியும் ஏகாதிபத்தியம் முழுமையானது. அது இன்றைய உலகில் மக்களது பொருளாதாரம் இராணுவம்- பண்பாடு உளவியல் ஆகியவற்றின் மீது விளைவுகளை ஏற்படுத்தவல்லது. பேரழிவிற்கு இட்டுச் செல்லக்கூடியது.

மேற்குலக நிதி முதலீடும் அதன் குடையின் கீழ் அமைந்த பன்னாட்டு ஏகபோக முதலீடும் லத்தீன் அமெரிக்கா, ஆப்பிரிக்கா ஆசிய போலினேசியா ஆகியவற்றைத் தொடர்ந்து சுரண்டும் சுதந்திரமானது, இன்று மரபான ஆயுதங்கள் மற்றும் அணு ஆயுதங்களால் பாதுகாக்கப்பட்டுள்ளது. அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியம் உலகின் போராடும் மக்களையும் அமைதியும் ஜனநாகமும் சோஷலிசமும் தேவை என்போரையும் நோக்கி இறுதி எச்சரிக்கை விடுக்கிறது. பகல் கொள்ளையை அனுமதி - அல்லது அழிந்து போ.

உலகின் ஒடுக்கப்பட்டவர்களும் கொள்ளையடிக்கப்பட்டவர்களும் தங்கள் எதிர்ப்பில் உறுதியாக இருக்கிறார்கள். சுரண்டப்படுவதிலிருந்து விடுதலை. இந்த ஒட்டு மொத்த எதிர்ப்பிற்கு பதிலடியாக எகாதிபத்தியம் தினசரி கட்ட விழ்த்து வரும் மாபெரும் ஆயுதமானது பண்பாட்டு வெடிகுண்டு. பண்பாட்டு வெடிகுண்டின் பயன் என்ன தெரியுமா? நம்பிக்கை இழக்கச்செய்தல். மக்களுக்கு அவர்களது பெயர்களில் மொழிகளில், சுற்றுச்சூழலில், தங்கள் போராட்டப் பண்பாட்டில், ஒற்றுமையில். திறமையில், கடைசியில் தங்கள் மேலேயே உள்ள நம்பிக்கையை இழக்கச் செய்தல். தங்களது கடந்த காலத்தை சாதனைகளற்ற பாழ்நிலமாகப் பார்க்கச்செய்து பாழ்நிலத்தினின்றும் தம்மை விலக்கிக்கொள்ளும் மனநிலையை ஏற்படுத்துவது. தங்களிடமிருந்து நீண்ட நெடுந்தொலைவு விலகியுள்ள எமனுடனோ தம்மை அடையாளம் கண்டுகொள்ளத் தூண்டுவது. எடுத்துக்காட்டு. தங்கள் மொழியை விட்டு பிறர் மொழியை நாடிச்செல்லுதல், நசிவுற்ற பிற்போக்கான தம் வாழ்வின் ஊற்றுக்ளை அடைக்கக்கூடியவற்றுடன் தம்மை அடையாளம் காணும் படி செய்வது. போரடுவதற்கான தார்மீக உரிமை குறித்த ஆழமான ஐயங்களைக்கூட அது விதைத்துவிடக் கூடும். ஜெயிப்பது, வெற்றி பெறுவது என்பவை சாத்தியமற்ற கேலிக்குரிய கனவுகள் எனப் பார்ப்பது. இவற்றால் எல்லாம் எதிர்பார்க்கப்படும் விளைவுகள். நம்பிக்கை இழப்பு, மனத்தளர்ச்சி, இறுதியில் ஒட்டுமொத்த சாவுக்கான விருப்பம். தான் உருவாக்கியிருக்கும் பாழ்நிலத்தின் நடுவே ஏகாதிபத்தியம் தன்னை ஒரு தீர்வாக முனவைக்கிறது. சார்ந்திருப்போர் தன்னைப்பற்றி புகழ்ந்து பாடுகயைில் தொடர்ச்சியாக, "திருட்டு புனிதமானது" என்ற பல்லவியை திரும்பத்திரும்ப பாட வேண்டும் என்றும் நிர்பந்திக்கின்றது. உண்மையைச் சொல்லப்போனால், பல சுதந்திரமான ஆப்பிரிக்க நாடுகளின் புதுக் காலனீய பூர்ஷ்வாக்களை அடையாளம் காட்டுவது இந்தப் பல்லவிதான்.

ஏகாதிபத்தியத்தை அதன் புதுக் காலனீய நிலையில் எதிர்த்துப் போராடும் வர்க்கங்கள், இந்த அபாயத்தை, மிகவும் உயரிய ஆக்கபூர்வமான பண்பாட்டைக் கொண்ட உறுதியான போராட்டங்களால் எதிர்கொள்ள வேண்டும். இந்த வர்க்கங்கள் தங்களது பண்பாட்டில் ஊறிய போராட்ட ஆயுதங்களை மேலும் இறுக்கிப்பிடித்து மோதவேண்டும். தங்கள் மொழிகள் ஒவ்வொன்றிலுமுள்ள கூட்டுப் போராட்ட மொழியை பேச வேண்டும். "ஒன்றுபட்ட மக்களை வீழ்த்த முடியாது." என்ற பாடலைப் பாட, தொலைந்து விட்ட தங்கள் நாடிகளையெல்லாம் கண்டுபிடித்தாக வேண்டும்.

இந்த நூலின் அடிப்படைக் கருத்து எளிமையானது. கயானா நாட்டுக் கவிஞர் மார்ட்டின் கார்ட்டரின கவிதை சொல்வது: பசிகொண்ட எளிய ஆண்களும் பெண்களும் ஒளியில்லாத இருட்டறைகளில் வசிக்கிறார்கள். தென்னாபிரிக்கா, நமீபியா, கென்யா, செய்ரே, ஐவரி கோஸ்ட், எல்-சல்வடோர், சிலே, பிலிப்பைன்ஸ், தென் கொரியா, இந்தோனேசியா, கிரேனடா, மொத்தத்தில் ஃபிரான்ஸ், பாணன் குறிப்பிட்ட "இவ்வுலகின் கடைகெட்ட மக்கள்", கனவு காண்பதற்காக தூங்குததில்லை, மாறாக உலகை மாற்றும் கனவைக் கொண்டவர்கள்" என ஓங்கிய குரலில் தெளிவாக அறிவித்தவர்கள் அவர்கள்.

இந்நூலில் எழுப்பப்பட்டுள்ள பிரச்சனைகள் உங்கள் இதயங்களில் எதிரொலிக்கும் என்று நம்புகிறேன்.

கூகி-வா-தியாங்கோ

# நூலகம்




## பாலாவின் விடுதலை

விடுதலைப்புலிகளின் "தத்துவாசிரியர்", "சிந்தனையாளர்" என்று அடிக்கடி அன்ரன் பாலசிங்கம் அவர்களின் பெயருக்கும் என்னால் இடப்படும் அடைபற்றி, அதற்குரிய காரணம் பற்றி நான் அடிக்கடி சிந்திப்பதுண்டு. விடுதலைப்புலிகளின் அரசியல் பேச்சாளராக மட்டுமே அவரை அறிந்திருந்த எனக்கு, அவருடைய எழுத்துக்களோடு எந்தவித பழக்கமும் இருந்ததில்லை. அவர் ஆரம்பத்தில் கண்டியில் இருந்து வெளிவந்த செய்திப் பத்திரிகையில் எழுதியதாகக் கேள்விப்பட்டதுண்டு. ஆயினும் அவர் விடுதலைப் புலிகளின் கலைப்பண்பாட்டு கழகத்தினால் வெளியிடப்பட்டுவந்த "வெளிச்சம்" ஏட்டில் எழுதிய அண்மைக்கால எழுத்துக்கள் எதுவும் என்பார்வைக்குக் கிட்டவில்லை. இதுவே எனது இழப்பிற்கு காரணமாய் இருந்திருக்கலாம்.

ஆனால் அண்மையில் பதினாறு கட்டுரைகள் அடங்கிய "விடுதலை' என்ற அவரது நூலைப் படித்தபோது நான் மிகுந்த வியப்புக்குள்ளானேன். "எம்.ஜி.ஆரும் புலிகளும்" "ரஜீவ் - பிரபா சந்திப்பு" ஆகிய இரண்டு கட்டுரைகளும் தவிர்ந்த ஏனைய ஒன்பது கட்டுரைகளும் மெய்யியல் சார்ந்தவையே. இப்பிடி வெறுமனே "மெய்யியல் சார்ந்தவை" என்று எழுதி விடுவது அவர் நூலுக்கு நியாயம் விளைவிக்கப் போவதில்லை. இக்கட்டுரைகள் எழுதப்பட்டுள்ள முறை அவற்றின் நோக்கு ஆகியவைபற்றி சிறிது வாசிப்பதன் மூலமே அது நிவர்த்திக்கப்படலாம்.

இன்றைய தமிழ் எழுத்தாளர் பலர் மேற்கத்தைய கீழைத்தேய சிந்தனைகள் பற்றி அதிகம் தெரியாதவர்களாகவே இருக்கின்றனர். கூடிப்போனால் மார்க்சியத்தை தெரிந்து வைத்திருப்பார்கள். அதற்கு இணையாக சைவசித்தாந்தத்தையும் தெரிந்து வைத்திருப்பார்கள். வேடிக்கை என்னவென்றால் மார்க்சீயத்தை தெரிந்துவைத்திருப்பவர்களுக்கு அதன் இன்றைய மாற்றங்கள் போக்குகள் ஒன்றும் தெரியாது. அவ்வாறே சைவசித்தாந்தத்தை இன்றைய பார்வைக்கேற்ப வளைத்து வியாக்கியானப்படுத்தத் தெரியாது. மார்க்சையும் நாவலரின் பண்டிதப் பிடிக்குள் சிக்கவைத்துத் தேக்கி முடைநாற்றம் அடிக்கவைப்பதில் இவர்களுக்கு நிகர் இவர்களே.

இந்தப் பின்னணியில் அன்ரன் பாலசிங்கத்தின் நூலைப் படிப்பவர்களுக்கு அதன் முக்கியத்துவமும் "விடுதலை" இதழும் தெரியவரும். பாலசிங்கம் இக்கட்டுரைகளை ஒரு சாதாரண வாசகனுக்கு அறிமுகப்படுத்தும் நோக்கில் எந்தவித வித்துவச் சிக்கலால் வாசகனை திணறடிக்கச் செய்யாது ஆற்றொழுக்கான தனது நடையால் எழுதிச் செல்கிறார். மார்க்சியம் பற்றி சொல்லிவரும் போது அல்துாசரின் சிக்கலான சிந்தனையையும் "அதிகாரத்தின் அரூபகரங்கள்" என்ற கட்டுரையில் ஃபூகோவின் சிந்தனையையும் "அர்த்தமும் அபத்தமும்", "மனிதத்துவம்" ஆகிய கட்டுரைகளில் இன்றைய இருப்புவாதப் போக்குகளையும் மிகவும் தெளிவாக விளக்கிச் செல்கிறார்.

"மனிதனைத் தேடும் மனிதன்", என்ற கட்டுரையிலிருந்து இறுதிக்கட்டுரையான "மனிதத்துவம்" வரையுள்ள கட்டுரைகள் யாவும் ஓர் ஒழுங்கமைவில் தரப்பட்டுள்ளன.

"நான் யார்? என்ற மையக் கேள்வியுடன் நான் எங்கிருந்து வந்தேன்? நான் எதற்காக இங்குவந்தேன்? என்ற கேள்விகளுடன் ஆரம்பித்த மனிதனின் தேடல் தன்னையும் தன் நிழலையும் தன்வாழ்வின் நோக்கத்தையும் அறிந்து கொள்ளும் மெய்யியல் வரலாறாகவே முடிந்துள்ளது என்பதை இந்நூலைப் வாசிப்பவர்கள் அறிந்துகொள்வார்கள். மனிதனைத் தேடும் மனிதன் என்ற கட்டுரையில் "நான் யார்?" என்று ஆரம்பித்து வைத்த சுயவிசாரணை ஃபிராய்ட்டின் நனவிலிமனம் நனவு மனம் என்பவற்றை அறிமுகப்படுத்தி ஸிட்டு கிருஷ்ணமூர்த்தியின் விழிப்புணர்வு என்று ஆழமாக விரிந்து பின்பு படிப்படியாக மார்க்சியம் காட்டும் மனிதவிடுதலை பற்றி பேசி, அதை ஒட்டியும் வெட்டியும் நிற்கும் ஃபூகோவின் அதிகாரம்பற்றியும் காமுவினதும் சாத்தரினதும் இருப்பியல் பற்றியும் கூறி முடிகிறது நூல்.

மெய்யியல்சார்ந்த கட்டுரைகள் உள்ள இந்நூலில் அன்ரன் பாலசிங்கம் தனக்கென தன்னுடைய தத்துவநோக்கென்று எதையும் முன்வைக்கவில்லை. இன்னும் சொல்வதனால் தான் விரும்பிய தத்துவம் என்று கூட அவர் எதையும் சொல்லவில்லை. அப்பிடிருந்தும் இந்நூல் அவரை வித்தியாசமான தளத்திற்கு இட்டுச் செல்கிறது. அத்தலத்தில் அவர் தனக்கென ஓர் ஸ்தானத்தை அவர் சுவீகரித்துக் கொள்கிறார். அதற்குரிய காரணம் என்ன?

மெய்யியல் சார்ந்த விஷயங்களை வாசிப்பது என்பது வேறு அதைவாசித்து விளங்கிக் கொண்டு மற்றவர்களுக்கும் விளக்குவது என்பது வேறு. பின்னதைச் செய்யவேண்டுமானால் அத்தகைய மெய்யியல் சார்ந்த கனம் இருக்கவேண்டும். அன்ரன் பாலசிங்கத்துடன் அத்தகைய மனம் தாரளமாகவே இருக்கிறது. இந்நூல் அதை நிரூபிக்கிறது.

இந்நூலில் உள்ள இன்னொரு முக்கிய அம்சம் இத்தனை சிந்தனைப் போக்குகளையும் அறிமுகப்படுத்தியுள்ள பாலா தனது விருப்பு வெறுப்பு என்றெதையும் இங்கு வைக்கவில்லை. ஆனால் அதற்காக அவர் இச் சிந்தனைப் போக்குகளுக்கு எதிராக நிலவிய எதிர்க் கருத்துக்களையும் வைக்கத்தவறவில்லை. இதற்கு உதாரணமாக பழமைக்கு "எதிரான பண்பாட்டுப் புரட்சி" என்ற தலைப்பில் சீனாவில் மாவோவின் துாண்டுதலின் பேரில் அறுபதுகளில் இடம் பெற்ற கலாசாரப்புரட்சி பற்றிய கட்டுரை இக்கட்டுரையில் "பண்பாட்டுப் புரட்சி" என்ற பேரில் சீனாவில் நடந்த பேரழிவையுங் சாங் எனப்படும் சீனப்பெண்மணி எழுதியுள்ள காட்டு அன்னங்கள், சீனாவின் மூன்று புதல்விகள் (Wild Swans, Three Daughters of China) என்ற நூல் சுய அனுபவப்பார்வையில் மிகத்தத்ரூபமாக சித்தரிக்கிறது.

ஆனால் பாலா எழுதிய அப்பெண்மணியையும், அன்று இப்பெண்மணிக்கெதிராக வைக்கப்பட்ட விமர்சனங்கள் மூலம் கேள்விக்குள்ளாக்குகிறார். அதை அவர் பின்வருமாறு சொல்கிறார்.

சீன சோசலிஸ நிர்மாணம் பற்றிய ஒரு பரந்த தெளிந்த பார்வையுடன் யுங்சாங் இந்தநூலைப் படைக்கவில்லை. அவர்தனது குடும்பத்தின் சுவர்களுக்குள் நின்று, தான் கண்டவற்றையும் கேட்டவற்றையும் எழுதுகிறார். அந்த எழுத்தில் ஒருபுறம் ஆழமான சோகமும் மறுபுறம் வக்கிரமான கோபமும் தொனிக்கிறது. துயரம் தோய்ந்த வாழ்வனுபமும் கனவுகள் உடைந்த விரக்தியும் அவருக்கு கம்யூனிசத்தின் மீது வெறுப்பை ஏற்படுத்துகிறது. அந்தக்கசப்புணர்வு சீனச் சமூகம் மீது திரும்புகிறது......... சீனாவை ஒரு நரகமாகவும் மேற்குலகை ஒரு சுவர்க்கமாகவும் அவர் வர்ணிக்கிறார். ..... பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னரே அவர் நாட்டை விட்டு ஓடி லண்டனில் தஞ்சம் புகுந்திருக்கிறார். நாடு பெயர்ந்திருக்கும் அவருக்கு லண்டன் சுவர்க்கமாகத் தெரிகிறது போலும். அவரது இன்றைய சீமை அனுபவங்கள் எமக்குத் தேவைப்படாது. ஆனால் அவரது அன்றைய சீன அனுபவங்கள் எமக்குப் பயன் தரக்கூடியவை. எனினும் மேற்குலகமே திகைக்கும் வகையில் பொருளியப் புதுமைகள் படைத்து நவீனமயமாகி வரும் இன்றைய நவசீனம் பற்றி அவர் அறியாதிருப்பது துரதிஷ்டவசமானது" என்று முடிக்கிறார்.

இவ்வாறு மெய்யியல் பற்றிய வாதப்பிரதிவாதங்களை அங்காங்கே தந்து வாசகனுக்கு வழிகாட்டிச் செல்லும் இந்நூல் தமிழ் தெரிந்து ஒவ்வொருவரும் வாசிக்க வேண்டி முக்கியமான நுாலெனலாம். ஆனால் ஒரு சிறு குறை, மேற்குலகின் அத்தனை சிந்தனை போக்குகள் பற்றியும் எழுதிச்சென்ற பாலா இருபதாம் நுாற்றாண்டின் மிகச் சிறந்த சிந்தனையாளனான (Ludwig wittgenstein) ததத்துவம் பற்றி எழுதாமல் விட்டது ஏனோ?

— மு. பொ




## பனுவல்

சமூக பண்பாட்டு விசாரணைக்கான கூட்டிணைப்பினால் 'பனுவல்' என்ற பெயரில் முதலாவது இதழ் வெளிக் கொணரப்பட்டுள்ளது. இதன் நோக்கம் பற்றி பனுவல் ஆசிரியர் குழு பின்வருமாறு கூறுகிறது.

"அறிவுசார் உற்பத்திகளையும் பண்பாட்டு புலமை உற்பத்திகள் சார் செயற்பாடுகளையும் தற்போதுள்ள விளிம்பு அடையாள நிலையிலிருந்து மிகக் குறைந்த அளவிலாவது புலமை அறிவுசார் மையத்திற்கு கொண்டு செல்வது இந்த முயற்சியின் நோக்கமாகும். சுதேசிய மொழிகளில் புலமைசார் கலந்துரையாடல்களை நடத்துவதும் பிறமொழி ஆய்வுகளை உள்ளூர் மொழிகளில் அறிமுகம் செய்வதையும் நோக்கமாகக் கொண்ட ஆய்வேடுகள் தமிழில் 'பனுவல்' என்ற பெயரிலும் சிங்களத்தில் 'பட்டிஹித' என்ற பெயரிலும் வெளிவருகின்றன.... இந்த ஆய்விதழின் இன்னொரு நோக்கம் இலங்கைக்குள் பண்பாடு தொடர்பான கலந்துரையாடலை உருவாக்குதல் ஆகும்....." என்று கூறிச் செல்லும் இந்நீண்ட முன்னுரை, இவ்விதழில் வெளிவந்துள்ள கட்டுரைகள் தொடர்பாகவும் பின்வருமாறு சிலாகித்துச் செல்கிறது. "தென்னிலங்கைக் கட்டுரைகள் வெவ்வேறு விடயம் சார்ந்து வெவ்வேறு காலங்களில் எழுதப்பட்டவை எனினும் இவற்றினிடையே ஒரு பொதுவான இழையோட்டத்தினை அவதானிக்க முடிகிறது. இவை எமது அயலவர்களின் "அயலவர்கள்" பற்றிய அனுபவங்களை விசாரணைக்குள்ளாகிறது 'மற்றவரை அறிந்து கொள்ளல் என்பதும் எம்மை மற்றவர்களின் கதையாடல்களினூடு அறிதல் என்பதும் எம்மைப் பற்றிய கட்டுமானங்களை புரிந்து கொள்ளலை அகலிக்கும் என்ற வகையில் 'அயல்' மீது சிறப்பான கவனிப்பாக இந்த இதழ் அமைகின்றது"

இந்த இதழில் சசங்க பெரேராவால் எழுதப்பட்ட அடையாளத்தின் கட்டமைப்பு முறைகள், அரசியல், நடை குழப்பம், டெஸ்மன்ட் மல்லிகாராச்சியால் எழுதப்பட்ட "வர்த்தகர்களின் கடவுளாக இருக்க கடவுள்" ஷெரன் பெல்லினால் எழுதப்பட்ட "குடும்பத்தின் பாணி, இலங்கையில் வன்முறையும் கலையும் தொடர்பான ஓர் ஆய்வு" ஒஸ்மட் போபே ஆராச்சியால் எழுதப்பட்ட "புராதன காலத்தில் இலங்கைக்கும் தமிழ்நாட்டிற்குமிடையில் நிலவிய கலாசார மற்றும் வணிக தொடர்புகள் பற்றிய புதிய சான்றுகள்" வெடினன்டீசதரால் எழுதப்பட்ட "மொழிக் குறியின் இயல்பு" ஆகிய கட்டுரைகளோடு இரண்டு நுால் திறனாய்வுகளும் இடம் பெற்றுள்ளன.

இவ்விதழைக் கையில் எடுத்துத் தட்டிப் பார்க்கும் ஒருவர் இதுமிகவும் கவனமெடுக்கப்பட்டு பெரிய முயற்சியின் மத்தியில் வெளியிடப்பட்ட போரார்வம் மிக்க (Ambitipus) ஒன்றாகும் என நினைத்தால் அது சரியே. ஆனால் இங்கு தரப்பட்டுள்ள கட்டுரைகளின் கனதி எத்தகையது? எம்மைப் பற்றிய கட்டுமானங்களை புரிந்து கொள்பவவை அதிகரிக்க உதவுகின்றனவா? "அயல் மீது சிறப்பான கவனிப்பாக அமையும்" இந்த இதழ் அதைச் செய்கிறதா?

சசங்க பெரேராவின் கட்டுரை, சிலாபம் பகுதியில் வாழ்ந்த பிரான்சிஸ் என்பவர் பற்றி ஆய்வு செய்கிறது. இவர் தென்னிந்தியாவின் மலபார் பகுதியிலிருந்து வந்து கரையோரத்தில் வாழ்ந்த "கராவ" என்று சிங்களவர்களால் அழைக்கப்பட்ட மீன் பிடித்தலைத் தொழிலாகக் கொண்ட சாதியை சேர்ந்தவர். கத்தோலிக்க மதத்தவர். இவரது தாய் மொழி தமிழ். ஆனால் சிங்களத் தேசியவாதத்தின் அதிகரிப்பால் இவரும் இவரது குடும்பத்தினரும் தமது "தமிழ்" அடையாளங்களை படிப்படியாகக் கைவிட்டு தற்போது சிங்களவராக மாறியுள்ளனர் என்பதை கட்டுரை காட்டிச் செல்கிறது. இதைப்பற்றி சசங்க பெரேரா "பிரான்சிஸ்யைப் பொறுத்தவரையில் குறிப்பாக பொது நிலையில் அடையாளத்தின் முற்றான நிலை மாற்றத்திற்கான காரணம் குடியுரிமை பற்றிய எண்ணக் கருமீதான பற்றுதியே சிங்களத் தேசிய வாதம் மற்றும் தனி ஒதுக்குவாதம் பற்றிய எண்ணக்கருவுடன் அதிகரித்துத் தொடர்புபட்ட குடியுரிமைக்கான பற்றுதியை வெளிப்படுத்த வேண்டி அமைந்த ஒன்றாகும் இந்தச் சூழல் மொழி மற்றும் ஆடை போன்ற தெளிவான தமிழ் அடையாளச் சுட்டிகளுடன் சிங்களவர் இருத்தல் என்பது பாரிய பல பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும்" என்று கூறுகிறார்.

அவர் கூறுவது உண்மை 25.30 வருடங்-

(தொடர்ச்சி பக்கம் 15இல்)

(6ம் பக்கத் தொடர்ச்சி)

# பெருந்தோட்டப் பொருளாதாரம் சில அவதானங்கள்...

என்பற்றல் கிடைத்தன. இதிலும் தேயிலை மட்டும் 60% அளித்துள்ளது. உணவும் பொருட்களின் இறக்குமதிக்காக அரசு ஒதுக்கிய அந்நியசெலாவணி 40% ஆகும்.

இவைகள் பெருந்தோட்டப் பொருளாதாரத்தின் முக்கியத்துவத்தைக் காட்டுகின்றன. இதன் அடிப்படையில் இந்தப் பொருந்தோட்டப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகிய உழைப்புச் சக்திக்குக் காரணமாக விளங்குகின்ற தோட்டத் தொழிலாளர்களும் முக்கியத்துவம் பெற்றிருக்க வேண்டும்! இவர்களின் இந்த நாட்டுக்கான வருகையும் வரலாறும் முக்கியத்துவம் பெற்றிருக்க வேண்டும் !

இவர்களின் உழைப்பும் உற்பத்தியும் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதாக இருந்தும் கூட இவர்களைப்பற்றிய அக்கறையும், வரலாற்று ரீதியான ஆய்வும் சமூகவியல் ரீதியான அணுகலும் மிகக்குறைவாகவே இருந்துள்ளன.

பெருந்தோட்டம் சம்பந்தமான அரசியல் யாப்புகள், சட்டபிரகடனங்கள், இந்நாட்டு உடன்படிக்கைகள், பாரளுமன்ற விவாதங்கள் ஆகியனவும் இவை தவிர்ந்த சமூகவியல், வரலாற்றில் அடிப்படையிலான நூல்கள், இலக்கியங்கள் என்பனவும் மிகவும் சொற்பமே.

இவைகள் ஒரு புறமிருக்க இந்நாட்டின் பெரும்பான்மை இனத்தவரான சிங்களமக்கள் மத்தியில் இவர்களை பற்றி எத்தகைய அபிப்பிராயங்கள் நிலவுகின்றன என்பதுவும் நோக்கப்படல் வேண்டும்.

ஆங்கிலேயரின் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையின் அறிமுகமே இலங்கையின் பாரம்பர்ய பொருளாதாரத்தில் தளர்ச்சியை ஏற்படுத்தி பிற நாடுகளில் தங்கியிருக்க வேண்டிய ஒரு பொருளாதார அமைப்பை உருவாக்கிக் கொடுத்தது. பெருந்தோட்டப் பயிர்செய்கைக்கு ஆங்கிலேயரால் உட்படுத்தப்பட்ட நிலங்களில் பெரும்பாலானவை ஏழைசிங்கள விவசாயிகளுடையவை. இக் காரணங்களினால் ஒரு பாமர - ஏழைச் சிங்கள மனிதன் இத் தோட்ட மக்கள் பற்றிய அபிப்பிராயம் எப்படி இருக்கும். "ஒரு அந்நிய தேசத்தில் இருந்து வந்த வெள்ளைக்காரர்கள் இன்னொரு அந்நியதேசத்தில் இருந்து வந்த இந்தியத் தமிழர்களுக்கு எங்களுடைய நிலங்களைப் பறித்துக் கொடுத்து விட்டார்கள். நாங்கள் அனுபவிக்க வேண்டியதை வேறெருவன் அனுபவிக்கின்றன்" என்ற ஒரு குரோத உணர்வுடன் கூடியதாகவே இருந்தது.

ஆங்கிலேயரின் நடவடிக்கைகளால் தன்னுடைய உழைப்பில் தனக்கே உரிமை இல்லாது பிழியப்படும் தோட்டத் தொழிலாளியின் பங்கு என்ன என்பது அவனுடைய அறிவிற்குப் புலப்படாத ஒன்று. இந்நிலையில் அவனது எதிர்ப்புணர்வு இத்தொழிலாளர் மீதே படிந்தது. இன்றும் கூட சிங்கள மக்கள் மத்தியில், குறிப்பாக கிராமப்புற விவசாயிகள் மத்தியில் தோட்டத் தொழிலாளர்களை ஒரு சகஜ மனப்பான்மையுடன் ஏற்றுக் கொள்ளுதல் மிகக் குறைவாகவே இருப்பதைக் காணலாம். புத்திஜீவிகளும் வரலாற்று ஆசிரியர்களும் கூட இத்தகைய மனோபாவத்திற்கு சான்றுகள் பகிர்தல் வளர்த் தெடுத்தல் ஆகியவற்றிற்கு சீரிய பங்காற்றியுள்ளனர்.

சிங்கள வரலாற்றுக் குறிப்புகளிலும் இலக்கிய ஏடுகளிலும் தென்னிந்தியர் பற்றிய மாறான அபிப் பிராயங்களே சிங்கள மக்கள் மத்தியில் பரவலாக எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. சரித்திர ஆசிரியரான திரு. எஸ்.வி. கொடிக்கார "தென்னிந்தியர்கள் சிங்களவர்களுக்கு ஒரு பாரம்பரிய எதிரிகள்" என வர்ணிக்கின்றர்.

இலங்கையின் பாரம்பரியப் பொருளாதாரத்தை சீர்குலைத்து ஒரு முதலாளித்துவ பொருளாதாரத்தை அறிமுகப்படுத்தி இந்த நாட்டைச் சுரண்ட வந்த ஒரு அந்நிய இனத்தவரான ஆங்கிலேயர்களின் நடவடிக்கைகளுக்கு துணைபோக வந்தவர்கள் என்னும் கோபம் பெரும்பான்மை இன அரசியல்வாதிகளுக்கு இந்த மக்கள் மேல் இருந்து கொண்டே இருக்கிறது.

தேசிய பொருளாதார நடவடிக்கைகள் கொலனித்துவ அமைப்பில் இருந்து தம்மை விடுவித்துக் கொள்ள முயல்வதையே நாம் கூடுதலாகக் காண்கின்றேம். ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட பெருந்தோட்டப் பொருளாதாரத்தைப் பின் தள்ளி அந்த இடத்தை தன்னிறைவு விவசாயப் பொருளாதாரத்தால் நிரப்பும் முயற்சிகள் மேற் கொள்ளப்படுகின்றன. நிலச்சீர்திருத்தச் சட்டம் மூலம் தேயிலைத் தோட்டங்கள் சுவீகரிக்கப்பட்டுள்ளமை இவ்வாறன நடவடிக்கைகளுக்கான சான்றுகளே. சுவீகரிக்கப்பட்ட தோட்டங்களில் சில தொடர்ந்தும் பெருந்தோட்டப் பயிர் செய்கைக்கே உட்படுத்தப் பட்டிருந்தாலும் எதிர்கால நிலைமைகள் எப்படி மாறும் என்று கூறமுடியாதுள்ளது.

பெருந்தோட்டப் பொருளாதாரத்தின் முக்கியத்துவத்தைக் குலைப்பதன் மூலம் இந்த மக்களைப் பழிவாங்கும் செயற்பாடுகள் கண்டும் காணாமலும் நிறைவேற்றப் பட்டக் கொண்டே இருக்கின்றன.

தோட்டங்களைச் சுவீகரித்து சுற்றியுள்ள சிங்களக்கிராமத்து மக்களுக்குப் பகிர்ந்தளித்துள்ளமையும், இவர்களுடைய நிலங்களை இவர்களுக்கே கையளிக்கின்றேம் என்னும் வீரவசனங்களும். இருக்க இடமும், செய்யத் தொழிலும் அற்று இம்மக்களை அலைய விட்ட பரிதாபங்களும் இந்தப் பழிவாங்கும் செயலுக்கான சான்றுகள்.

நாடெங்கும் உருவாக்கப்பட்ட நெசவுத் தொழிற்சாலைகளும் ஆடை ஏற்றுமதியும் அவைகளின் வளர்ச்சிக்கும் எழுச்சிக்குமான அரசாங்கத்தின் ஆதரவும் பெருந்தோட்டப் பொருளாதாரத்தைக் கேள்விக்குறிக்குள்ளாக்குவதுடன் ஏனைய பொருளாதார மூலாதரங்களையும் வாய்ப்புக்களையுமே கூடுதலாக நாடுகின்ற, வரவேற்கின்ற ஒரு அரசியல் மனோபாவம் உருவாகியுள்ளமையை உணர்த்தி நிற்கின்றது.

தேசியப் பொருளாதார நடவடிக்கைகள் பெருந்தோட்டப் பொருளாதாரத்தைப் பாதிக்கும் அதேவேளை சர்வதேச சந்தை நிலைமைகளும் தோட்டங்களின் வருமானத்தை நிர்ணயிக்கும் சக்திகளாக இருந்துள்ளன.

வெள்ளைக்காரர்கள் இப் பெருந்தோட்ட பயிர்ச்செய்கையை பராமரித்தலுக்கும் தோட்டங்களை நிர்வாகம் செய்வதற்கும் பிந்திவந்த சுதேச துரைமார்களின் பராமரிப்பு-நிர்வாகத்திற்கும் இடையே பாரிய வேறுபாடுகளை காணலாம். இவ்வேறுபாடுகளின் காரணமாக உற்பத்தியில் வீழ்ச்சி, சர்வதேச சந்தையில் இலங்கைத் தேயிலையின் விலைகளில் வீழ்ச்சி ஆகியவை தவிர்க்க முடியாதனவாகின்றன.

இவைகளின் மூலமாகவும் பெருந்தோட்டப்பயிர்ச் செய்கையின் முக்கியத்துவம் கேள்விக்குறியாக்கக்பட்டு சீர்குலைக்கப்பட்டு வருகின்றது.

பிரஜாஉரிமை வழங்கக்கூடாது. என்பதற்காகவே பிரஜாஉரிமைச் சட்டம் கொண்டு வரப்பட்டு விசாரணைகள் நடத்தப்பட்டதைப் போல் தான் இந்தப் பெருந்தோட்ட நிர்வகமும் நடத்தப்படுகின்றதோ என்னும் நினைவைத் தவிர்த்துக் கொள்ளமுடியவில்லை.

தோட்டங்கள் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டிருந்தாலும் அது நிர்வாத்திற்கு மட்டுமே சொந்தமானது. அதில் வசிக்கும் உரிமை, உழைப்பு வருமானம், அனுபவிக்கும் பாத்தியத்தை அனைத்தும் நிர்வாகத்துடன் கொண்டுள்ள தொழில் உறவு முறைகளாலேயே நிர்ணயிக்கப்படுகின்றன. தொழிற்சங்கங்களுடனான தொடர்பும் ஈடுபாடும் தோட்டப் பொருளாதாரத்தில் அவனுக்கிருக்கும் இடத்தையும் அதன் மூலம் அவன் பெறும் வருமானத்தையும் பொருத்தே அமைகிறது.

கணவன், மனைவி. பிள்ளைகள் என்று குடும்ப சகிதமாகவே இப் பொருளாதாரத்தின் கீழ் தங்களை நிலைநிறுத்திக் கொண்ட இவர்களின் வாழ்க்கையின் இப் பொருளாதாரம் ஏற்படுத்தும் பாதிப்புக்கள் நீக்கப்படல் வேண்டும்.

இங்கு வந்து ஒன்றரை நூற்றாண்டுகளுக்கு மேலாகியும் கூட இப்பொருளாதாரத்தின் செயற்பாடுகள் இவர்களது சமூக வாழ்க்கையை நிர்ணயிக்கும் சக்தியாக நிலைகொண்டுள்ளமை துர்பாக்கியமானதே.

(5ம் பக்கத் தொடர்ச்சி)

# பொருளாதார அபிவிருத்திக்கு விவசாய மேம்பாட்டின் முக்கியத்துவம்

டப்படும் இடத்திற்கருகாமையில் அப்பொருட்களிற்கு சந்தை வாய்ப்பு காணப்படாமையினால் அவற்றினை உரிய முறையில் பயிரிடுவதில்லை. அவ்வாறு பயிரிட்டாலும் அதற்குரிய பயனைப் பெறுவதில்லை. இவ்வாறு பயிரிடப்படும் இடத்திற்கருகாமையில் அப்பொருளிற்கான கேள்வி காணப்படாத நிலையில் அப்பொருட்களை சேகரித்து உரிய முறையில் பொதியிட்டு தேவையேற்படின் பதனிட்டு சந்தை வாய்ப்பு உள்ள இடத்திற்கு அதனை எடுத்துச் செல்ல வேண்டிய முறைமையொன்று அவசியமாகும். அவ்வாறான சேகரிப்பு முறையொன்று அவசியமாகும். அவ்வாறான சேகரிப்பு முறையொன்று குறிப்பாக சிறு விவசாயிகளின் அறுவடைகளை சேகரிக்கும் முறையொன்று சரியான முறையில் அபிவிருத்தி செய்யப்படவில்லை.

உதாரணமாக நாட்டின் வடக்கு கிழக்கு பகுதியில் பலர் மாடு வள்ர்க்கிறார்கள். அந்த மாட்டில் இருந்து உரிய பொருளாதார பயன்களை அவர்கள் ஈட்டுகின்றனரா அதாவது தமது தேவைக்கு மாட்டையும் பாலையும் சாணத்தையும் பயன்படுத்துவதுடன் நின்று விடாமல் அதனை ஒரு வருமானம் ஈட்டும் மார்க்கமாக இந்த மக்கள் பயன்படுத்துகின்றார்கள் என்றால் இல்லை என்றுதான் கூற வேண்டும். இங்கு யாழ் நகரம் போன்ற நகர்பகுதிகளில் பால் கொள்வனவு நிலையம் காணப்பட்ட போதும் பல விவசாயிகளைப் பொறுத்த வரை தம்மிடம் மேலதிகமாக இருக்கும் ஒரு சில போத்தல் பாலினை அவ்வளவு துாரத்திற்கு கொண்டு சென்று கொடுப்பது பயன அளிக்காத நிலை காணப்படுகிறது.

மாறாக கிராமங்கள் தோறும் பால் சேகரிப்பு முறைமை உதாரணமாக பால் சேகரிப்பு வாகனத்தில் வந்து கிராமங்கள் தோறும் வழமையான பால் சேகரிப்பு முறைமையொன்று அறிமுகப்படுத்தப் பட்டால் பல மக்கள் மாடு வளர்பின் மூலம் ஒரு வருமானத்தை ஈட்டக்கூடியதாக இருக்கும் என்பதுடன் நிட்சயமாக சந்தையொன்று தமது வெளியீட்டிற்கு காணப்படும் போது அதன் உற்பத்தியையும் உரிய முறையில் மேற்கொண்டு அதிகரிக்க முற்படுவர். இதன் மூலம் குறிப்பிடத்தக்களவு மக்கள் குறிப்பாக பொருளாதார நிலையில் பின்தங்கியிருப்போருக்கு வருமானமீட்டித்தரும் வழிமுறையாக இது அமையும்.

விவசாய அபிவிருத்தி தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய இன்னொரு முக்கிய விடயம் விவசாய பொருட்களை உள்ளிடாக கொண்ட கைத்தொழில் முயற்சிகளை ஆரம்பித்தலாகும். இவ்வாறு கைத்தொழில் முயற்ச்சி விருத்தி செய்யப்படும் போது அது விவசாய விளை பொருட்களுக்கு அவற்றின் நேரடி நுகர்விற்கு மேலதிகமாக இக்கைத் தொழில்களிற்கும் வழங்கக்கூடியதாக இருக்கும். இதனால் விவசாயிகள் தமது விளைபெருட்களுக்கு அதிகரித்த நிட்சயமான சந்தையொன்றையும் உரிய விலையினையும் பெறக்கூடியதாக இருப்பர். அத்துடன் கைத்தொழில் அதிகரிப்பாக புதிய வேலைவாய்ப்புகள் வருமானங்கள் என்பனவும உருவாக்கப்படுவதாக இருக்கும் என்பதுடன் அவ்வருமானமானது தனியே ஒரு சிலரிற்கு சென்றடைவதாக இன்றி சமுகத்தின் பல்வேறு மட்டங்களிற்கும் குறிப்பாக பொருளாதார நிலையில் பின்தங்கி இருப்போரையும் சென்றடைவதாக இருக்கும்.

உதாரணமாக மேலே சொன்ன உதாரணத்தில் பாலினை சேகரித்து அதில் இருந்து கொழுப்பை வேறுபடுத்தும் கைத்தொழிலை உருவாக்கினால் அவ்வாறு பிரித்தெடுக்கும் கொழுப்பினை பயன்படுத்தி யோகட், பட்டர், வெண்ணெய் போன்ற பல உற்பத்தி பொருட்கள் உற்பத்தி செய்யப்படுவதுடன் பாலும் பச்சையாகவே குறைந்த கொழுப்புடன் பொதுமக்களிற்கு பக்கட்டுகளில் அடைக்கப்பட்டோ அல்லது வேறு விதமாகவோ விற்கப்படலாம். இவ்வானதோடு கைத்தொழில் ஒன்றை ஆரம்பிப்பதற்கு பாரிய முதல் தேவைப்படாது என்பதுடன் சில சந்தர்ப்பங்களில் தொழில் ஆரம்பத்தில் அது மிகுந்த இலாபம் உழைத்து தரக் கூடிய தொழிலாக அமையாவிட்டாலும் கூட அதனுாடே அமையப்படும் சமூக நன்மையும் (Social benifits) கருத்தில் கொள்ளப்பட்டு சமூக மேம்பாட்டு திட்டமாக அது நடைமுறைப்படுத்தலாம்.

இது போன்ற விவசாய பொருட்களை உள்ளீடுகளாக பயன்படுத்தும் பழரச உற்பத்தி, வைன் உற்பத்தி, சாராய உற்பத்தி, கான்களில் அடைக்கப்பட்ட பழ மற்றும் மரக்கறி உற்பத்தி எண்ணெய் உற்பத்தி, சவர்க்கார உற்பத்தி, பதனிடப்பட்ட மாவம் கான்களில் அடைக்கப்பட்ட மீன் மற்றும் இறைச்சி உற்பத்தி போன்ற பல நுாற்றுக்கணக்கான கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்பட முடியும்.

இவ்வாறு விவசாய மேம்பாட்டு தொடர்பில் கருத்தில் கொள்ள வேண்டிய காரணிக்ள அடையாளம் காணப்பட்டு உரிய நடவடிக்கைகளின் மூலம் விவசாய மேம்பாடு அடையப்படும் போது அதனுாடே சிறந்த பொருளாதார அபிவிருத்தியின் நன்மைகள் சமூகத்தின் ஒரு சில சாராரினை மட்டுமன்றி பெரும்பகுதியினரை குறிப்பாக சமூகத்தின் அடிமட்டத்தில் உள்ளவர்களையும் சென்றடைய வழிவகுக்கும். இதனுாடே நிலைத்திருக்கும் பொருளாதார மேம்பாட்டினை அடையலாம்.



# தமிழ்சினிமா பொருட்படுத்தத்தக்கது தானா...?

தமிழ்ச் சூழலில் இப்படியொரு பார்வை உண்டு. தமிழ்ச்சினிமா பொருட்படுத்திப் பேச வேண்டிய ஒன்றல்ல? என்னைப் பொருத்தவரை சில பார்வை மிக மோசமானது. நான் தமிழ்ச்சினிமாவைப் பற்றி அப்படிக் கருதுபவன் அல்ல.

தமிழ்ச்சினிமா தமிழர்களின் வாழ்வை ஊடும் பாவுமாக நுழைந்து பாதிக்கிறது. அவை உருவாக்கும் கருத்துக்கள் வலிமையானவை. நமது ஆன்ம வெளியையும் நடப்பு வாழ்க்கையையும் பாதிக்கிறத. அதனால் அதனைக்குறித்து எல்லாவகையிலும் பேசயாகவேண்டும் என்று கருதுகிறேன்? இவ்வாறு ஒரு முறை எனது நண்பர் அ.ராம்சாமி குறிப்பிட்டது எனது ஞாபகத்துக்கு வருகிறது. அந்தக் கருத்தில் எனக்கு முழுமுழு உடன்பாடு.

தமிழ்ச்சினிமா பற்றிப் பேசாமல் ஒதுக்கி வைத்து விடுவது ஒருவிதத்தில் துாய இலக்கிய வாதிகளின் மனநிலை தான். தமிழ்ச்சூழலில் தீவிர கலை இலக்கியவாதிகள் எனக் கூறிக் கொள்பவர்கள் தமிழ்ச்சினிமா பற்றப்பேசுவதை தரக்குறைவாகக் கருதகிறார்கள். வேண்டுமானால் கலைப்படங்கள் என்ற முன்னுரையுடன் வரும் படங்களைப் பேசுவார்க் எழுதுவார்கள். இந்த கட்டுமனப்பான்மை சமூக விரோதமானது. நான் ஒன்றும் சுயம்புவான துாய கலை இலக்கியவாதி அல்ல.

எனக்குத் தெரிந்த சில ஆய்வாளர்கள் தமிழ்ச்சினிமா மீது கரிசனை கொள்வதில்லை படங்கள்கூட பார்ப்பதில்லை. படைப்பிலக்கியத் துறையில் நூல்கலைத் துறைகளில் ஏற்பட்டு வரும் வளர்ச்சிகளை புதிய முயற்சிககளை தெரிந்து கொள்வதில் காட்டும் அக்கறையை தமிழ்ச்சினிமா மீது காட்டுவதில்லை . ஆனால் அவை குறித்து விரிவான கட்டுரைகள் எழுதுவார்கள். இவர்களால் எப்படி எழுதமுடிகிறது என்பது அவர்களுக்கே வெளிச்சம்.

இவ்வாறு சிந்தனை செய்யும் அதே நேரம் இன்மொரு சிந்தனை புரிதல் சார்ந்த சில கருத்துக்களையும் இங்கு பதிவு செய்ய விரும்புகிறேன். தமிழ் சூழலைப் பொறுத்த வரை சினிமா பற்றிய புரிதல், சினிமா மொழி பற்றிய பிரச்சனை இன்னும் ஆழ அகலப்படுத்தப் படாமலேயே உள்ளன. சினிமா ஓர் காட்சி ஊடகம் என்றும் புரிதல் பார்வையாளர்களிடம் கற்றும் கொடுக்கப் படாமலேயே உள்ளது. அதாவது சினிமா மொழி உயிர்ப்பானது, அது தொடர்ந்து வளர்ந்தது வர வேண்டும். ஆனால் இந்த வளர்ச்சி தமிழ்ச்சினிமாவில் சாத்தியப்படவில்லை. இது ஏன் என்ற கேள்வி விரிவாக ஆராயப்பட வேண்டிய ஒன்றாகும்.

தமிழ் சமூக வாழ்வியலில் சினிமா முக்கியமான இடத்தினை வகிக்கின்றது. பண்பாட்டு அசைவிலக்கதத்திலும் கருத்து நிலை உருவாக்கத்திலும் சினிமாவின் பங்கு அளப்பெரியது. மேலும் வெகுகால அரசியல் பிரச்சார செயற்பாட்டிலும், அதிகார அரசியலிலும் கூட சினிமா வழி வந்தவர்களின் செல்வாக்கு அதிகமாகவே உள்ளது. ஆனாலும் தமிழர் வாழ்வில் சினிமா ஓர் சமூகமாற்றுச் செயற்பாடாக, கலை ஊடகமாக அதன் வீரியத்துடன் இன்றும் மேல்விளம்பவில்லை. தமிழ்நாட்டுச் சூழலில் இந்தக் கேள்வி உரத்த சிந்தனையையாகவே நிட்சிபெறுகிறது.

சிந்தனைச் சூழலில் தான் சர்வதேச சினிமா வரலாற்றின் பாய்ச்சல் நிகழ்த்திய வரலாறு சினிமா பற்றிய புரிதல், கற்றல் முக்கியமாக்கப்படுகிறது. தமிழ்ப்பார்வையாளர்களுக்கும் தமிழ்ச சிந்தனையாளர்களுக்கும் ஆரோக்கியமான திசைப் போக்கிகளை திறந்துவிட வேண்டி உள்ளது. இந்தப் பார்வை தான் நமக்கான செழுமையான ஆரோக்கியமான சினிமா மொழியைக் கற்றுத்தரும்.

இந்த அடிப்படைத் தெளிவு இருக்குமானால் தமிழ்ச்சினிமா பற்றிய எமது பார்வை மாறுபடும். அப்போது தான் தமிழ்ச்சினிமாவில் இன்றைய புதிய தளங்கள், புதிய பார்வை என்ன என்பது புரிய வரும். எம்.ஜி.ஆர்,சிவாஜி, ரஜனி, கமல், அஜித், விஜய், தனுஷ், சிம்பு.... என தொடரும் ஆண்மைப் பாத்திரங்கள் பத்மினி, சாவித்திரி, சரோஜாதேவி, தேவிகா, லதா, மஞ்சுளா, ஸ்ரீதேவி, ஸ்ரீப்பிரியா, குஷ்பு, கௌதமி, சிம்பிரன், ஜோதிகா, த்ரிஷா, சோனியா அகர்வால்... எனத் தொடரும் பெண் பாத்திர சித்தரிப்பு காட்சியாக்கப்படல் போன்றவற்றையெல்லாம் நாம் வெவ்வேறு நிலைகளில் கோணங்களில் புரிந்து கொள்ள வேண்டியுள்ளது.அதாவது பார்வையாளர்களின சமூகப்பிம்பமும் வாழ்க்கை மதிப்பிடுகளிலும் ஏற்பட்டுள்ள மாற்றங்களை வைத்துப் புதிந்து கொள்ளலாம். அதாவது தமிழ்சினிமாவின் கதாநாயக கதாநாயகி மாற்றங்களை காட்சிப்படுத்தும் சொல்லப்படும் முறைகளை இளசலயிப்பில் ஏற்பட்டுள்ள உயிர்திறன்களை, பாடல் வரிகள எற்பட்டுள்ள சொல்லாட்சி மொழிகலை பல்வேறு நிலைகளில் கோணங்களில் புரிந்து கொள்ளக் கூடிய சாத்தியங்கள் உண்டு.

தமிழ்ச்சினிமா தமிழர் வாழ்வியலில் ஏற்பட்டுள்ள மாற்றங்களினூடு, உணர்திறன் தளமாற்றப் பெயர்வினூடு மாற்றம் கண்டு மாறிக் கொண்டு வருகிறது. ஆனால் இது ஒரே நேர் செங்குத்துப் பாதையில் அல்ல.

— யாழினியன் —

(13ம் பக்கத் தொடர்ச்சி)

## பனுவல்

களுக்கு முன் தமிழனாக வாழ்ந்து தற்போது சிங்களவனாக மாறிவிட்ட சிலாபத்தைச் சேர்ந்த பிரான்சிஸ் பற்றியது இது. ஆனால் இன்றும் கொஞ்சக்காலத்தில் திருகோணமலையில் அல்லது வவுனியாவில் இப்படி வாழும் கந்தசாமி பற்றி அல்லது கணபதிப்பிள்ளை பற்றி இத்தகைய ஆய்வொன்றை சசங்க பெரோரா போன்றவர்கள் மேற்கொண்டு எம் முன் வைக்கத் தயங்கமாட்டார்கள் என்பது இன்னும் யதார்த்தமானது. எமக்கு தற்போது தேவைப்படுவது இத்தகைய விஞ்ஞானரீதியான ஆய்வுகளல்ல. இவ்வாறு சிங்களத்தேசியவாத எழுச்சிகளால் தமது மொழி நிலம், பண்பாடு போன்றவற்றை சிறுபான்மை மக்கள் இழக்காதிருப்பதற்கான ஆய்வு வகைகளோ இதைச் சசங்கபெரேரா செய்வாரா? மாட்டார் காரணம் இவர் முன்னர் எழுதிய "சித்திரவதையாளர்களுடன் வாழுதல்" (Living with Torturers) என்ற நூலில் விடுதலைப் புலிகளுக்கெதிராக எழுதிய பொழுது அதற்கான ஆலோகனைகளை ராஜன் ஹூல், சிறிகரன் போன்ற தமிழ்த் தேசியத்திற்கெதிரானவர்களே வழங்கியிருந்தனர்.

இவ்விதழில் இடம் பெறும் அடுத்த கட்டுரை டெஸ்மன்டர் மல்லிகராச்சியினால் எழுதப்பட்ட வர்த்தகர்களின் கடவுளான முருகக் கடவுள் பற்றியது.

சிங்கள பௌத்தர்கள் இந்துசமயக் கடவுளர் பொறுத்தவரை இந்துக்களின் கடவுளர்கள் தேவதைகளே (தெய்வங்களல்ல) இந்தவரையறைகளுடனேயே அவர்கள் முருகனை வியாபார நோக்கிற்காக வணங்குவதும் அந்த வணக்கதயில் தமது உடலசைவுகளை முன்னிறுத்தி சமயத்தை புகுத்துவதும் என்று வியாபாரம் தொழுகை என்று இருவகைச் சடங்கு முறைப்பட்ட போக்கு இங்கு சுவையாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது

அடுத்த கட்டுரையான போபே ஆராச்சியின் "புராதான காலத்தில் இலங்கைக்கும் தமிழ் நாட்டிற்குமிடையில் நிலவிய கலாசார மற்றும் வணிகத் தொடர்புகள் பற்றிய புதிய சான்றுகள்" பெரியளவில் தாம் விபரிக்கும் புதிய சான்று கலாசாரம் கொண்டு வித்தியாசமான வியாக்கியானம் எதுவும் தருவதாயில்லை. இதை வாசித்தபோது லயன்ஸ் சரத்தினால் எழுத்தப்பட்ட "புரதான இலங்கையின் தமிழ் சிங்கள உறவுகள்" என்ற சிறுநுால் நினைவுக்கு வந்தது. அது இன்றைய பேரினவாதிகள் மகவம்ச மாறா தேரரை அடியொற்றி வரும் கட்டியெழுப்பியுள்ள தமிழன் சிங்களவர்களுகிடையேயான பகமையை தகர்த்தெறிகிறது, வரலாற்று ஆதாரங்களுடன்.

ஷெரன் பெல்லிக் "இலங்கையில் வன்முறையும் கலையும் தொடர்பான ஓர் ஆய்வு" என்ற கட்டுரை இப்பனுவலில் வெளியிடப்பட்டுள்ளவற்றில் ஒப்பீட்டளவில் நன்றாக வந்துள்ளதெனலாம். ஆயினும் இதில் தென்னிலங்கையில் இடம் பெற்ற வன்முறைகளை பற்றியே கூறப்பட்டுள்ளது. மாறாக தமிழ் மக்களுக்கு நடந்த பேரழிவுகள், இராணுவத்தினால் கொன்றொழிக்கப்பட்ட தமிழர்கள், யாழ்ப்பாணம் கைப்பற்றப்பட்டபின் காணாமல் போன ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகள் பற்றிய பேச்சில்லை. இதற்கான காரணம் என்ன? காரணம் இவருக்கு ஆலோசனை தந்தவர்களும், ஆதாரச் சான்றாளர்களும் சிங்களவராய் இருப்பதே. ஆனால் வேக்கை என்னவென்றால் நீலன் திருச்செல்வன் கொலைபற்றிய பிரஸ்தாபம் இதில் தொடர்ந்து வந்து கொண்டிருப்பதுதான்.

மொத்தத்தில் இதில் வெளியிடப்பட்டுள்ள விஷயங்கள் இன்றைய தமிழ்மக்களின் தேவையை அவர்கள் பேரினவாத பிசாசுக்குள் சிக்குண்டு தமது பாரம்பரிய கலை பண்பாடு மொழிநிலம் ஆகியவற்றை இழந்து கொண்டிருக்கும் நிலையில் நிமிர்ந்தெழவைக்கும் தேவையை உணர்ந்து வெளியிடப்பட்டனவாகத் தெரியவில்லை. இவ்வாறே இது தொடர்ந்து வெளி வருமாயின் "பல்கலைக்கழக மனித உரிமைக் குழுவினர்" என்ற பேரில் அவ்வப்போது பேரினவாதிகளுக்கு ஆதரவாக வெளியிடப்படும் "ஜனநாயக" அறிக்கைகளாக மாறலாம். அதுபற்றி ஆசிரியர் குழுகவனம் செலுத்தவேண்டும்.

இதில் முருகையன், வெடினன் டி சசூரின் கட்டுரையை (மொழிக்குறியின் இயல்பு) மிக அற்புதமாக மொழி பெயர்த்துள்ளார். இது அவரின் இருமொழிப் புலமைக்கு ஒரு எடுத்துக்காட்டெனலாம் சசங்க பெரேராவின் கட்டுரையின் தமிழாக்கம் சில இடங்களில் தெளிவில்லாமல் தெரிகிறது என்பது இங்கு காட்டப்பட வேண்டிய ஒன்று.

இலங்கை தமிழரின் தேசவழமைகளும் சமூக வழமைகளும் என்ற பேராசிரியர் சி. பத்மநாதனின் நுாலை கே.ரி. கணேசலிங்கமும், கலாநிதி பரமு புஷபரட்ணத்தின் நுாலை பாக்கியநாதன் அகிலனும் மிக ஆழமாகச் சென்று விமர்சித்துள்ளனர். பத்மநானின் நுால் பற்றிக் கூறுகையில் "இலங்கையின் வரலாற்றையோ அல்லது தமிழர்களது வரலாற்றையோ ஐரோப்பியரது காலனித்துவ மனோபாவத்திற் கூடாக ஆராய முயல்வது பிழையான கற்பிதாங்களை ஏற்படுத்திவிடும் என்று கணேசலிங்கன் கூறுவது மிகவும் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. இத்தகைய நுால் திறனாய்வுகளை "பனுவல்" மேலும் தருமென நாம் எதிர்ப்பாக்கலாமா?


— மு. பொ

தி. செல்வமனோ

# பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும்

**இலங்கையில் சித்திரவதையை ஒழிக்க வேண்டுமானால் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அரசு உடனடியாக நீக்க வேண்டும் என்று பிரான்சைத் தளமாகக் கொண்டு இயங்கும் தமிழர் மனித உரிமைகள் அமையம் தெரிவித்துள்ளது.**

**இந்த அமைப்பு சமீபத்தில் விடுத்துள்ள அறிக்கையின் மேலும் தெரிவித்திருப்பதாவது.**



சித்திரவதை என்பது பரவலாக உலகம் பூராகவும் பலவிதப்பட்ட முறைகளில் நடைபெறுகின்றது. பெரும்பாலாக சுயநிர்ணய போராட்டம் ஆயுதப் போராட்டம் நடைபெறும் நாடுகளில் போராடுபவர்களின் அரசியல் சிந்தனைகள், குறிக்கோள்கள், முயற்சிகளை முறியடிக்கும் எண்ணத்துடன் சித்திரவதைகள் செய்யப்படுகின்றன.

ஸ்ரீலங்காவில் 1979ஆம் ஆண்டு யூலை 20ஆம் திகதியிலிருந்து நடைமுறையில் உள்ள "பயங்கரவாதச் சட்டத்தி"ன் கீழ் கைது செய்யப்பட்டோர் சித்திவதைக்கு ஆளாக்கப்படவும், சித்திரவதை மூலம் பெறப்பட்ட வாக்குமூலங்கள் கைது செய்யப்பட்டோருக்கு எதிராக நீதி மன்றங்களில் முன்வைக்கவும் சித்திரவதை செய்யும் அரச படைகள் தண்டனையிலிருந்து தப்பிக் கொள்ளவும் வழிவகுக்கின்றன.

இலங்கைத் தீவில் தமிழர்களின் தாயகப் பிரதேசமான வடக்கு கிழக்கில் கடந்த இருபது வருடங்களுக்கும் மேலாக நடைபெற்ற ஆயுதப் போராட்டத்தை காரணம் கூறி ஸ்ரீலங்கா அரச படைகள் தமிழ் மக்களை கைது செய்து பலதரப்பட்ட தடுப்பு முகாம்களில் மிகக் கொடுரமான சித்திரவதைக்கு ஆளாக்குவதும் அவர்களுக்குப் புரியாத சிங்கள மொழியில் அவர்களின் வாக்கு மூலத்தை பெறுவதையும் பல அரச சார்பற்ற நிறுவனங்கள் கண்டித்துள்ளன.

இவ்வாறு மனித உரிமைகள் மையத்தில் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள சமாதான பேச்சுவார்த்தைகள் சித்திரவதையை எவ்விதத்திலும் தடுத்து நிறுத்தவில்லை. சிறைச்சாலைக் கம்பிகளின் பின்னால் உள்ள தமிழ்இளைஞர்களின் இருண்ட வாழ்வுக்கு இன்னும் வெளிச்சம் கிடைக்கவில்லை. விடுதலை கிடைக்கவில்லை.

சித்திரவதைகளினால் தொடரும் மனவுளைச்சல் பலரை நிரந்த வதைக்கு ஆட்படுத்தியுள்ளது. 'சமாதானம்' இந்த இளைஞர்களின் வாழ்க்கைத் துயரைப் போக்கவில்லை. பயங்கரவாத தடைச்சட்டம் இன்னும் வாபஸ் பெறப்படவில்லை ஏன்...?

## ஏமாற்றம்.. ஏமாற்றம்... இதுதான் விதியே...

இலங்கையில் யுத்தநிறுத்தம் மேற்கொள்ளப்படுகிறது. சமாதானப் பேச்சுகள் மகிழ்ச்சியுடன் ஆரம்பமானது. ஆனால் அந்த வேகம் இடை நிலையில் தடுக்கப்பட்டது. இன்று சமாதானப் பேச்சுகள் முடக்க நிலையை அடைந்து 15 மாதங்கள் ஆகிவிட்டன. இந்தக் காலத்தின் பெரும் பகுநிலை ஐக்கிய தேசிய முன்னணி அரசு விழுங்கிவிட்டது. தற்போது பதவியேற்றுள்ள ஐக்கிய சுதந்திர முன்னணியும் இந்த தேக்க நிலையை உடைத்து சமாதானத்தை முன்னெடுப்பதற்கு எவ்வித ஆக்கபூர்வமான பணிகளையும் செய்வதாகத் தெரியவில்லை.

கிழக்கை ஒரு குழப்பமாக வைத்திருக்க ஸ்ரீலங்கா அரச படைத்தரப்பு திட்டமிட்டு வியூகம் அமைந்து வருகிறது. குறிப்பாக மட்டக்களப்பில் புலிகள் இயக்கத்துக்குள் ஏற்பட்ட முரண்பாடு பிளவு கருணா விவகாரத்தை அரச படையினர் தமக்கு சாதகமாகப் பயன்படுத்த விளைகின்றனர். மக்கள் மத்தியில் ஒருவித குழப்பத்தை, பதட்டத்தை ஏற்படுத்தி மக்கள் கவனத்தை திசை திருப்பிவிட முயற்சிக்கிறார்கள்.

வடக்கு கிழக்கு இணைப்பு என்ற அரசியல் முழக்கத்தை பலவீனப்படுத்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன காலம் முதல் மேற் கொண்டுவரும் நடவடிக்கைகளில் இன்னொரு கட்டமாகவே கருணா விவகாரம் பயன்படுத்தப்படுகிறது. மட்டக்களப்பு தொடர்பாக திட்டமிட்ட செய்திகள் பலவாறு பரப்புகை செய்யப்படுகின்றது. இதற்கு அரச ஊடகங்களும் உதவி வருகின்றன. சமாதான முயற்சியில் அரசு முழு ஈடுபாட்டுடன் இல்லை என்ற சந்தேகம் கவலை மக்களைப் பீடித்துள்ளது. இந்தப் போக்கு மக்களையும் நாட்டையும் எங்கே கொண்டு போகும் என்ற பலமான கேள்விகள் மட்டும் அண்மித்துக் கொண்டிருக்கின்றன.

## சுற்றிச் சுற்றி அதே முரண்நிலை...

ஒருபுறம் தமிழ்த் தேசியத்தைப் பலவீனப்படுத்திக் கொண்டு மறுபுறம் சர்வதேசத்திடம் உதவிகளைப் பெற்றுத் தன்னைப் பலப்படுத்திக் கொண்டு மீண்டும் யுத்தத்தை ஆரம்பிப்பதற்கு அரசு தயாராகியுள்ளது. யுத்தம் வரட்டும். எத்தகைய சூழ்நிலையையும் எதிர்கொள்ள நாங்கள் தயாராகவே இருக்கின்றோம்.

இவ்வாறு விடுதலைப் புலிகளின் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் தெரிவிக்கின்றனர்.

தேசிய எழுச்சிப் பேரவையின் பேராளர் சங்கம் நிகழ்வு கடந்த மாதம் 26.06.2004 அன்று மானிப்பாய் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. அதில் அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் தங்கன் கலந்து கொண்டு உரையாற்றினார்.

தமிழர்களின் ஒற்றுமையைச் சிதைத்து, பிரிவினை, பிளவுகளை ஏற்படுத்தி - தமிழ்த் தேசியத்தைப் பலவீனப்படுத்தி தமிழ்த் தேசியப் போராட்டத்தை நசுக்கும் திட்டங்களில் சிங்களப் பேரினவாத அரசுகள் ஈடுபட்டு வந்துள்ளமை இன்று அம்பமாகியுள்ளது.

கருணாவைப் பயன்படுத்தி தேசிய ஒற்றுமையைக் குலைக்கும் திட்டம் இன்று பிசுபிசுத்துப் போய் விட்டது.

எமது தாயகத்தை நாங்களே பெற்று நாமே ஆள வேண்டுமானால் நாம் ஒன்றுபட்டுள்ளோம். பலமாகவுள்ளோம் என்பதை உணர்த்த வேண்டும். விடுதலைப் புலிகள் தான் மக்கள், மக்கள் தான் புலிகள் என்பதை நிரூபிக்க வேண்டும் எனவும் உறுதியாகக் குறிப்பிட்டார்.

மேலும் சூழலை மாசுபடுத்தும் செயல்களை அரசும் அரச படைகளும் திட்டமிட்டு செய்து கொண்டிருக்கின்றன. பல லட்சக்கணக்கான மக்கள் வாழும் இம்மாவட்டத்தில் பல்வேறு கலாசார சீரழிவுகள், வளர்ந்து வரும் சமுதாயத்தைச் சிதைக்கும் செயற்பாடுகள் நடைபெறுகின்றன. இவை எமது தேசத்தை அழிவுப் பாதைக்குள் இட்டுச் செல்கின்றது. இவைகளை நீக்குவதற்கு விடுதலைப்புலிகள் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சமாதான காலத்தை சாதகமாக்கி தேசக் கட்டுமானக் காப்புக் காலமாக இதை எண்ணி நீங்கள் மக்கள் மத்தியில் சேவையாற்ற வேண்டும். பேச்சு மூலம் ஒரு நிலையான தீர்வு கிட்டுமானால் அதைத் தேசக் கட்டுமானத்தை மேற்கொள்ளும் காலமாக மாற்ற இப்போதே திட்டமிட வேண்டும். இவ்வாறு தங்கன் குறிப்பிட்டார்.

போருக்கான சூழல் கனிந்து வருவதான தோற்றம் ஒருபுறம். மறுபுறம் தேசக்கட்டுமானம் பற்றிய சிந்தனை. இருந்த இரு முரண்நிலை இணக்கப்பாட்டுக்கான உரிய சூழல் உருவாக்கப்படுமா? யுத்த கலாசாரத்திலிருந்து சமாதான கலாசாரம் நோக்கிய நகர்வுக்கான வாயில்கள் முழுவதுமாக திறக்கப்படும் பட்சத்தில் தான் நமக்கான வாழ்வு இருப்பு சாத்தியமாகும்.

அரசு, அரச படைகளுக்கு மற்றும் போர் வெறியர்களுக்கு இது புரியுமா?

இப்பத்திரிகை யுகம் பப்ளிகேசன்ஸ் சார்பில் மதுசூதனன் அவர்களால் ரெக்னோ பிரின்ட். வெள்ளவத்தையில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.